
Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

THINAKKATHIR WEEKLY


ஒளி - 01 - கதிர் - 333 25-03-2001 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள் - 16 விலை - ரூபா 10/=

நகையா!
22 கரட்டில் தெரிவு செய்ய
இன்றே நாடுங்கள்
சரண்யா ஜுவலர்ஸ்
பிரதான வீதி
கல்வாஞ்சிகுடி
தொ. பேசி 065 . 50071



02




அறிவுள்ள தமிழர் இன்று தம் பிள்ளைகளுக்கு 04




தமிழர் தனியரசின் மீள் நிறுவலைத் தூண்டும் 05


# வடக்கு கிழக்கில் 90 வீதமானோர் வறுமையில் வாடுகின்றனர்

## ஆசிய வளர்ச்சி வங்கி தகவல்

(நமது நிருபர்)

**வடக்கு கிழக்கில் 70~90சத வீதமான மக்கள் வறுமையில் வாழ்கின்றனர். இந்த போர் முடிவுக்கு கொண்டு வந்து அபிவிருத்திகாண வேண்டிய ஒரு அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளதாக ஆசிய வளர்ச்சி வங்கி தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக அது வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இலங்கையில் கடந்த 18 வருடகாலமாக தொடரும் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டால் மாத்திரமே நாட்டில் அபிவிருத்தி காணதாகவே அதற்கான திட்டங்களை மேற் கொள்ள வேண்டும்.

இரண்டாம் உலகப் போர் முடிவடைவதற்கு இரு ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஐரோப் பியா பற்றிய திட்டம் வகுக்கப்பட்டு ...டது.

தற்போது அரசு போரை ...த்தி பொருளாதாரத்தை அபிவி

(16ம் பக்கம் பார்க்க)




ஜனாதிபதி சந்திரிகா பிரிட்டிஷ் பிரதமருடன் விரிவான பேச்சு

செய்தி

அம்மா 'சும்மா போகல்ல தடைக்கு நன்றியும் சொல் லிப் போட்டு படைக்கு ஆயுத மும் வாங்கத்தான்......

## வடக்கு கிழக்கில் புதிதாக 3000 ஆசிரியர்களுக்கு நியமனம்

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு புதிதாக 3000ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. நேற்று முன்தினம் 22.03.2001 கௌரவ ஆளுனர் அலுவலகத்தில் நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாடு விளையாட்டு துறை அமைச்சுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் இம முடிவு தெரிவிக்கப்பட்டது. மாகாண

(16ம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் வெளியேற்றத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணி!

(திருமலை நிருபர்)

திருகோணமலை லிங்க நகர் குடியேற்றப் பகுதியிலிருந்து தமிழ்மக்கள் வெளியேற்றப்படுவதைக் கண்டித்து நாளை ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.இதுதொடர்பான பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் எமது சொந்த மண்ணான இலிங்கநகர் பூமியிலிருந்து அனைத்தையும் இழந்த

(16ம் பக்கம் பார்க்க)


வெளிநாட்டு வேலை வாய்ப்பு

சவூதி அரேபியாவில்

ஆண் களுக்கு:-

| | SR |
|---|---|
| ஓட்டோ மெக்கானிக் | 800 |
| ஓட்டோ எலக்ரீஷியன் | 800 |
| ஓட்டோ பெயின்ரர் | 800 |
| ஓட்டோ ரிங்கர் | 800 |
| பாமர் , | 600 |
| பிளம்பர் | 800 |

தங்குமிடம், மருத்துவம் இலவசம்

உடனடிப் பயணம்

நியூபாஹிம் என்டர் பிரைஸஸ்

LL No 736

283/1, மெயின் வீதி, புறக்கோட்டை

காத்தான்குடியில் டிக்கட்டுக்களுக்கு

151/1, 151/2 பிரதானவீதி காத்தான்குடி-02

தொ.பே:065-47090, ADVT.







ஹற்றன் நஷனல் வங்கி மட்டக்களப்புக் கிளையில் கடந்த மார்ச் மாதம் 21ம் திகதி புதன் கிழமை "ரண்காசிய வாசிய" சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற மட்டக்களப்புக் கிளையைச் சேர்ந்த வாடிக்கையாளர் ஒருவருக்குத் தங்க நாணயப் பரிசு ஒன்றினை ஹற்றன் நஷனல் வங்கியின் ஆறாவது பிராந்திய முகாமையாளர் வழங்கி வைப்பதையும் அத்துடன் நடைபெற்று முடிந்த தொலைக்காட்சிப் பெட்டிக்கான சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற வாடிக்கையாளருக்குரிய தொலைக்காட்சிப் பெட்டியை ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் வழங்கி வைப்பதையும் ஆட்டோ சாரதிகளுக்காக நடத்தப்பட்ட விசேட சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற ஆட்டோ சாரதிக்கு ரூபா 2000 வைப்புச் செய்யப்பட்ட வங்கிப் புத்தகத்தை மட்டக்களப்பு வங்கிக் கிளையின் முகாமையாளர் வழங்கி வைப்பதையும் படத்தில் காணலாம்.


பத்தும் விமன 2001

''ரண்காசிய வாசிய'' சீட்டிழுப்பில் ஒவ்வொரு வேலை நாட்களிலும் ஆறு வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு ஆறு தங்க நாணயங்கள் வழங்கப்படுகின்றன. நடைமுறைக் கணக்கில் மாதம் முழுவதும் குறைந்தது 5000 ரூபாவையோ அல்லது சேமிப்புக் கணக்கில் மாதம் முழுவதும் குறைந்தது 10,000 ரூபாவையோ பேணி வரும் வாடிக்கையாளர்கள் இச் சீட்டிழுப் பிற்குத் தகுதி பெறுவர்.

2001 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட சீட்டிழுப்பில் மொத்தப் பரிசுத் தொகையாக 540 மில்லியன் பெறுமதியான பரிசுகள் வெல்லப்படவுள்ளன.

எனவே அதிகம் பேருக்கு, அதிகம் பரிசுகள், அதிக இடங் களில், அதிக சீட்டிழுப்புக்கள் மூலம் வெல் வதற்கு அதிக வாய்ப்புக்கள் காத்திருக்கி ன்றன.

எனவேநீங்களும் ஹற்றன் நஷனல் வங்கியில் கணக்கு ஒன்றினை ஆரம்பித்து வெற்றியாளராகுங்கள். ADVT

தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk

## பிந்துனுவெவ இனியும் தேவையா?

இலங்கை ஒரு அழகான தீவு, ஆசியாவின் சுவிட்சர்லாந்தாக இது மிளிர வேண்டுமென்று கனவு கண்டவர்களுமுண்டு.

இன்று இலங்கை ஒரு விசித்திரமான தீவாக விளங்குகின்றது. ஜனநாயகம் பற்றிப் பேசுபவர்களெல்லாம் ஜனநாயகத்துக்கு விரோதமாகவே செயல்படுகின்றனர். பயங்கரவாதம் பற்றிப் பிரசாரம் செய்பவர்கள் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து வீட்டு அதைத் தேசியப்பாதுகாப்பு என்று பறை சாற்றுகின்றனர்.

ஜனநாயகத்தில் அவசர காலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு அதன் கீழ் பல சட்டவிதிகள் கொண்டு வந்து செயல்படுத்தப் படுகின்றன. இதேசமயம் பயங்கரவாதத் தடைச்சட்டமென்றும் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அவசரகால சட்டவிதிகளின் கீழ் எவரையும் எந்நேரமும் கைது செய்து ஒன்பது மாதம் வரை தடுத்து வைத்திருக்கலாம். பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்வதானால் குறிப்பிட்ட சில பொலிஸ் அதிகாரிகளே கைது செய்யலாம்.

இதனால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்து சில மாதங்கள் வைத்திருந்த பின்னர் நீதிமன்றில் அவர்களைக் கொண்டு போய் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரணை எதுவுமின்றி ஆண்டுக் கணக்கில் தடுத்து வைக்கப்படு கின்றனர்.

வசதியுற்றவர்களும் வசதியற்றவர்களாக உள்ள விதவைகளும் கடன்பட்டு நீதிமன்றம் சென்று ஓரளவு நிவாரணம் பெறுகின்றனர்.

எந்தக் குற்றச்சாட்டுமில்லாமல் பலர் இன்னமும் எக்காரணமுமின்றி சித்திரவதைகளுக்குள்ளாகிச் சிறைகளில் ஆண்டுக்கணக்காகத் தவம் கிடக்கின்றனர்.

இப்பொழுது இப்படிச் சிறைகளில் வாடுபவர் மீது வழக்குத் தொடர முடியாதவர்களுக்கு புனர்வாழ்வளிக்க சட்டமா அதிபர் திணைக்களம் முடிவு செய்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இம்முடிவில் நீதியமைச்சர் திருப்தியடையவில்லையென்றும் குற்றச் சாட்டுச் சுமத்தி வழக்குத் தொடர முடியாத வர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நீதியமைச்சர் கருதுவதாகவும் அதே செய்தி கூறுகிறது.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் நடந்த படுகொலைகளின் பின்னும் தமிழ் இளைஞர்களுக்கு இன்றும் புனர்வாழ்வு முகாம் தேவையா?

குற்றச்சாட்டு எதுவுமில்லையெனில் எதற்காகச் சிறைகளில் அவர்களை வைத்து வதைக்க வேண்டும்?

இந்தியாவில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் விசாரணை எதுவுமில்லாமல் சிறை வைத்திருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பளித்திருக்கிறது.

எதெற்கெல்லாமோ இந்தியாவைப் பின்பற்றும் இலங்கை இதிலும் பின்பற்றினால் என்ன?

# முல்லைக் கடலில் மூண்டபோர!

## தற்காப்புத் தாக்குதலில் புலிகள் சாதனை

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் கடற்கலங்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்!

போர்நிறுத்தக் காலத்தில் மரபைமீறாத புலிகள் கடற்படையினர் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக தற்பாதுகாப்புத் தாக்குதல் நடத்தி புதிய சாதனை படைத்துள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 24ம் திகதி தொடக்கம் விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தியிருந்த ஒரு மாதகால போர்நிறுத்தம் தற்போது ஏப்ரல் 24ம்



திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போர்நிறுத்தக் காலத்துக்குள் புலிகளின் நிலைகள் மீதும், புலிகளின் படை அணிகள் மீதும் தாக்குதல் நடத்தி விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த மரபை மீறவைக்கும் செயல்களிலேயே படையினர் ஈடுபட்டு வந்ததைக் கடந்த மூன்று மாதகால நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

எனினும் விடுதலைப் புலிகள் தமது போர்மரபை மீறாது நிதானத்துடன் நடந்து கொள்வதுடன் தற்காப்புத் தாக்குதலை மட்டும் நடத்தி வருவது சிறப்புக்குரியது.

இந்த வகையில் மார்ச் 21ம் திகதி முல்லைக் கடலில் கடற்புலிகள் நடத்திய தற்காப்புத் தாக்குதல் புலிகளின் வரலாற்றில் புதிய சரித்திரம் படைத்துள்ளது.

கடற்புலிகளின் தாக்குதலுக்கு கடற்படைக் கலங்கள் இலக்காகத் தொடங்கியதைத் தொடர்ந்து இலங்கை அரசின் கடற்படைக் கட்டமைப்பு நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேல், ரஷ்யா, இத்தாலி, சீனா போன்ற நாடுகளிலிருந்து அதிநவீன விசைப்படகுகள், டோராப்படகுகள் என்பன பலகோடி ரூபாய்ப் பணத்தைக் கொடுத்துக் கொள்வனவு செய்யப்பட்டு கடற் பாதுகாப்புக்குப் பயன்பட்டது.

யாழ்குடா நாட்டிற்கான இராணுவத்துக்குரிய விநியோக மார்க்கங்களான தரை, வான் போக்குவரத்துக்கள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்ததைத் தொடர்ந்து. இலங்கை அரசுக்குக் கைகொடுக்கும் ஒரே விநியோக மார்க்கம் கடற் போக்குவரத்தே ஆகும். இந்த கடற்போக்குவரத்தில் கடற்கரும் புலிகள் மேற்கொள்ளும் கடற்கண்ணி, தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் சில சமயங்களில் விநியோக மார்க்கத்தைச் சீர்குலைத்து கடற்போக்குவரத்தையும் துண்டாடச் செய்கிறது.

இந்த நிலையில் எதிரிகளின் படகுகளை இனங்காணக் கூடிய படகுகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் நவீனரக ஆயுதங்களும் பொருத்தப்பட்டு ரோந்து நடவடிக்கைகள் அமர்க்களமாக நடந்து வரும் வேளையில் கடந்த வருடம் யூன் 26ல் "எம்.வி.மெஸ்ஸஉகண" என்ற கடற்கப்பல் தாக்கி அழிக்கப்பட்டது அதன் பின் ஒக்டோபர் மாதம் 22ம் திகதி திருமலை துறைமுக உட்பகுதியில் கடற்படையினரின் கப்பல்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதல் கடற்படையின் பலத்தைக் கேள்விக்குறியாக்கியது.

சம்பவதினம் அதிகாலை 5:30 மணிக்கு வழமைபோல் கடற்படையினர் சரக்குக் கப்பல் ஒன்றுக்குப் பாதுகாப்பு வேலிகளைத் திறந்த சமயம் எதிர்பாராமல் புகுந்த மூன்று கடற்கரும் புலிகள் தாக்குதல் நடத்திய சமயம் கடற்புலிகளின் படகுகளும் துறைமுகப் பகுதிக்கு வந்து தாக்குதல் நடத்தின. இந்த சமரினால் கடற்படை பாரிய பின்னடைவைச் சந்தித்தது.

இதனை நிவர்த்திக்கும் வகையில்

**அங்கதன்**

இந்தியாவின் காலில் போய்விழுந்த இலங்கை அரசுக்கு கடற் கலங்களை வழங்க இந்திய அரசு முன்வந்தது.


இரண்டு ஹெலிகளை இறக்கக் கூடிய கப்பல்களை இந்தியா வழங்கியது.

நூற்றி ஒரு மீற்றர் நீளமான ஹெலிபாட் ஓ.பி.வி என அழைக்கப்படும் கப்பல்களே வழங்கப்பட்டன அந்தக் கப்பல் 20மி.மீற்றர், 40 மில்லிமீற்றர் பீரங்கிகளைக் கொண்டிருக்கும் கப்பலாகும்.

டோராப் படகுகளைவிட விசை குறைந்த இந்தக் கப்பல்கள் கடற் புலிகளைக் கண்காணித்து அவர்களின் தாக்குதலை முறியடிக்கப் பயன்பட்டன

எனினும் மார்ச் 21ம் திகதி நடத்திய தாக்குதல் இந்திய அரசு வழங்கிய ஓ.பி.விக்களின் பலத்தை முறியடித்து கடற்படை பலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

மார்ச் 21ம் திகதி முல்லைக் கடலில் தமது வழமையான ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த புலிகளின் கடற்கலங்களை கடற்படையினர் கண்டு



# கடற்படையினர் பாதுகாப்பு கேள்விக்குறி?



தாக்குதல் நடத்தினர்.

எனினும் வலிந்து சென்று தாக்குதல் நடத்தாது தற்காப்பு தாக்குதலில் புலிகள் ஈடுபட்டனர் இத் தாக்குதலில் இரு டோராப்படகுகள் புலிகளால் கைப்பற்றப்பட்டன அதில் இருந்த ஆயுதங்களைப் புலிகள் எடுத்த பின்னர் கப்பல்கள் நிர்மூலமாக்கப்பட்டன. அத்துடன் மற்றுமிரு டோராப் படகுகளும் சேதமாக்கப் பட்டன.அத்துடன் பதினொரு கடற்படையினர் பலியாகியுள்ளனர்.விடுதலைப் புலிகள் தரப்பிலும் மூவர் பலியாகினர்.

இத் தாக்குதலினால் கடற்படையினரின் கடற்போக்குவரத்து கேள்விக் குறியாகியுள்ளது. தற்போது புதிதாக வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்த நவீனரக ஆயுதங்களைப் புலிகளின் போர்நிறுத்தம் முடிவடைவதற்குள் யாழ் களமுனைக்கு அனுப்பி வைப்பதில் இராணுவத் தரப்பு கரிசனை காட்டி வருகிறது.

இந்த ஆயுதங்களை வழங்கும் கடற்போக்குவரத்து தற்போது புலிகள் நடத்திய தற்காப்புத் தாக்குதலால் தடைப்பட்டுள்ளது என்பதை உணரமுடியும்.



## சஞ்சயன் பக்கம்

# சிங்கள அரசின் இயல்பினை தமிழ் மக்கள் உலகறியச் செய்ய வேண்டும்......

அமெரிக்கத் தூதுவர் பதிலளித்திருக்கின்றார். லண்டனில் வெளியாகியிருக்கும் தமிழ் கார்டியன் என்னும் பத்திரிகை இவருடைய யாழ் விஜயத்தின்போதான உரையினைத் தனது தலையங்கத்தில் கண்டித்திருக்க, அதற்குத்தான் தனது பதிலை விளித்திருக்கின்றார். ஆனால் தனது அறிக்கையை இலங்கையின் எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பியதிலிருந்து இப்பதில் தனியே லண்டன் தமிழ் கார்டியனைக் குறித்து மட்டும் அனுப்பவில்லை என்பதுபுலனாகின்றது. அமெரிக்கத் தூதுவர் தனது நெருங்கிய நண்பர்கள் மத்தியில் தன்து உரை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய அதிருப்தி மிகுந்த ஆச்சரியத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரிவித்திருக்கின்றார். அமெரிக்க அரசாங்கத்தின் சார்பில் நான் தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிப்பதாகத்தானே கூறினேன், ஏன் இவ்வளவு எதிர்ப்பினை தமிழ் மக்கள் காட்டியிருக்கின்றனர் என்று குழம்பினாராம்.

அவர் கருத்துக்களை இப்போது வெளியாகியிருக்கும் அறிக்கையும் பிரதிபலிக்கின்றது. 1950களிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்ட வன்முறையையும் அவர்கள் வேற்றுமையாக நடத்தப்பட்டதையும் அறிவோம். தற்போதைய அ்ரசின் மனித உரிமைகள் தொடர்பான நடத்தையைப் பற்றியும் எங்களது 2000 ஆம் ஆண்டு அறிக்கையில் விமர்சித்திருக்கின்றோம். நாம் நிராகரித்தது தனிநாட்டுக் கோரிக்கையைத்தான். எனது வாதம் தமிழ் மற்றும் சிங்கள இனவாதிகளை சுட்டியே கூறப்பட்டது. இவர்கள் முழு நாடோ அல்லது அதன் ஒரு பகுதியோ ஒரு (தமது) இனத்துக்கே சொந்தமானது என்று வாதிடுகின்றனர். இது யதார்த்தத்துக்குப் புறம்பானதும் தீவிரவாதமான கொள்கையுமாகும் என்பதைத் திரும்பவும் வலியுறுத்துகின்றேன். பேச்சுவார்த்தைகளினூடு தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் திருப்தி செய்யலாம் என்று நான் நம்புகின்றேன். இந்தத் தீர்வு ஒரு அல்லது இரு அரசியல் அலகுகளை தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் ஏற்படுத்தலாம் என்று நினைக்கின்றேன் என்று இவ்வாறாக அவர் அறிக்கை நீளுகின்றது.

### உலக தமிழர்கள் அனைவருமே அதிருப்தி!

லண்டன் தமிழர் மட்டுமல்ல, இலங்கையிலுள்ள சகல தமிழ் மக்களும் அவர் உரையினையிட்டு அதிருப்தி தெரிவித்திருக்கின்றனர்.

**விற்பனைக்கு உண்டு**

மட்டக்களப்பு புனித அந்தோனியார் வீதியில் சகல வசதியுடன் கூடிய மாடி வீடும் கடையும் விற்பனைக்குண்டு

36, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

Advt. தொ.பே. 065-23322

இவ்வகையான மனமொத்த கருத்து எவ்வாறு தமிழ் கூறும் உலகெங்கும் சாத்தியமானது என்பதை அமெரிக்கத் தூதுவர் சிறிது சிந்திக்க வேண்டும். அப்படி அவர் என்ன கூறியதனால் இந்த முறையில் ஒட்டுமொத்தமாக தமழ் மக்கள் ஆட்சேபித்திருக்க முடியும்? இவர் தமிழர் உரிமைகளைப் பற்றிப் பேசினார்தான், ஆனால் அந்த உரிமைகளை நிலைநாட்ட ஆயுதப் போராட்டத்தினைக் கையேற்க அவர்களை நிர்ப்பந்தித்த வரலாற்றை அங்கீகரிக்க மறுத்துவிட்டார். இன்றும் இப்போதும் கூட அதிகாரப் பகிர்வுக்குத் தேவையான எந்தவித ஜனநாயகப் போக்குமற்ற சிங்கள அரசினை பேச்சுவார்த்தைகளில் எவ்விதம் எதிர்கொள்ளப் போகின்றோம் என்று கிலி கொண்டிருக்கும் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது,

அவர்களின் ஒரே நெம்புகோலான விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றும் அந்த இயக்கம் ஒருபோதும் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக வரமுடியாது என்றும் கூறிவிட்டார்.

வட-கிழக்குப் பிரதேசம் தமிழ் மக்களின் ஏகபோக வாசமாக இருக்கவேண்டுமென்று தமிழ் மக்களோ அல்லது அவர்களுடைய அரசியல் பிரதிநிதிகளோ என்றும் கோரியது



கிடையாது. தமிழ் மக்கள் பாதுகாப்போடும் சுய கௌரவத்தோடும் வாழ வழிவகுக்க, அவர்கள் அரசியல் அதிகாரத்தினை உத்தரவாதப்படுத்தும் அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றே அன்று தொட்டு இன்றுவரை கோரி வருகின்றோம். அந்த அரசியலமைப்பின் கீழ் சிங்களவரும் முஸ்லிம்களும் சமத்துவமாக வாழலாம். திரு ஆஷ்லி வில்ஸ் எங்கிருந்து தமது தகவல்களைத் திரட்டுகினாரோ தெரியவில்லை. நலின்டி சில்வாவிடமிருந்தா?

### உயர் பதவிகளுக்கு அரசியல் குடும்பத்தில் பிறக்க வேண்டும

இதேநேரம் சிங்கள நாட்டை எடுத்துக் கொண்டால் அங்கு பௌத்த, சிங்களவர்தாம் ஜனாதிபதியாக வ்ரலாம் என்று அவாகள் முடிந்த முடிவாக முடித்து வைத்திருக்கின்றார்கள். இப்போது பார்த்தால் வரவர பௌத்த சிங்களவராக மட்டும் இருந்தால் போதாது, அரசியல் குடும்பத்திலும் பிறந்தால்தான் உயர் பதவி கிட்டும் என்ற நிலைமை உருவாகிக்கொண்டு இருக்கின்றது. அந்த அதிகாரம் கடகடவென்று நீதித்துறை, பொலிஸ், பொது நிர்வாகம், தொடர்பு ஊடகம் எனத் தனது நகங்களைச் சகல துறைகளிலும் ஊடுருவ விட்டிருக்கின்றது. இன்று ஒரு பெண் பாலியல் பலாத்காரத்தக்கு உள்ளாகினால் அதனை விசாரிக்க வேண்டும் என ஜனாதிபதியே பொலிஸ் மா அதிபருக்குக் கட்டளையிடும் கோமாளிக் கூத்தே தென் பகுதியில் அரங்கேறுகின்றது. இந்த அளவில் ஒரு தனிநபரிடமே அதிகாரம் குவிக்கப்பட்டிருக்க, இலங்கையின் ஜனநாயகப் போக்கை மறுதலிக்கும், இனப்பிரச்சனைக்கான தீர்வினை வரவிடாது தடுக்கும் அந்தப் போக்கினைப் பற்றி மூச்சும் விடாது புலிகளின் பயங்கரவாதத்தினைப் பற்றிப் பேசுகின்றார் அமெரிக்கத் தூதுவர். எது மூலம் எது விளைவு என்று சீர்தூக்கிப் பாாக்க அவருக்குத் தெரியாமல் போயிற்றே.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காகத்தான் இன்று வட-கிழக்கிலுள்ள தமிழ் மக்களெல்லாம் பொங்கு தமிழ் என்னும் போராட்டத்தினை மேற்கொண்டிருக்கின்றார்கள். தமக்கேயென தனியாக நாடு வேண்டும் என்று கோரியிருந்தால் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு தந்திருப்பார்களா? இப்படி சமாதானப் பாதைக்கு ஏங்கும் தமிழ் மக்களுக்கு அரசாங்கம் செய்த கைமாறு, விடுதலைப் புலிகளைத் தடை செய்ய நாட்டுக்கு நாடு வலம் வந்து கோரிக்கை செய்து அழுத்தம் கொடுத்ததாகும். அவர்களுக்கு நன்றாகத் தெரியும், இது தமிழ் மக்களைத் தாக்கும் நடவடிக்கையென்று. பிரிட்டன் தடை செய்தபோது அமைச்சர் கதிர்காமர் தமிழ் மக்களுக்கு ஆறுதல் சொன்னாரே. அவ்வாறாகில், தமிழ் மக்களின் இந்த அற்ப சொற்ப விருப்பங்களையே சட்டை செய்யாது விடுதலைப் புலிகளை நிர்மூலமாக்கும் நடவடிக்கை எடுக்கும் இவ்வரசாங்கத்திடமிருந்து எவ்வகையான நீதியான தீர்வினை எதிர்பார்க்கலாம்? அல்லது அவர்கள் முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளில் தன்னும் நம்பிக்கை வைத்துப் பங்குபற்றத்தான் முடியுமா?

### சகலருக்கும் சகலதிலும் சரிசமானம் வேண்டும் .

திரு. ஆஷ்லி வில்ஸ் அவர்கள் உண்மையாகவே விளக்கம் போதாமையால் குழம்பியிருந்தால் அக்குழப்பத்தினைத் தீர்ப்பதற்கு அவருக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். தமிழ் மக்கள் போராடுவது, தமிழீழமாக இருந்தாலென்ன இல்லாவிட்டால் என்ன, யாரும் ஜனாதிபதியாகவோ நிதியமைச்சராகவோ அல்லது நகராட்சி முதல்வராகவோ வரக்கூடிய அரசியலமைப்பிற்கே. இங்கு ஆற்றலுக்கும் திறமைக்கும்தான் முதலிடம் கொடுக்கப்படும். அபிவிருத்தி வாய்ப்புக்கள் சகலருக்கும் சமமாகக் கிட்டும். இது ஒன்றுபட்ட இலங்கைத் திருநாட்டில் ஏற்பட்டால் குதூகலிக்கும் முதல் மக்கள் தமிழ் மக்களாகத்தான் இருப்பார்கள். ஆனால் அவ்வாறு கிடைக்காவிட்டால்...? அமெரிக்க அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வினைக் கொடுக்க முடியுமா? அதற்கு அவர்கள் தரும் உத்தரவாதம்தான் என்ன?

அமெரிக்கத் தூதுவரின் உரையினைப் பற்றி தாராளவாதக் கொள்கையுடைய சில சிங்களவர்களிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. அவர்கள்கூட, அது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்குத் தரும் ஆதரவினைக் கண்டிக்கும் பேச்சாகவே கண்டனர். சிங்களவர்கள்கூட இதை தமிழ் எதிர்ப்பு அறிக்கையாகப் பாாப்பதைப் பற்றி அமெரிக்கத் தூதுவர் என்ன சொல்வாரோ தெரியவில்லை. என்னதான் நடந்தாலும் உலக நாடுகள் அரசினையும் அதிகாரக் கட்டமைப்பக்களையுமே ஆதரிப்பன என்பதை இவ் வகையான அறிக்கைகளுடாகவும் அவர்களின் பயங்கரவாதத் தடைச் சட்டங்களினூடு கண்கூடாகக் காணலாம். ஆகவே இந்தப் பின்னணியில், சிங்கள அரசாங்கம் எத்தன்மையது என்பதை ஐயமற நிருபிக்கும் பொறுப்பும் தமிழ் மக்கள் கையிலேயே விடப்பட்டுள்ளது. இங்குதான் விடுதலைப்புலிகள் மூன்றாவது தடவையாக நீடித்திருக்கும் யுத்த நிறுத்தத்தின் விளக்கம் இருக்கின்றது.

யுத்த நிறுத்தத்தினை நீடித்து வெளியிட்டிருக்கும் தமது அறிக்கையில், ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தினைத் தாம் பிரகடனப்படுத்திய காலகட்டத்தில், சந்திரிகா எவ்வாறு மேற்கு நாடுகளுக்கு விஜயம் செய்து தம்மை ஓரங்கட்டப் பார்க்கிறார் என்பதும், எவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவம் புதிய பொம்பர்களையும் இராணுவத் தளபாடங்களையும் கொள்வனவு செய்திருக் கின்றார்களென்றும், அதனை எவ்வாறு கடந்த மாதங்களில் பொது மக்களுக்கு எதிராகப் பிரயோகித்திருக கின்றார்களென்றும் விவரமாகத் தரப்பட்டிருக்கின்றது. இது 1995ம் ஆண்டின் அவர்கள் நிலைப்பாட்டிலிருந்து சற்று வேறுபடுவதைக் காண்கின்றோம். அன்று சிங்கள மக்களுடனும் உலகத்தோருடனும் இடைவிடாது தொடர்பாடுவதில் ஆர்வம் இருக்கவில்லை. இன்று அதன் முக்கியத்துவத்தினை அவர்கள் உணர்ந்திருக்கின்றார்கள். இது விடுதலைப் புலிகளின் அரசியல் முதிர்ச்சியையே காண்பிக்கின்றது.

◆◆◆◆

**1ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு
1981 - 01 - ௨௧



உதிர்வு
௨௦௦௦ - 03 - ௨௪

**நடேசராஜா கரிச்சந்திரன**

[அ ஈஸ்]

*இவர் ஆரையம்பதியைப் பிறப்பிடமாகவும் செல்வாநகரை வசிப்பிடமாகவும் கொண்டவராவார்.*

வாழ்க்கையில் வசந்தமென வாசல் தேடி வந்தவனே
வாழ்ந்தது போதுமென்றோ வானுலகு சென்றுவிட்டாய்
உற்ற துணை பெற்ற அன்னை
உடன் பிறந்தோர் ஏங்கி நிற்க
நீ சென்ற மாயமென்ன?
நீங்காதையா உன் நினைவலைகள்
எம் நெஞ்சைவிட்டு என்றென்றும்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்
தாய், தந்தை, தம்பி (கிசோ, சுசி)

தகவல்- என்.சுசிகரன்
ஆரையம்பதி

# அறிவுள்ள தமிழர் இன்று தம் பிள்ளைகளுக்கு அர்த்தமற்ற பெயர் சூட்டும் அறிவின்மை

தமிழ் சமூகம் ஒரு படித்த சமூகம் என்ற கருத்து பலரிடம் இன்று கூடக் காணப்படுகிறது. விஞ்ஞானம், கணிதம், மருத்துவம் ஆகிய துறைகளில் தமிழர் விண்ணர்கள்; அவர்களிடம் தொழில்நுட்பத் திறன் உண்டு எனச் சிங்களப் புத்திஜீவிகள் கூறிப் பயந்ததுண்டு. ஒரு காலத்தில் அவ்வச்சம் எவ்வாறு சிங்களப் பேரினவாத அரசியலில் வெளிப்பட்டது என்பதெல்லாம் நீங்கள் அறிந்ததே.

## முட்டாள்தனமும் மூடநம்பிக்கையும்

என்னைப் பொறுத்தவரையில் இதெல்லாம் பழங்கதை. தமிழ்ச் சமூகம் இப்போது மகா முட்டாள்த்தனங்களும் மூடநம்பிக்கைகளும் நிறைந்த ஒரு சமூகமாக மாறிவிட்டது. பகுத்தறிவும் விஞ்ஞான பூர்வமான சிந்தனைகளும் தமிழர் மத்தியில் மிக மிக அருகிவிட்டன.

நாம் வேறெங்கும் போகத் தேவையில்லை; தமிழர் தமது பிள்ளைகளுக்கு இப்போது பெயர் வைக்கும் முறைகளைச் சற்று மேலோட்டமாகப் பார்த்தாலும் அவர்களிடையில் இன்று வேகமாகப் புரையோடிக் கொண்டிருக்கும் பேதமையும் கேவலமான மடமையும் தெளிவாகப் புரியும். இக்கட்டுரையில் நான் எடுத்தாண்டுள்ள உதாரணங்கள் எனது நண்பர்கள், அன்பர்கள், உறவுகள் பற்றியவையே. அவர்களிடம் சொன்னவற்றையே இங்கும் மீள்வலியுறுத்துகின்றேன்.

ஒரு படித்த இளம். தமிழ்த் தம்பதி: அண்மையில் பிறந்த தமது மகனுக்கு வைத்த பெயர் அஜயகுமார். 'இளைய தளபதி' விஜய், இந்திச் சினிமாவில் வரக்கூடிய 'அஜய்' ஆகியவற்றை மனதிற் கொண்டு அவர்கள் அப்பெயரிட்டிருக்கலாம். இத தம்பதியின் உறவினர் ஒருவர் சமஸ்கிருத மொழியைக் கற்ற பேராசிரியர். அவர் அஜயகுமாரின் த்ந்தையை அழைத்துப் ப்க்குவமாக "உமது மகனின் பெயரை மாற்றினால் என்ன தம்பி?" என விளக்கத்தைக் கூறினார். சமஸ்கிருதத்தில் அஜயகுமார் என்றால் ஆட்டின் மகன் என்று பொருள்.

இன்னொரு நண்பர். அவரது குழந்தையின் பெயர் சுவஸ்திக்கா. சமஸ்கிருதத்தில் இந்து மதத்தைக் குறிப்பிடும் சின்னம் அது. ஆனால் அதையே ஜேர்மன் நாசிகள் ஆரிய மேலாதிக்கத்தின் குறியீடாக கொண்டனர். ஹிற்லரின் நாசிப்படைகள் அச்சின்னத்தை அணிந்தன ஐரோப்பாவின் மேற்கில் சுவஸ்திக்கா என்பது நாசிசப்படுகொலைகளின் சின்னமாயிற்று. இன்றும் ஐரோப்பாவின் பல நாடுகளில் தனியாக மாட்டுப்படும் தமிழர்களை நையப்புடைப்பவர்களும், ஜேர்மனியில் சில தமிழர்களை உயிரோடு கொழுத்தியவர்களுமாகிய நவ நாசிகள் (NEO NAZIS) பெருமையுடன் அணிந்து திரிவதும் சுவஸ்திகா சின்னத்தையே. "உமது மகளை மேற்கு நாடுகளுக்கு என்றேனும் அனுப்பும் எண்ணம் உமக்கில்லையெனில் இப்பெயரை நீர் மாற்றத் தேவையில்லை என" அவரிடம் நானும் எனது நண்பர் ஒருவரும் கூறினோம். சுவஸ்திகாவின் தந்தை ஒரு ஆய்வாளர். படித்தவர். குழந்தையின் பெயரை மாற்றிவிட்டார்.

இன்னொரு பெண் குழந்தை. அதன் பெயர் கஜனி. சமஸ்கிருதத்தில் கஜ எனில் யானை என்பதை வைத்துக் கொண்டு இடப்பட்ட பெயராக இருக்கலாம் என நினைக்கிறேன். ஆனாலும் அது இந்தியாவிற்குப் படையெடுத்த மகமதிய மன்னனின் பெயர் என்பது கஜனியின் பெற்றோருக்குத் தெரிந்திருக்கவில்லை போலும். (இரு வரும் ஆசிரியர்கள்) இந்தியா விலுள்ள இந்துத் தீவிரவாதிகளுக்கு கஜனி (Mohammed 0f Gazzini)எனும் பெயரைக் கேட்டால் குரோதம் பொங்கும் என்பதையும் நல்ல இந்துக்களாகிய அப்பெற்றோர் அறியவில்லை.

அநாமிகா. இது படித்த இரு பெற்றோர் சிந்தித்து வைத்த பெயர். இந் நாமத்தில் தவறு ஏதும் இல்லை. பெயர் அற்றவள் என்பது அதன் பொருள். ஒரு பையனின் பெயர் கோகு. சமஸ்கிருதத்தில் இதன் பொருள் கழுதை. கோகுவின் பெற்றோருக்கு ஆலோசனை வழங்கிய சோதிடரின் திருகுதாளமும் அவர்களுடைய அறிவின்மையாலும் அப்பையனுக்கு வந்த வினை என எண்ணுகின்றேன். இது தமிழர் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக வடமொழிப் பெயர்களைத் தமது குழந்தைகளுக்கு இட்டு வந்துள்ளனர். அவற்றில் பல இன்று சமஸ்கிருத 'நாமங்கள்' என அறியப் படாமலேயே தமிழரிடையில் வழங்கி வருகின்றன. சுப்பிரமணியம், தரும் லிங்கம், கணேசன், கருணைரெத்தினம் எனப்பல நூற்றுக் கணக்கான பெயர்கள் 'வடவெழுத்து ஓரீ ஈ" எனும் தொல்காப்பிய விதியின் படி தமிழ் வடிவம் பெற்றவையாகும். மேலும் தமிழெனக் கருதப்படும் பெயர்கள் பல தமது சமஸ்கிருத இலக்கண வடிவம் மாறாது நிலவி வருகின்றன. உதாரணமாக மங்களேஸ்வரி, பரமேஸ்வரி, மகேந்திரன் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இவை சமஸ்கிருத மொழிக்கு மட்டுமே பிரத்தியேகமான விசர்க்கம்(Visarga) எனும் புணர்ச்சி விதிக்கமைய எழுந்த ஒட்டுப் பெயர்களாகும். (மங்கள + ஈஸ்வரி, மகா + இந்திரன்) ஆனால் இவைபோல மிக நீண்ட காலமாக தமிழரினிடையில் வழங்கி வரும் பெயர்களுக்கெல்லாம் சீரிய பொருளுண்டு. (தருமரத்தினம் = தருமம் செய்வதில் இரத்தினம் போன்றவர் அல்லது தருமத்திற்கு இரத்தினமானவர்) அல்லது சமஸ்கிருத இதிகாச, புராண மரபுகளிலிருந்து பெறப்பட்டவையாக அப்பெயர்கள் அமைந்தன(அகல்யா, பார்த்திபன், இவ்வாறாக)

சுருக்கமாகச் சொல்வதானால் இவை யாவும் சமஸ்கிருத மத, காவிய, புவியியல் (வைசாலி) புராண மரபுகளின்

**டி.சிவராம்**

அடிப்படையில் அல்லது தர்க்க ரீதியாகப் பொருள் தரக்கூடிய சொல்லிணைப்புகளால் (மங்களேஸ்வரி, நவரட்ணம் என) ஆன பெயர்களாகும்.

ஆன்ால் தமிழ்ப் பெற்றோர் இன்று தமது குழந்தைகளுக்கு வைக்கும் சமஸ்கிருதப் பாணிப் பெயர்கள் மரபு, தர்க்கம், நியாயம் என்பவை எவற்றின் பாற படாதவையாகவும் காணப்படுகின்றன. அல்லது கேலித்தன்மான கவலைக்கிடமான பொருள் தருபவையாக இருக்கின்றன.

## வடமொழிப்பெயரிடும் மரபை எதிர்த்து

தமிழரிற்கிடையிற் காணப்படும் வடமொழிப் பெயரிடும் மரபை எதிர்த்துக் கிளம்பிய தமிழ்த் தேசியப்பற்றாளர் தமது பிள்ளைகளுக்கு இட்ட பெயர்களைப் பற்றியும், அவர்கள் எங்ஙனம் தமது சமஸ்கிருத மரபுப் பெயர்களையே மாற்றித் தூய தமிழ்ப் பெயர்களைச் சூட்டிக் கொண்டனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். தனித் தமிழ் இயக்கத்தின் தந்தைக்கு அவரது பெற்றோர் வைத்த பெயர் விருத்தாச்சலம். ஆரியத்தின் வருகையால் தமிழருக்கு அழிவுகள் ஏற்பட்டன, தமிழரின் இழிநிலைக்கு வடமொழி யாதிக்கமே காரணம் எனப் பேசிய அவர் தமது கொள்கைக்கேற்ப விருத்தாசலம் என்ற தமது சமஸ்கிருதப் பெயரை நிராகரித்து அப் பெயரின் நேரடித் தமிழ் மொழிபெயர்ப்பாகிய மறைமலை என்பதை தனக்குச் சூட்டிக் கொண்டார். (அது பின்னர் மறைமலையடிகள் ஆயிற்று) இது போல வடமொழியிற் பாண்டித்தியம் பெற்றிருந்தும் தமிழ் மீது கொண்ட அன்பால் பிராமணரான சூரிய நாராயண சாஸ்திரி தமது பெயரை பரிதிமாற்கலைஞர் என மாற்றிக் கொண்டார்(சூரியன-பரிதி; நாராயணன்-மால்; சாஸ்திரி-கலைஞர்) இவர்கள் தமது சமஸ்கிருதப் பெயர்களை சொல்லுக்குச் சொல் தமிழாக்கி பெயர் மாற்றிக் கொண்டவர்கள். தமக்குத் தமது பெற்றோர் இட்ட சமஸ்கிருதப் பெயர்களை முற்றாகவே துறந்து நற்றமிழ்ப் பெயர்களைச் சூட்டிக் கொண்ட தமிழ்த் தேசிவாதிகள் பலர். திராவிட முன்னேற்றக்கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவீராகிய நாராயணசாமி தமது பெயரை நெடுஞ்செழியன் என மாற்றிக் கொண்டார் இது போல அறிஞர் அண்ணாதுரையின் பின் 50களிலும், 60களிலும் திரண்ட ஆயிரக் கணக்கான தமிழ இளைஞர்கள் தமது சமஸ்கிருத மரபுப் பெயர்களைத் தேடிச் சூடிக் கொண்டனர் பேராசிரியர் அன்பழகன், மதியழகன், தமிழ்க்குடிமகன், சிற்றரசு போன்றவர்கள் இவ்வாறு தமது பெயர்களை தூய தமிழாக்கிக் கொண்டவர்களில் முக்கியமானவர்கள் ஆயினும் இவர்களையொட்டி வழிகாட்டியாக இருந்த கலைஞர் கருணாநிதி தனது சமஸ்கிருதப் பெயரை தமிழுக்கு மாற்றவில்லை என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். தமிழ்த் தேசியத்தால் ஈர்க்கப்பட்டு இலங்கையிலும் பலர் தமது பெயர்களை தூயதமிழப் பெயர்களாக மாற்றினர். சோமசுந்தரப் புலவரின் மகன் பண்டிதர் சோ. பாலசுப்பிரமணியம் தமது பெயரை இளமுருகனார் என மாற்றிக் கொண்டார். வித்துவான் வேந்தனார், மட்டக்களப்பில் முத்தழகு போன்றவர்களும் இங்ஙனம் தூயதமிழை அவாவியவர்களே. இக்காலகட்டத்தில் ஏற்பட்ட தமிழ்த் தேசிய எழுச்சியின் காரணமாக பலர் தமது குழந்தைகளுக்கு தமிழ்ச் செல்வி, இளங்கோ, திருமாவளவன், அதியமான், திருநங்கை, ஔவை, இனியாள் எனப் பல நற்றமிழ்ப் பெயர்களை வைக்கலாயினர். கவிஞர் ருத்திரமூர்த்தி (மகாகவி) தமது மூன்று ஆண் குழந்தைகளுக்கும் பாண்டியன், சேரன், சோழன் எனப் பெயரிட்டார்

(தொடரும்)

---

**மனைவி:-** புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் செல்லத் தடையாமே...
**கணவன்:** அங்காலப்பகுதி அரச நிருவாகத்தில் இல்லையென்று ஒப்புக், கொள்ளுறாங்கபோல.
**மனைவி:** அதுதான் கன்னன்குடா மகாவித்தியாலயு விளையாட்டுப் போட்டிக்கு சிறப்பு அதிதியாக சென்ற வலயக்கல்விப் பணிப்பாளரை விடாம தடுத்துப் போட்டாங்க.
**கணவன் :** அது மட்டுமல்ல. ஆயித்தியமலை தேவாலயத்திற்கு பயிற்சி முகாமிற்கு சென்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர்களும் திருப்பி அனுப்பிப் போட்டாங்க.
**மனைவி :-** இப்படி தொடர்ந்து தடுக்கிறதால என்னத்தையாம் சாதிக்கப் போறாங்க.
**கணவன் :-** இதில சாதிக்கிறதுக்கு ஒன்றுமில்லை. பாதிக்கிற நம்மட சனம்தான்.
**மனைவி :-** அப்படியெண்டா அங்கால உள்ள அரசாங்க காரியாலயம், பாடசாலையெல்லாம் மூடிவிடப்போறாங்களாக்கும்.
**கணவன் :-** எல்லாம் அவன் செயல்.

— அம்பிகை —

## பல்லுச்சிரிப்பு

**நோயாளி** : ஒரு பல்லு பிடுங்க எவ்வளவு ஐயா?
**வைத்தியர்** : நூறு ரூபா
**நோயாளி** : 'சரி பிடுங்குங்க
**வைத்தியர்** : என்ன இது ஐம் பது ரூபா
**நோயாளி** : ஒரு பல்லுக்குத்தானே நூறுரூபா எனக்குப் பிடுங்கியது பாதிப்பல்லுதானே.
**வைத்தியர்** : ???

— அரியரன் —

## முசுப்பாத்திக்காதல்

**காதலன்:** நான் உனக்கு தாலி கட்டியே தீருவேன்
**காதலி:** தாலியை வேண்டுமானால் கட்டுங்க ஆனால் நான் உங்களை திருமணம் செய்ய மாட்டன்.
**காதலன் :** அப்ப ஆரச்செய்யப் போறயள்
**காதலி:** நான் காதலித்தது கலியாணம் முடிக்க இல்லையே......
**காதலன்:** அப்ப என்னத்துக்கு
**காதலி :** முசுப்பாத்திக்கு

— அரியரன் —

# தமிழர் தனியரசின் மீள் நிறுவலைத் தூண்டும் சமாதான சிலும்பல்கள்

துரை - மேகநாதன்

***''எமது நல்லெண்ணச் சமாதான முயற்சியைத் தொடர்ந்து உதாசீனம் செய்த சிங்கள ஆயுதப்படைகள் போர் நடவடிக்கைகளையும், விமானத் தாக்குதல்களையும் தீவிரப்படுத்தினால் விடுதலைப்புலிகள் இயக்கம் தனது தன்னிச்சையான போர் நிறுத்தத்தை ரத்துச் செய்ய நேரிடும்''***

இவ்வாறான கடும் எச்சரிக்கை தொனி நிறைந்த மிக நீண்ட அறிக்கையை தமிழ் மக்களின் ஒரே போராட்ட சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகள் வன்னியிலுள்ள தமது சர்வதேச செயலகத்திலிருந்து வியாழக்கிழமை விடுத்தமை கொழும்பை மட்டுமல்லாது சர்வதேச சமூகத்தையும் சிந்திக்கச்(?) செய்துள்ளது.

***''போராட்ட வடிவம் மாறினாலும் போராட்டம் மாறாது''*** என்பதில் தெளிவும் தீர்க்கதரிசனத்தன்மையும் நிறைந்த தமிழ்த் தேசியத் தலைமை தன்னுடைய பழுத்த பட்டறிவு மிக்க அரசியல்/போரியல் இராஜதந்திர அனுபவ வெளிப்பாடாக, கடந்த வருடம் டிசம்பர் 24ந் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் போர் ஓய்வை அறிவித்தது.

கிறிஸ்து பிறப்பு, ஆங்கிலப் புதுவருடம், தைத்திருநாள் முதலான விசேட தினங்கள் மீதான மக்களது பண்பாட்டு விழுமியக் கரிசனையைக் கருத்திற்கொண்டதாக மேற்படி யுத்த ஓய்வை அறிவித்திருந்தனர் விடுதலைப்புலிகள். சமாதானத்தின் பாலான தமது தீவிர அக்கறையை வெளிப்படுத்தி மூன்றாந்தரப்பான நோர்வே மத்தியஸ்தத்துடனான சமாதான முன் முயற்சிகளுக்கான நல்லெண்ண சூழ்நிலைகளைக் கட்டியெழுப்ப உதவியிருந்தனர்.

தமது இத்தகைய நல்லெண்ண வெளிப்பாடுகளுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கமும் தக்க பதில் நல்லெண்ண நடவடிக்கைகளை நல்க வேண்டுமென சமாதானத்திற்காகக் கொடுத்த வேண்டுதலை சிங்கள அரசு உடனேயே நிராகரித்ததுடன், ''இது ஏமாற்றுவித்தை'' என பரிகசித்ததுடன் தமது மிகப்பலமான எதிரியின் அமைதிபேணலைத் தமக்கேற்பத் தவறாக அர்த்தம் கற்பித்தவாறு ஈழத்தமிழரின் வர்த்தகப் பட்டினமான சாவகச்சேரியை தரைமட்டமாக்கியது. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பரப்பெங்கும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களையும் ஆக்கிரமிப்புக்களையும் நிகழ்த்தி சினமூட்டிய போதும் சமாதானத்திற்கான அனைத்தையும் தாங்கிக் கொண்டு மேலும் இரு மாதங்களுக்கு தமது போர் ஓய்வை நீடித்திருந்தனர்.

மார்கழி 24முதல் மார்ச் 24வரையுள்ள மாதத்திற்கு தமது போர் ஓய்வை நீடிப்பதாக அறிவித்துள்ள தமிழ் தரப்பினர் ஸ்ரீலங்கா அரசாங்கம் தொடர்ந்து கடும் போக்கைக் காட்டினால் தமது போர் ஓய்வை முறித்துக் கொள்ள தார்மீக உரிமை உண்டு என்றும் உள்ளனர்.

முதல் நாள் (புதன்) நடைபெற்ற முல்லைக் கடற்பரப்பில் டோரா அழிப்பு சிங்களக் கடற்படையினரின் வலிந்து தாக்குதலுக்கான தற்காப்பு சமராகவே அமைந்ததென்றும் இத் தாக்குதல் மூலம் ஸ்ரீலங்கா கூறுவது போல தாமொன்றும் பலவீனப்பட்டுப் போகவல்ல மிகப் பலமாகவே இருக்கிறோம் என்ற செய்தியைப் புலிகள் தந்திருப்பதாக நடுநிலை நோக்கர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகளின் இப்போர் ஓய்வு நீடிப்பை நோர்வே விசேட சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் வரவேற்றுள்ளார். மாறாக, பொது ஜன முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான தி.மு.ஜெயரத்ன இப்போர் ஓய்வை ''வழமையான பாணி''யில் நிராகரித்து உள்ளார். தமிழ்க்கட்சிகள் புலிகளது போர் ஓய்வை வரவேற்றுள்ள அதே வேளை ஸ்ரீலங்கா அரசின் போக்கு நாட்டை பேரழிவிற்கே இட்டுச் செல்லும் என்றும் கூறி உள்ளனர்.

நேற்று சனிக்கிழமை மாலை பதினொரு தமிழ்க்கட்சிகளும் கூடி இப் பின்னை களநிலைபரத்தை ஆராயவிருந்தன. அத்துடன், எதிர்வரும் 28ஆந் திகதி பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் தமிழ்க்கட்சிகளை தன்னைச் சந்திக்கும் படி அழைப்பு விடுத்துள்ளார். இதே வேளை, சென்ற வாரம் கனேடிய மற்றும் நெதர்லாந்து தூதுவர்கள் யாழ் குடாநாடு ''சென்றார்கள்: வந்தார்கள்'' இந்தியாவுக்கான புதிய அமெரிக்க தூதுவராக ''ஹவார்ட்(HAWARD) சர்வகலாசாலையின் ''சர்வதேச பாதுகாப்புத்துறை பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்படவிருப்பதும் சிந்திக்கப்பட வேண்டியது ஆகிறது.

நேற்று முன்தினமிரவு ''ரொய்டர்'' (REUTER) அடுத்த ஐ.நா பொதுச் செயலாளர் பதவிக்கு ஸ்ரீலங்கா ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கா பண்டாரநாயக்காவின் பெயரும் பிரேரிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தது. சென்ற ஆண்டளவில் விஞ்ஞான புனைகதை எழுத்தாளரான கலாநிதி.ஆர்தர்.சி.கிளாக் 2007 இல் சமாதானத்திற்கான நோபல்(NOBEL) பரிசு ஸ்ரீலங்காவின் அதிபருக்குக் கிடைக்கும் என்று கூறியதும் நினைவுக்கு வருகிறது.

காலாண்டு காலத்திலே சர்வதேச சமூகத்தின் நேரமைத்துவம்(?) முழுமையாக அடிபட்டுப் போனமை தெட்டத்தெளிவான இன்னொரு பார்வையாக அமைகிறது. ஈழத்தமிழ் மக்கள் ''பொங்கு தமிழ்'' ஆக ஒன்று திரண்டு நீதியான நிறைவான நீதிக்கான தமது ஒட்டுமொத்த அபிலாஷைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயக ஆள்புலம், தமிழ்த் தேசிய இனம் என்ற வரலாற்று வழிவந்த உண்மைகளுக்கு உரத்து உரிமை கோரியதை ஸ்ரீலங்கா அசட்டை'' செய்ததை சர்வதேச சமூகம் தட்டிக் கேட்காமல் விட்டதுடன் பல்வேறு வழிவகைகளினூடாக தட்டிக்கொடுத்தும் இருந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக, வரலாற்றுப்படி தனி இராச்சியமாக இருந்த தமிழர் தனியரசின் மீள் நிறுவலுக்காக - ஒடுக்கப்பட்ட மக்களுக்காக - போராடி வரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாகவும், ஈழத்தமிழரது நீதியான தாயக விடுதலைப் போராட்டத்தை ''பயங்கரவாதம் என்றும் கொச்சைப்படுத்தும் ஸ்ரீலங்கா பேரினவாத ஆட்சியாளர்களின் ''பசப்பு'' வார்த்தைகளை கேள்வி கேட்காது ஒப்புக்கொண்டு, ''ஜனநாயகப் பிதாமகர்கள்'' ஆகத் தம்மை அடையாளம் காட்டும் நாடுகள் ''பயங்கரவாதத் தடை'' கொண்டு வந்தமையில் ஈழத்தமிழ்த் தேசிய ஆன்மாவில் ஆழமான வடுவையே ஏற்படுத்தி விட்டது.

***''இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து சர்வதேச சமூகம் குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள், இந்தியா போன்றன கடைப்பிடித்து வரும் வெறியுறவுக் கொள்கையில் எமக்கு ஆழமான ஐயப்பாடுகள் இருக்கின்றன. ஒரு புறம் நிதியுதவியும், ஆயுத உதவியும் வழங்கி ஸ்ரீலங்கா அரசிற்கு ஆதரவு தெரிவித்தவாறு மறுபுறம் தமிழ் மக்களின் போராட்ட வடிவத்தை 'சர்வதேச பயங்கரவாதம்' எனக் கண்டித்துக் கொச்சைப்படுத்தி இவ்வுலக நாடுகள் கடைப்பிடித்து வரும் வெளியுறவுக் கொள்கையால் இலங்கைத் தீவில் அமைதியும், இன ஐக்கியமும் ஏற்படப் போவதில்லை. மாறாக இம் முரண்பட்டக் கொள்கையானது சிங்கள அரசின் கடும் போக்கான இனவாத அணுகுமுறையே ஊக்குவிப்பதாக அமைகிறது''*** என்று தமது அறிக்கையில் மிகத் தெளிவாக யதார்த்தம் உரைத்திருக்கும் விடுதலைப்புலிகள் ஈழத்தமிழர் போராட்டத்தை நியாயப்படுத்தத் தவறவில்லை.

கடந்த வியாழன் வெளியிட்ட அறிக்கையில் தொடர்ந்தும் ஒரு

***''நாம் உணர்வுகளுக்கும் உணர்ச்சிகளுக்கு உறவுகளுக்கும் முதலிடம் கொடுக்காமல் உண்மையான நீதிக்கும் அதனடிப்படையில் உருவான சட்டத்திற்கு இடம் கொடுக்க வேண்டும்''*** இவ்வாறு கடந்த ஞாயிறு வன்னியில் நடைபெற்ற தமிழீழ நீதியாளர், சட்டவாளர் உறுதிப்பிரமாணம் எடுக்கும் வைபவத்தில் உரையாற்றுகையில் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளமை காலத்திற்கு மிகப் பொருத்தமானதாகவே அமைகிறது.

இது இங்கு ஏன் எடுத்தாளப்படுகிறதெனில், தற்போது தென்னிலங்கை எங்கும் ''மடுமாதா ஊர்வலம்'' நடப்பதும் அதை ஊடகங்கள் மிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகிறமையாகும். இதே மருதமடு மாதா புனித ஆலயத்திலே இரு வருடங்களுக்கு முன்பாக ஸ்ரீலங்கா இராணுவம் நடத்திய கர்ணகடூர தாக்குதலில் வயது வேறுபாடின்றிக் கொல்லப்பட்ட போது இதே ஊடகங்கள் பலவும் மௌனம் காத்ததோடு தமிழ்த் தரப்பின் தாக்குதலால் என்று பழியுரைத்துமிருந்தது நினைவு படுத்தத் தக்கது.

இன்றைய பல்வகைப்பட்ட முரண்பட்ட போக்குகளை நோக்குமிடத்து தமிழ்த் தரப்பினரின் நீதியான தீவிர சமாதான அக்கறைகளும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் சமாதான சிலும்பல்களும் வரலாற்று நியதியின் படியான தமிழர் தனியரசு மீள் நிறுவலின் தேவைப்பாடு அவசியமானதாகவும் மறுதலிக்கப்பட முடியாததாகவும் இருக்கிறதாக அமைவதைக் கண்ணுறலாம்.

சமாதானத்திற்கான தமிழ்த் தரப்பின் நல்லெண்ண வெளிப்பாடுகளை நிராகரிக்கும் ஸ்ரீலங்கா அரசின் தீவிரப்போக்கு ***''ஒரு நாடானது தற்பெருமை கொண்டு, மதங்கள் போதிக்கும் அறநெறியில் இருந்து விலகி, உலகியல் வெற்றியிலும் அகம்பாவங்களிலும் மூழ்கி மனித சமூகத்தை மறந்து செயற்பட முனைந்தால் அதற்குரிய தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும''*** என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் முன்னர் ''யுனெஸ்கோ'' மகாநாட்டில் தெரிவித்தமையை மிக ஆழமாக நினைவுபடுத்தி விடுகிறதல்லவா?

□□□

# அமிர்தலிங்கத்தின் கொடும்பாவி இளைஞர்களால் எரிக்கப்பட்டது!


## அரசியலில் ஓர் எழுத்தாளரின் அனுபவம்

**அருண்**

**16**

ஆச்சரியத்துடன் கதவைத் திறந்தார். தயாராக நின்ற கோணலிங்கம் தங்கத்துரையைத் தோளில் தூக்கி வைத்துக்கொண்டான். தங்கத்துரையை இழுத்து எடுத்துத் தங்கள் தோளில் ஏந்துவதற்காக முயன்ற இளைஞர்களை அவன் ஆக்ரோஷமாகத் தடுத்தான். கோணலிங்கத்திடமிருந்து யாரும் தங்கத்துரையைப் பறித்துவிடக் கூடாது என்பதால் அவன் கவனமாக இருந்தான். அரசடி இளைஞர்கள் கையில்தான் தங்கத்துரை என்பதால் அவனுக்கு அலாதியான திருப்தி.

கோணலிங்கம் தங்கத்துரையைச் சுமந்தபடி நடக்கத் தொடங்கினான். தங்கத்துரையோ இளைஞர்களின் அன்பினால் நெகிழ்ந்து காணப்பட்டார். கோணலிங்கம் சில யார் தூரம் நடக்கத்தொடங்கியதும் அவன் காலிலிருந்த செருப்புக்கள் கழன்று விட்டன. இளைஞர்கள் திரண்டிருந்ததால் அந்தச் செருப்புக்களைத் தேடிப் பார்க்கும் நிலையில் கோணலிங்கம் இல்லை.



அவற்றைத் தேடினால் தங்கத்துரையை வேறு இளைஞர்கள் கைமாற்றி விடுவார்கள் என்ற பயம்வேறு. கோணலிங்கத்தின் "எனது செருப்புக்கள் கழன்று விட்டன. எடுத்துக் கொண்டு வா!" என்ற அந்த உத்தரவை அவன் சிரமேற்கொண்டு செருப்புக்களைச் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் வரை அந்தச் செருப்புக்களை அவன் "தொண்டரடிப் பொடியாழ்வார்" என்ற பாணியில் சுமந்து வந்தான்.


ஊர்வலத்தில் ஏராளமான இளைஞர்கள் ஐந்நூற்றுக்கும் மேலாக இருக்கும் என்று இப்போது அவன் ஊகிக்கிறான். அமிர்தலிங்கம் அவர்களுக்கெதிராக இளைஞர்கள் கோஷங்களை எழுப்பிக் கொண்டு வந்தார்கள். தங்கத்துரைக்குத் தேர்தலில் போட்டியிட அனுமதி கிடைக்காததற்கு அமிர்தலிங்கம் அவர்களின் முறைகேடான போக்கே காரணம் என்ற அபிப்பிரா யம் அவனுட்பட அனைத்து இளைஞர்களின் மனங்களிலும் மேலோங்கி இருந்தது.

ஊர்வலம் புகையிரத நிலைய வீதி வழியாகப் புறப்பட்டு ஏகாம்பர வீதியை வந்தடைந்து. அங்கிருந்து மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு வந்து கடற்படைத்தள வீதியினூடாகத் திரும்பி காளி கோவிலில் முடிவடைந்தது. அவன் கோணலிங்கத்தின் செருப்புக்களைச் சுமந்த வண்ணம் கோணலிங்கத்தின் அருகிலேயே வந்த படி உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான். பல இளைஞர்கள் தங்கத்துரையைத் தம்மிடம் தருமாறு கேட்டுக்கொண்ட போதும் குழந்தைப் பிள்ளைத்தனமாக அவ்வேண்டுகோளை மறுத்து காளிகோவில் வரை கோணலிங்கத்தைச் சுமக்கப் பண்ணிய பெருமை அவனையே முழுமையாகச் சாரும்.

காளி கோவில் மண்டபத்தில் தங்கத்துரையைக் கொண்டு வந்து இறக்கி விட்டதும் தங்கத்துரை காளியம்மனை வணங்கி விட்டுச் சில நிமிடங்கள் உரையாற்றினார். அந்த உரையில் இளைஞர்கள் தன்மேல் கொண்டிருந்த அன்பு குறித்து நெகிழ்ச்சியும் பெருமிதமும் காணப்பட்டன. கட்சி தனக்கு ஒரே வஞ்சனையுடன் நடந்து கொண்டதாகக் குற்றச்சாட்டுக்கள் காணப்பட்டன. அத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழரசுக் கட்சியின் காலந்தொட்டு கறுத்தக் கோட்டுக் காரர்களின் கட்சியாகவே செயல்பட்டு வருகிறது என்றும் தான் சட்டத்தரணியாக இல்லாதிருந்தமை தான் டிக்கட் கிடைக்காமைக்கான பிரதான காரணம் என்ற கருத்தும் அவர் உரையில் காணப்பட்டன. எவ்வாறாயினும் தான் தொடர்ந்து கல்வி கற்று சட்டத்தரணியாக மாறியே தீருவேன் என்றும் காளித் தாய் சாட்சியாக உறுதி மொழி எடுத்துக் கொண்டார்.

தங்கத்துரையின் அந்த உரையை அவன் அப்போது பெரு மகிழ்வுடன் முற்று முழுதாக ஆதரித்துக் கைதட்டி வரவேற்றிருந்த போதிலும் தங்கத்துரை தன்னையறியாமல் உணர்ச்சிவசப்பட்டு பேசினாரா அல்லது இளைஞர்களின் உணர்வுகளைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள நினைத்தாரா என்பதில் அவனுக்குப் பின்னாளில் தடுமாற்றம் தோன்றியிருக்கிறது.

தங்கத்துரைக்கு டிக்கட் இல்லையென்று ஆகிவிட்டதால் கட்சியைத் திருகோணமலையில் கவிழ்த்தே தீருவது என்று இளைஞர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள். அவனுக்கும் அது உடன்பாடானதாகவே இருந்தது. கட்சிக்கு நல்லதொரு பாடம் படிப்பிக்க இது தான் சரியான வழி என்று அவனும் ஏனையவர்களைப் போல் தீர்மானம் எடுத்துக்கொண்டான். இந்தக் காலப்பகுதியில் அமிர்தலிங்கம் அவர்களது கொடும்பாவி ஒன்றும் இளைஞர்களால் எரிக்கப்பட்டது. ஆனால் அவன் அதில் பங்கு கொண்டிருக்கவில்லை.



அமிர்தலிங்கம்

இளைஞர்களின் கோபவேசத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலைக்கிளை தமக்குச் சாதகமாய்ப் பயன்படுத்தத் திட்டம் போட்டது. ஐக்கிய தேசிய கட்சியில் வேட்பாளராக நவரெட்ணராஜா என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். நவரெட்ணராஜா உண்மையில் நல்ல மனிதர். டி.ஆர்.ஓ என்று இப்போதைய பிரதேசச் செயலாளரைக் காட்டிலும் சற்று அதிகாரம் கூடிய பதவி என்று அவன் நினைக்கிறான்.

நவரெட்ணராஜாவும் ஆரம்பத்தில் தமிழரசுக்கட்சி சார்ந்தவராகவே இருந்தார். இராஜவரோதயனார் காலமானதையடுத்து சு.ம.மாணிக்கராஜாவுக்கு டிக்கட் கொடுக்கப்பட்ட போது மனஸ்தாபப்பட்டுக்கொண்டு கட்சிக்கு எதிராக செயல்படத் தொடங்கினார் என்று அவன் கட்சியில் மூத்தோர் சொல்லக் கேட்டிருக்கிறான்.

கட்சி வேறுபாட்டுக்கு அப்பால் தனிப்பட்ட ரீதியில் தமிழரசுத் தொண்டர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தொண்டர்கள் நவரெட்ணராஜா மேல் மதிப்பு வைத்திருந்தனர். திருகோணமலை நகரத்தின் அண்மித்ததாக இன்று காணப்படும் தமிழர் குடியேற்றங்கள் நவரெத்தினராசாவின் அமைதியான செயற்பாட்டின் சான்றுகளே. அமைதியான சுபாவம், இளைஞர்களை அரவணைத்துச் செல்லும் தன்மையெல்லாம் அவருக்கே உரிய சிறப்பியல்புகளாக இருந்தன. ஆனால் அப்போதைய தமிழரசுப் பிரசாரப் பீரங்கிகளின் கெட்டித்தனத்தால் நவரெத்தினராசா துரோகி போலவே மக்கள் மத்தியில் கணிக்கப்பட்டார். தனிப்பட்ட வகையில் அவரை மதிப்பவர்கள் கூட தமிழர் விடுதலைக் கூட்டணியில் கொண்டுள்ள பற்று காரணமாக அவரை எதிர்த்தார்கள். என்றாலும் சில தமிழர்களும் அவர் பின்னே நிற்கத்தான் செய்தார்கள். இவர்களை "வயிறு வளர்ப்பவர்கள்" என்ற பட்டியலில் அவன் சேர்த்து கொண்டிருந்தான்.

தங்கத்துரைக்கு டிக்கட் கொடுக்காததால் இளைஞர்களிடையே எழுந்த ஆவேசத்தை நவரெத்தினராசாவும் அவர் ஆதரவாளர்களும் தீவிரமாகப் பயன்படுத்தத் தொடங்கினார். கூட்டணியில் சில இளைஞர்களை வளைத்துப் போட்டுக்கொண்டு அவர்கள் மூலமாகவும் செயற்பாட்டில் இறங்கினார். தங்கத்துரை சரர்பாக நீலிக்கண்ணீர் வடித்தனர். அமிர்தலிங்கம் ஒரு சர்வாதிகாரி. அவர் இப்படித்தான் நடந்து கொள்வார் என்றனர்.

கட்சியில் ஜனநாயகம் கிடையாது. மக்கள் எண்ணத்துக்கு மதிப்புக் கிடையாது என்றெல்லாம் கூறினார்.

கட்சி சார்பாக வாதிடவோ இவர்களது பிரச்சாரங்களை முறியடிக்கவோ கூட்டணியின் இளைஞர் கோஷ்டி விரும்பவில்லை. அவன் கூட கட்சிப் பாடம் படிக்கட்டும் என்றே ஆத்திரத்தில் மௌனம் காத்தான். இளைஞர்களின் மௌனமும் ஒருசில கட்சி இளைஞர்கள் நவரெட்ணராசாவுடன் இணைந்து பிரசாரம் செய்ததும் நவரெட்ணராசா யு.எம்.பி.யில் போட்டியிட்டதும் அவரும் தமிழன் தானே என்ற பிரசாரமும் மெல்ல மெல்ல எடுபடத் தொடங்கியது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோட்டைகள் என்று கூறப்பட்ட பகுதிகள் தளர்வடையத் தொடங்கின.

**(இன்னும் வரும்)**

# எழுச்சிக்குரல்

**கோ.துரைகுமாரன்**

*ஏகாதிபத்தியவாத களம் சார்ந்த அடக்குமுறை ஆட்சியாளர்கள் விடுதலை கோரிக் குரலெழுப்புவோரை காலங்காலமாக பல்வேறு வழி முறைகளினூடாக அடக்கியொடுக்கி வந்துள்ளமை வரலாறு கூறி நிற்கும் தெளிவான செய்தி.*

*அவ்வாறான அடக்குமுறைகளில் மிக நுட்பம் வாய்ந்ததாகவும் நீண்டகால பாதக விளைவுகளை அடக்கப்படும் இனத்திற்கு ஏற்படுத்த வல்லதாகவும் ''இன ஒதுக்கல்'' என்பது மானிடவியலாளர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.*

*இத்தகைய ஒடுக்குமுறைக்குப் பரவலான உதாரணமாக எடுத்தாளப்படுவது தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்ட வெள்ளையின நிறவெறி அரசின் இன ஒதுக்கல் கொள்கை ஆகும். மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக இவ்வாறான அநீதியை பல்வேறு போராட்ட வடிவங்களினூடாக எதிர்கொண்டதன் மூலமே தென்னாபிரிக்க பூர்வீகக் குடிகள் இன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றனர்.*

*இவ்வாறான பல்வேறுபட்ட தென்னாபிரிக்க மக்கள் எழுச்சிகள் நிறவெறி அரசால் படுகொலைகள் மூலம் அடக்க முயற்சித்தபோதும் மக்கள் புரட்சி வெற்றி கண்டதே வரலாறு. தென்னாபிரிக்காவில் 1960 மார்ச் 21 இல் இன ஒதுக்கலுக்கு எதிராக அமைதியான முறையில் ஊர்வலம் சென்றவர்கள் மீது காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 69 பேர் பலியான ''ஷார்ப் வில்லி'' படுகொலை மேற்போந்த வகையினதேயாகும்.*

*அண்மைக்காலமாக மேற்படி படுகொலை நடந்த தினமான மார்ச் 21ஐ ''இனப்பாகுபாடு ஒழிப்புக்கான சர்வதேச தினம்'' ஆக உலக நாடுகள் அனுட்டித்து வருகின்றன. விரைவில் ''இனவெறிக்கு எதிரான உலக மகாநாடு'' நடைபெற இருப்பதும் இதற்கான நல்லெண்ணத் தூதுவராக இந்திய ''சித்தார்'' மேதை பண்டித் ரவிசங்கர் கௌரவிக்கப்பட்டிருப்பதும் சொல்லப்பட வேண்டியதாகிறது.*

*இப் பின்னணியிலே, இன ஒதுக்கலின் பூதாகரத் தன்மையையும் அதன் நிமித்தம் எழுந்த வைராக்கியத்தையும் எடுத்துக்கூறும் ''கேபிரியேல் ஒகார்'' என்ற நைஞீரியக் கவிஞனின் கவிதையொன்று இவ்வார ''எழுச்சிக்குரல்'' ஆக ஒலிக்கிறது.*

***''நான் பாடினேன்!***
***என் சங்கீதத்தை***
***உன் பாஷையில்***
***மோட்டார்காரின் இருமல்***
***என்று***
***சிரித்தாய்! சிரித்தாய்!***
***சிரித்தாய்!***

***நான் நடனமாடினேன்***
***அதை***
***மனிதப் பிறவியல்லாத ஒன்றின்***
***அசிங்கமான அசைவுகள்***
***என்று***
***இமைகளைமூடிக்கொண்டு***
***சிரித்தாய்! சிரித்தாய்!***
***சிரித்தாய்!***

***உன்னுடைய சிரிப்பு***
***உறைபனிச் சிரிப்பு***
***அது***
***உன் கண்களை - காதுகளை - இதயத்தை***
***உறைய வைத்து விட்டது!***

***காலம் புரண்டு விட்டது***
***இப்போது***
***சிரிப்பது என் முறை***
***என் சிரிப்பு***
***உறை பனிச் சிரிப்பல்ல***
***இது நெருப்புச் சிரிப்பு***
***உறைந்து கிடக்கும்***
***உன் காதுகளை - கண்களை - இதயத்தைத்***
***திறந்து விடும் சிரிப்பு***

***புரிந்து கொள்***
***நானும்***
***எந்தையும் தாயும் என்***
***முந்தையரும்***
***இந்த பூமியின்***
***நெருப்பிலிருந்தே***
***ஜனனித்தவர்கள்!''***

# கலைஞனுக்குள் உயிர் வாழும் அந்த வீரியம்!

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

***'தமிழ் இனி' ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான கவிஞர் சேரன் இன்றைய ஈழத் தமிழ்த் தேசியத்தைக் கேள்விக்கு உள்ளாக்கி வருகிறார். நிலவரைகளுக்கு அப்பால் தமிழ் அடையாளத்தைத் தேடும் அவருடைய கருத்தாடல் பற்றி...***

புலம்பெயர்ந்து, ஈழத்தினுடைய வாழ்வியல் யதார்த் தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய தேவை இல்லாமல், பல்வேறு நவீன சிந்தனைகளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டிருப்பவர்கள் வளர்த்துக் கொண்டிருக்கிற ஒரு அம்சம்தான் தேசியத்தைக் கடந்து செல்லுதல் - தேசியம் ஒரு கற்பிதம் போன்ற கருத்தாடல்களை எல்லாம் ஆசிய - ஆபிரிக்க நாடுகளைக் காலனித்துவமாகக் கொண்டிருந்து மிக மோசமான சுரண்டல்களை நடாத்திய ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராக அந்த நாடுகள் தங்கள் சுதேசியத்தைக் கட்டிக்காப்பதற்காக எடுத்த ஒரு போர் வடிவம் தேசிய மாகப்பரிணாமம் பெற்ற பொழுது அதற்கு ஒரு முற்போக்கான பாத்திரம் இருந்தது. அதே வகையான ஒரு முற்போக்குப் பாத்திரம் தான் ஒரு தேசிய இனம், பெரும் தேசியவாதத்தின் பிடிகளிடம் இருந்து விடுபடப்போராடும் தேசியப் போராட்டத்துக்கும் இருக்கிறது. நாங்கள் எதிர் கொண்டிருக்கின்ற இந்த யதார்த்த சூழலை மறுதலிக்கின்ற கருத்தாடல்களால் எங்களுக்கு மிகப்பெரிய ஊறுகளே விளையும். காலச்சுவடு இதழின் தொலை புலம் பகுதியில் சேரன் எழுதிவரும் தனது கட்டுரைத் தொடரில் 'யாதும் ஊரே யாவரும் கேளீர்', 'தமிழ் கூறும் நல்லுலகம்' போன்ற கருத்தாடல்களினூடாக சர்வதேசத் தமிழ்ப் பண்பாட்டுச் சூழல் பற்றிய சிந்தனையை முன்னிறுத்துகிறார். தேசியத்தை இழந்து விடாமல் புதிய கண்ணோட்டங்களை நோக்கி விரிந்தும்,அணைத்தும் செல்வதில் எந்தவித தவறும் இல்லை. ஆனால் ஊன்றி நிற்கின்ற காலுக்குக் கீழே மற்றவர்களைக் குழிபறிக்க விட்டு விட்டு அந்தரத்தில் நின்று கற்பனை பண்ணிக் கொண்டிருக்க முடியாது. அந்த வகையில் சர்வதேசியப் பண்பாடு அல்லது தேசியத்தைக் கடந்தது என்பது கூட ஒரு கற்பிதம் தான்.

**தமிழ்த் தேசிய போராட்ட ஆரம்ப சூழலில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பையும் மிக நல்ல கவிதைகளையும் வழங்கியிருந்த சேரன் அவர்கள் தேசியத்தைக் கடந்து செல்லுதல் என்ற சிந்தனைத் தளங்களுக்குள் போய் அவற்றை வேறு வியாபார நலன்களுக்கு இரையாக்கிவிடாமல் எங்களுடைய தமிழ்த் தேசிய வாழ்வின் நலன்களை நோக்கித் திரும்ப வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளையும் இதனூடாக வைக்க விரும்புகிறேன்.**

தமிழ்த்தேசிய போராட்ட ஆரம்ப சூழலில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பையும் மிக நல்ல கவிதைகளையும் வழங்கியிருந்த சேரன் அவர்கள் தேசியத்தைக் கடந்து செல்லுதல் என்ற சிந்தனைத் தளங்களுக்குள் போய் அவற்றை வேறு வியாபார நலன்களுக்கு இரையாக்கிவிடாமல் எங்களுடைய தமிழ்த் தேசிய வாழ்வின் நலங்களை நோக்கித் திருப்ப வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளையும் இதனூடாக வைக்க விரும்புகிறேன்.

***தமிழகத்தின் கருத்தியல் களத்தில் ஈழப் போருக்கான ஆதரவைத் திரட்ட முடியும் என்று நம்புகிறீர்களா?***

ஆதரவுக் குரல்கள் தமிழகத்தில் பெரும்பாலும் உணர்ச்சிமயப்பட்ட வெளிப்பாடுகளாகவே அமைந்ததைப் போலவே, எதிர்ப்பும் உணர்ச்சி களின் அடிப்படையில் எழுவதாகவே இருக்கிறது. தமிழகத்தில் உள்ள மக்கள், ஈழத்தமிழர்களைப் போல மொழி வாரியான மாநிலம் அளிக்கப்படாதவர்களாகவோ அல்லது தமிழர்களை வடக்கு, கிழக்கு என்று இலங்கை அரசு துண்டாட நினைப்பது போல துண்டாடப்பட்ட நிலையிலோ இல்லை. அந்த வகையில் அவர்கள் ஒரு வகையில் பாதுகாப்பான நிலைக்குள் தான் வாழ்கிறார்கள். ஆனால் மொழிவாரி மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டு 50 வருடங்களின் பின்பும் தமிழ் வழிக்கல்வியைப் பாதுகாக்க முடியாத சூழலே தமிழக அரசுக்கு இருக்கிறது. தமிழகம் மட்டுமன்று, எல்லா மாநிலங்களுமே இவ்வளவு காலத்திலும் ஒரே தேசிய இனம் அடைந்திருக்கக் கூடிய வளர்ச்சிக்குத் தங்களுக்கு வழங்கப்பட்ட தன்னாட்சி உரிமை எந்த அளவுக்குப் போதுமானது என்பதை ஆய்வு செய்து பெற்றிருக்க வேண்டிய



வர்கள். அந்தந்த தேசிய இனங்களில் உச்சபட்ச உரிமைகளை அங்கீகரித்த நிலையில் ஏற்படும் ஒருங்கிணைவுதான் ஆரோக்கியமானது. அவ்வாறு பெற்றிருந்தால் இந்திய அரசு, ஈழப்பிரச்சினையில் தலையிட்டபோது அந்த உச்சபட்ச உரிமைகளை எங்களுக்கும் வழங்க முன்வந்திருக்கும். தமிழகத்து அறிவு ஜீவிகளும் நண்பர்களும் அறிவார்ந்த தளத்தில் நின்று எங்களுக்கு உரித்தான உரிமைகளை நாங்கள் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் தங்களுடைய உச்சபட்சமான உரிமைகளை அனுபவிப்பதற்கான சூழலையும் பெற்றுக்கொள்ளலாம். அந்த வகையில் எங்களுடைய போராட்ட சூழலை அங்கே விதைப்பதற்கானதாக கருதிக் கொள்ளாமல் ஆரோக்கியமான சிந்தனைச் சூழலை வளர்த் தெடுப்பது உகந்தது.

**(மிகுதி அடுத்தவாரம்)**

# சிறுவர் மலர்

## முல்லாவின் கோபம்

ஒரு சமயம் முல்லாவிற்கு பணம் அவசியமாகத் தேவைப்பட்டது. ஆகவே வட்டிக்குக்கடன் கொடுக்கும் தம் ஊரிலுள்ள செல்வந்தரிடம் சென்று பணம் கடனாகக் கேட்டார்.

தனவந்தரோ முல்லாவிடம், ''எதற்காகப் பணம் வேண்டும்?'' என்று கேட்டார்.

முல்லாவுக்குக் கோபம் வந்துவிட்டது. வட்டிக்குக் கடன் கொடுப்பவருக்குக் காரணம் என்ன கூறவேண்டியிருக்கிறது. என்றாலும் அமைதியோடு, ''நான் ஒரு யானை வாங்கப் போகிறேன்'' என்றார்.

ஆனால் பணக்காரரோ மீண்டும் முல்லாவிடம், ''யானைக்குத் தீனி போட வேண்டுமானால் நிறையச் செலவாகுமே? உன்னிடம் பணமே இல்லாத போது யானைக்கு எவ்வாறு தீனி போட முடியும்?'' என்று கேட்டார்.




இதனைக் கேட்டு மிகுந்த ஆத்திரமடைந்த முல்லா, ''ஐயா, உம்மிடம் கடன் வாங்கத்தான் வந்தேனே தவிர ஆலோசனை கேட்க வரவில்லை'' என்று காட்டமாகப் பதில் கூறிவிட்டு வந்த வழியே திரும்பினார்.



**ஆசிரியர்:-** கோபு! கிரிக்கெட்டை பத்தி கட்டுரை எழுதிகிட்டு வரச் சொன்னேனே என்ன எழுதிக்கிட்டு வந்தாய்?

**கோபு:-** அன்று மழை. கிரிக்கெட் நடைபெறவில்லைன்னு எழுதியிருக்கேன் சார்!



**ஒருவன்:-** நீங்க வளர்க்கிற தேனீ என்னை நல்லா கொட்டிடிச்சு.

**மற்றவர்:-** எந்தத் தேனீ கொட்டிச்சுன்னு சொல்லுங்க, அதற்குத் தண்டனை கொடுத்திடலாம்

## எதற்காக அழுதான்?



மகா வீரனான அலெக்சாண்டர் எப்போதாவது அழுதிருப்பானா? இருக்காது என்று தானே நினைப்பீர்கள்!

குழந்தைப் பருவத்தில் அழுதிருக்கிறானாம்!

''ஐயோ! இந்த உலகத்தில் உள்ள நாடுகளையெல்லாம் என் தந்தையே பிடித்து விட்டார் என்றால், நான் எந்த நாட்டை வெற்றி கொள்வது?'' என்று நினை த்து நினைத்து அழுவானாம்.

பார்த்தீர்களா குழந்தைகளே! நீங்கள் எதற்கெல்லாம் அழுகிறீர்கள் என்று நினைத்துப் பாருங்கள்! அப்போது அலெக்சாண்டரை நினைத்துக் கொள்ளுங்கள். அழுகை தானாக அடங்கி, இலட்சிய வேகம் பிறக்கும்!

## முட்டாள் பறவை



ஆஸ்ட்ரிச் என்றழைக்கப்படும் நெருப்புக் கோழிக்கு மற்றொரு பெயர் என்ன தெரியுமா......? ''முட்டாள் பறவை இந்தப் பறவை தனக்கு ஆபத்து என தெரிந்தால், தன் தலையைப் பாலைவன மணலில் புதைத்துக் கொள்ளுமாம்.

இதனால் இதனை ''முட்டாள் பறவை என்று அழைக்கின்றனர். இதன் செய்கை ''பூனை கண்ணை மூடிக் கொண்டால், பூலோகமே இருண்டு விட்டதென்று நினைத்துக் கொள்ளுமாம் என்ற பழமொழியை நினைவூட்டுகிறதல்லவா....?

# டிக்.....டிக்......டிக்......

## நமது உடம்பிற்குள் ஒரு கடிகாரம்

பலருக்கு தெரியாத செய்தி இது. இதனை உடற் கடிகாரம் என்றும் - பயாலாஜிக்கல் கிளாக் என்றும் அழைப்பார்கள். அதாவது நமது உடம்பின் பாகங்களை அந்தந்த நேரத்திற்கு தகுந்தபடி இயங்க வைக்க உதவி செய்கின்ற வேலையைத்தான் இந்த உடற் கடிகாரம் செய்கின்றது. உதாரணமாக ஒரு வேலையை குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்து முடிக்க வேண்டுமென்றால், அதற்கு தகுந்தது போல நமது உடம்பை தயார் படுத்தி செயல்படுத்துவதுதான் உடற் கடிகாரத தின் வேலை.

இந்த உடற்கடிகாரத்தின் செயல்படும் விதத்திற்கு ஏற்ப நம்மையும் நமது வாழ்க்கை முறையையும் நாம் முறைபடுத்திக் கொண்டால் எந்த

**உடற்கடிகாரம் சொல்கிறபடி கேட்டு நமது வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொண்டால் படபடப்பு இல்லை. நோயும் இல்லை.**

நோயுமின்றி டென்ஷன் என்னும் படபடப்பு இன்றி அமைதியாக வாழலாம்.

இந்த உடற்கடிகாரம் நமக்கு தெரியாமலே நம்மை ஒழுங்குபடுத்திட முயலும் அரிய பணியை செய்கின்றது. நமது உடம்பை தகுந்த நேரத்தில் தகுந்த பணியை செய்ய சொல்லிக் கொண்டிருக்கும் இந்த உடற்கடிகாரத்தின் கட்டளைக்கு நாம் பெரும் பாலான நேரத்தில் செவி மடுப்பதே கிடையாது. இதனால்தான் பல நோய்களை நாம் சந்திக்க வேண்டியிருக்கின்றது.

தாயின் வயிற்றிலிருக்கும் குழந்தைக்கு இரவும் ஒன்று தான் பகலும் ஒன்று தான். தாயின் வயிற்றில் இருக்கும் போது குழந்தையின் உடம்பு செய்ய வேண்டிய பணிகளை தாயே அதற்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொண்டு அவள் உடம்பு கேட்கும் பணியை செய்து விடுகிறாள். ஆனால் பிறந்த இரண்டு நாட்களில் பகல் மற்றும் இரவின் வித்தியாசத்தை குழந்தை உணர்ந்து விடுகிறது. அதற்கேற்றவாறு அக் குழந்தை இரவில் அதிக நேரம் தூங்கி ஓய்வு எடுக்கிறது.

இது குழந்தை உடல் கடிகாரம் சொல்லுகின்றதற்கேற்ப குழந்தையின் உடம்பு செயல்படுத்தும் செயலுக்கு எடுத்துக் காட்டாகும்.

பொதுவாக இந்த உடம்பு மாற்றங்கள் இளம் வயதிலேயே அதிகமாக ஏற்படுகிறது. அதனால்தான் வாலிப வயதுடையோர் இரவில் நேரம் கடந்து தூங்கச் செல்வதும், காலையில் அதிக நேரம் தூங்குவதையும் நாம் அறிவோம் ஆனால் வயதாக வயதாக சீக்கிரம் படுக்கச் சென்றுவிட்டு அதிகாலை மூன்று அல்லது நான்கு மணியளவில் எழுந்திருப்பதாகச் சொல்கிறார்கள். இதுபற்றிய ஒரு ஆராய்ச்சியில் உடற்கடிகாரத்தின்படி இளைஞர்கள் சராசரியாக ஒரு



நாளைக்கு ஒன்பது மணி நேரம் இருபது நிமிடம் தூங்குகிறார்கள் என்பது தெரிய வந்தது. குழந்தைகள் காலை நேரத்தில் நன்றாக தூங்க வேண்டும் என்று நினைப்பார்கள். ஆனால் அவர்கள் காலை நேரத்திலேயே பள்ளிக்கு செல்ல வேண்டி இருப்பதால் அதற்கு தகுந்தது போல அவர்கள் உடல் ஆயத்தமாக வேண்டியிருக்கிறது. இந்த இடத்தில் அவர்களின் உடற்கடிகாரம் ஒத் துழைக்க மறுக்கிறது. இதனால் இவர்களுக்கு காலை நேரமே அவஸ்தைக் குரிய நேரமாகி விடுகிறது.

நமது உடம்பானது இரவில் தூங்குவதற்கும் பகலில் வேலை செய்வதற்கும் தகுந்தவாறு ! டைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் நாம் அதற்கு ஏற்ப ஒத்துப்போக அதன் போக்கில் நமது உடம்பை விடுவதில்லை. இதனால் தான் நாம் நினைத்த போது நமக்கு தூக்கமும், வேலை செய்யும் ஆர்வமும் வருவதில்லை. ஷிப்ட் முறையில் குறிப்பாக தினமும் இரவுப் பணி செய்பவர்கள் தங்களது தூக்கம், உணவு, மற்றும் உடற்பயிற்சி ஆகிய மூன்றும் ஒரேசீராக இருக்க உடம்பை நன்கு பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நடுத்தர வயதுடையோருக்கு தினமும் எட்டுமணி நேரம் தூக்கம் அவசியமாகும். அமெரிக்கர்கள் ஒரு நாளைக்கு சராசரியாக ஆறு மணிநேரம் தூங்குகிறார்கள். ஆனால் நமது நாட்டில் இது சாத்தியப்படவில்லை. இதனால் பகலில் நமது உடம்பு எதிலும் நாட்டம் கொள்ளாமல் சோர்ந்து விடுகிறது. நமது உடற்க டிகாரம் சொல்லுகிறபடி நாம் நடந்து கொண்டால் நோய்கள் நம்மை வந்து தாக்குவதிலிருந்து நாம் தப்பிக்கலாம்.

❋❋❋

# காய்கறி மருத்துவம்



### வாழைக்காய்

இதில் பலவகை இருந்தாலும், மொந்தன் வாழைக்காயைத்தான் சமைத்துண்பது வழக்கம். மற்ற வகையான வாழைக் காய்களை அப்படி உண்ணக் கூடாது என்பதில்லை. அவை அபரிமிதமாகக் கிடைப்பதில்லை. அவையெல்லாம் பழங்களாக நல்ல விலை போகின்றன.

இதில் இரும்புச் சத்துடன் மாச் சத்தும் அதிகம் உண்டு. இதனால் உடல் பருக்கும்; கறைப் புண்டாகும்; பசியை அடக்கும். இதனுடன் மிளகு சீரகம் சேர்த்துச் சமைப்பது நல்லது. வாயால் ரத்தம் கக்குபவர்களுக்கும்; கிராணி, நீரழிவு உள்ளவர்களுக்கும் பத்திய உணவாக வாழைக்கச்சல் பயுன்படுகிறது.

பச்சை வாழைக்காயை வில்லைகளாக ஆக்கி உலர்த்தி மாவாக்கி, சிறு வில்லைகளாகத் தட்டி வெயிலில் உலர்த்தி உப்புடன் நேர்த்து உட்கொண்டால் அஜீரணம், புளியேப்பம் ஆகியவை நீங்கும்.

வாழைக்காயைச் சமைக்கும் பொழுது, மேல் தோலை மெல்லியதாகச் சீவியெடுத்தால் போதும். உள்தோலுடன் சமைப்பதே நல்லது.

அப்படிச் சீவியெடுத்த தோலை நறுக்கி வதக்கி, புளி மிளகாய் சேர்த்து துவையலாகச் செய்து உண்பர் சிலர். கேரளத்தில் இந்தப் பழக்கம் அதிகம் உண்டு. அது நல்லது தான்.

இது ரத்த விருத்தியும் பலமும் உண்டாக்கும், வாழைக்காய் உண்பதால் வயிறு இரைச்சல், கழிச்சல், வாயில் நீர் ஊறுதல், இருமல் ஆகியுவையும் நீங்கும். ஆனால் வாய்வு மிகும். வாழைப்பிஞ்சு பத்தியத்திற்கு ஏற்றது என்றாலும், மலத்தைக் கட்டும்.

### கத்தரிக்காய்

இதில் பலவித வண்ணங்கள் உண்டு என்றாலும் அனைத்திலும் உள்ள சத்து ஒன்றேதான். பிஞ்சு கத்தரிக்காய் சமைப்பதற்கு நல்லது. முற்றின கத்தரிக்காய் அதிகம் சாப்பிட்டால் சொறி சிரங்கைக் கொண்டுவரும். இப்பொழுது விதையே இல்லாத கத்தரிக்காய்களையும் கண்டுபிடித்துள்ளார்கள்.

இதைக்கொண்டு எல்லவித சமையலும் செய்யலாம். சீக்கிரத்திலும் சமைத்து விடலாம். அது ஒரு சௌகரியந்தானே?

இதில் தசைக்கும் ரத்தத்திற்கும் உரம் தருகிற விற்றமின்கள் சிறிதளவு உள்ளன. இதனால் வாய்வு, பித்தம், கபம் போகும். அதனால் தான் பத்தியத்துக்கு இக்காயைப் பயன்படுத்தச் சொல்கிறார்கள். அம்மை நோயால் பாதிக்கப்படுபவர்கள் இதை உண்டு நல்ல பலன் பெறலாம்.

# நோய் வரும் வாசல்

மனித நலவாழ்வும், சுற்றுச் சூழலும் இருவழி சார்புடையது. மனிதன் தனது வாழ்வின் மேம்பாட்டிற்காகவும், சுகங்களுக்காகவும் தனது சுற்றுச்சூழலில் சில, பல மாற்றங்களைச் செய்து கொள்கிறான். மனிதனுடைய நல வாழ்வு மற்றும் சுகாதாரம் இரண்டும் பழக்கம் மற்றும் சுற்றுச்சூழலில் அமைந்துள்ள தட்பவெப்ப நிலைக் கேற்ப அமைகிறது. நோய்கள் எப்படி ஏற்படுகின்றன? ஒரு குறிப்பிட்ட சூழலில் மனிதன், தான் வாழ்வதற்கு ஏற்ப பயன்படுத்தும் நுணுக்கங்களும், கையாளும் வாழ்க்கை முறைகளின் அடிப் படையில் தான் நோய்களும் வடிவம் பெறுகின்றன.

மனிதன், தெரிந்தோ தெரியாமலோ அறியாமையினாலோ அல்லது வேண்டுமெனவோ தனது சுற்றுச்சூழலை

**உடலுக்குள் நோய் எப்படி நுழைகிறது?**

மாசுபடுத்திக் கொண்டே இருக்கிறான். இப்படி மனிதன் ஏற்படுத்தும் மாசுகள் உலகில் ஊடுருவி, சில பல மாற்றங்களைப் பெற்று இறுதியாக மனிதனுக்கே எதிரியாக வந்து அமைகிறது. சுற்றுச்சூழல் மாசு அடைவதால், நோய்கள் மனித சமூகத்தை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்கக் கூடிய அபாயம் ஏற்படுகிறது. டாக்ஸிகாலஜி என்ற "மாசு இயல்" துறையின் கீழ் பல்வேறு விதமான விஷவாயுக்களின் தாக்கம், அதனால் ஏற்படும் நோயினங்கள், அந்நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகள் என பல்வேறு பிரிவுகளாக ஆய்வுகள் நடந்து வருகின்றன.

இந்தியாவில், பெரு நகரங்கள் பெருகிவரும் வேளையில் கூடவே, பல மடங்கு வாகனங்களும் பெருகி வருகின்றன. தமிழகத்திலும் வாகனங்களும், தொழிற்சாலைகளும் பெருகிவருகின்றன. இவற்றிலிருந்து வெளியாகும் இரசாயணப் புகையினால், சுற்றுச் சூழல் மிகவும் மாசடைந்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. வாகனப்புகை மற்றும் தொழிற்சாலைப் புகைவழியே வெளிப்படும் இரசாயணக் கூறு கள், மனித உடலுக்குள் நேரிடையான பாதிப்புகளை விளைவிக்கின்றன. இவைகள் நுரையீரல், இருதய நோய்கள், மூத்திரப்பை சேதம், தோல் நோய்கள், புற்றுநோய்கள், பிறப்புறுப்புக்களின் தன்மையிழப்பு போதல், நரம்பு மற்றும் மன நோய்களின் தாக்குதல் முதலிய கேடுகளை விளைவிக்கின்றன. இவைகள் யாவும் புகையினால் ஏற்படும் விஷத்தன்மையின் காரணமாக ஏற்படக் கூடியவை.

இவ்விஷத் தன்மை,

1. எப்படி உடலிற்குள் நுழைகிறது?
2. எந்த அளவில் நுழைகிறது?
3. மனித உடலில் இவ்விஷத் தன்மை கலந்து விடும் போது ஏற்படும் மாற்றங்கள்.

போன்றவற்றின் அடிப்படையில், அதனால் விளையும் சேதம், மனிதனுக்கு ஏற்படும் ஆரோக்கியத்தின் இழப்பு, நலவாழ்வு இழப்பு முதலியன கணக்கிடப்பட்டு வருகின்றன. மனித உடலில் ஒவ்வொரு வேதியல் பொருட்களுக்கும் தாங்கு சக்தி உள்ளது. அதாவது ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவு இரசாயனத்திற்கு மிகக் குறைவான செயல் பாடு உடைமையை தாங்கு சக்தி என கூறுகிறோம்.

❋❋❋❋

**திவ்வியா உண்ணி.........**

(8ம் பக்கத் தொடர்ச்சி......)

என்று வெரைட்டியாய் நடித்திருக்கிறேன். இங்கும் வெரைட்டி கேரக்டர்ஸ் கிடைக்கின்றன. சின்ன வித்தியாசம்... அங்கே கேரக்டர் மட்டுமல்ல... காஸ்ட்யூம், கெட்டப்பில் எந்தவிதமான வெரைட்டியும் இல்லை. ஆனால் கேரக்டரில் வெரைட்டி இருக்கிறது. கண்ணன் வருவான் படத்தில் ஸாப்ட்டான கேரக்டரில் நடித்தேன். சபாஷ் படத்தில் ரஞ்சித்தால் கொடுமைப்படுத்தப் படும் கேரக்டர். பாளையத்து அம்மன் படத்தில் குடும்பப் பெண். இப்போது நடித்து வரும் மிஸ்டர் நாரதர் படத்தில் செல்ஸ்கேர்ள் கேரக்டர். கல்வெட்டு படத்தில் ஆர்த்தடாக்ஸ் பெண். இப்படி படத்துக்குப் படம் வெரைட்டியான கேரக்டர்களில்தான் நடித்துக் கொண்டிருக்கிறேன். ஸோ என் எதிர்பார்ப்பு ஓரளவு நிறை வேறியுள்ளது.

**தமிழில் நடிப்பதற்கும் மலையாளத்தில் நடிப்பதற்கும் ஏதும் வித்தியாசம் தெரிகிறதா?**

பெரிய அளவில் வித்தியாசம் இருப்பதாக எனக்கு தெரியவில்லை. முன்பெல்லாம் அங்கே கதைகள் ரியலாக இருக்கும். கேரக்டர்சேஷனும் கூட அப்படியே இருக்கும். இப்போது அங்கும் டிரெண்ட் மாறிவிட்டது. தமிழ் படங்கள் போலவே மலையாளத்திலும் பாடல் காட்சிகளை யெல்லாம் சர்வசாதாரணமாக வைக்க ஆரம்பித்து விட்டார்கள். அதனாலோ என்னவோ எனக்கு பெரிய வித்தியாசம் தெரியவில்லை.



**மலையாளத்தில் நீங்கள் ஏற்றதெல்லாம் ஹோம்லியான பாத்திரங்கள்! தமிழில் இப்படிப்பட்ட பாத்திரங்கள் அமைவது கஷ்டம். அதோடு, கவர்ச்சியாய் நடிக்காமல் கதாநாயகியாக இங்கே காலம் தள்ளவும் முடியாது. என்ன செய்வதாக உத்தேசம்?**

வெளிப்படையாக சொல்ல வேண்டும் என்றால் அங்கே கிளாமர் என்ற கான்செப்ட்டே இல்லை. இங்கு தான் கிளாமர், ஹோம்லி என்று பிரித்து வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல கிளாமர் என்றால் உடம்பைக் காட்டி எக்ஸ்போஸ் செய்வது என்பதுதான் அர்த்தமாக இருக்கிறது. எனக்கு எக்ஸ்போஸ் செய்து நடிப்பதில் இஷ்டமில்லை. மாடர்ன் டிரஸ்ஸில் கூட கிளாமராக நடிக்க முடியும். அப்படியான கிளாமர் என்றால் ஓ.கே. கிளாமர் என்ற பெயரில் செக்ஸியாக நடிக்கச் சொன்னால் முடியாது. மீண்டும் மலையாளத் துக்கே போய் விடுவேன். வேறு வழியில்லை எனக்கு.

❋❋❋

# சினிமா ஸ்டார் பேட்டி-2

## -திவ்யா உண்ணி-





**த**மிழ் சினிமாவின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் பலர் கேரளத்திலிருந்து வந்தவர்கள் என்று புரியும். இதற்கு எத்தனையோ நடிகைகளை உதாரணம் சொல்ல முடியும். ஊர்வசி, ரேவதி, ராதா, அம்பிகா, நதியா... பட்டியல் போட்டால் வாக்காளர் பட்டியலை எட்டும். சமீபத்திய வரவான திவ்யா உண்ணியும் மலையாளக் கரை யோரத்திலிருந்து 'கோடம்பாக்கம் வந்திருப்பவர். 'கண்ணன் வருவான் 'படத்தில் அறிமுகமாகி 'சபாஷ், 'பாளையத்து அம்மன் போன்ற படங்களில் நடித்திருக்கும் இவர், இப்போது மிஸ்டர் நாரதர், கல்வெட்டு, ஆண்டாள் அடிமை உட்பட பல படங்களில் நடித்து வருகிறார். தமிழ் ரசிகர்களின் பேராதரவுடன். தமிழுக்கு புது வரவான திவ்யா உண்ணி மலையாளத்தில் முன்னணி நட்சத்திரம். குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி சில படங்களில் நடித்தவர், பிறகு கதாநாயகியாகி சுமார் இருபத்தைந்து படங்களில் நடித்திருக்கிறார். அவற்றில் பல வெற்றிப் படங்கள். முன் குறிப்பு போதும்... இனி திவ்யா உண்ணியுடன் உரையாடுவோமா?



**மலையாளத்தில் நம்பர் ஒன் நடிகையாக இருக்கும் நீங்கள் தமிழில் வந்தது?**

மலையாளத்தோடு கம்பேர் பண்ணினால் தமிழ் இண்டஸ்ட்ரி மிகப் பெரிய இண்டஸ்ட்ரி. இங்கே நடித்தால் உலக அளவில் பேரும் புகழும் கிடைக்கும். அதனால்தான் தமிழில் நடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். இன்னொரு காரணம்... நிறைய தமிழ்ப்பட வாய்ப்புகள் என்னைத் தேடி வந்தன. முதலில் தேடி வந்தபோது நான் பத்தாம் வகுப்பு எக்ஸாம் எழுதும் முயற்சியில் இருந்தேன். அதனால் நடிக்க முடியாமல் போனது. அப்புறமும் சில தமிழ்ப்பட வாய்ப்புகள் வந்துகொண்டே இருந்தன. அப்போதெல்லாம் எனக்கு மலையாளத்தில் நிறைய கமிட்மென்ட் இருந்தது. அதனால் மறுக்க வேண்டியதாகிவிட்டது. கடைசியாக கல்வெட்டு, கண்ணன் வருவான் படங்கள் வந்தன. இம்முறை எப்படியும் தமிழில் நடித்தே ஆகவேண்டும் என்று முடிவு செய்து கால்ஷீட்டை அட்ஜஸ்ட்செய்து அந்த படங்களை ஒப்புக்கொண்டேன்.

**காதாநாயகிகளுக்கு தமிழில் வித்தியாசமான பாத்திரங்கள் கிடைப்பது கஷ்டமாச்சே? மலையாளத்தில் கிடைத்தது போல் அல்லது நீங்கள் எதிர் பார்த்தபடி வேடங்கள் இங்கே கிடைக்கின்றனவா?**

எனக்கு அப்படி தோன்றவில்லை. உண்மையை சொல்ல வேண்டும் என்றால் மலையாளத்தைப் போலவே இங்கும் எனக்கு வித்தியாசமான கேரக்டர்கள் கிடைத்திருப் பதாக வே நினைக்கிறேன். மலையாளத்தில் மாறுபட்ட வேடங்களை ஏற்று நடித்திருக்கிறேன். நடித்தும் வருகிறேன். விதவை, திமிர்பிடித்த பெண், சி.பி.ஐ. ஆபிஸர், பேய், மாடர்ன் கேர்ள்



(8ம் பக்கம் பார்க்க.....)

அடுத்தவாரம் நடிகை நிரேகாவின் பேட்டி இடம்பெறும்

# "லட்சோபலட்சம் பெண்கள் விட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்- காலம்காலமாக"

## லிவ் உல்மன்

**ஒ**ரு ஆண் ஒரு ரெஸ்டாரெண்டுக்குத் தனியாகப் போகலாம். ஆனால் நான் தனியாகப் போகமுடியாது. பிறரால் விமர்சிக்கப்படாமல் இரக்கப்படாமல், அல்லது சமயங்களில் 'கம்பெனி தரட்டுமா' என்று எவனாவது கேட்காமல்.

நாடக கம்பெனியில் என் சக ஆண் நடிகருக்குத் தரப்படும் சம்பளத்தை நான் கேட்டால் 'அவர் ஒரு குடும்பத்தைத் தாங்க வேண்டியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்' என்று எனக்கு அறிவுரை கூறுகிறார்கள். நான் வைத்திருப்பது குடும்பம் இல்லையா? ஒரு பெண் குழந்தை - ஒரு வீடு - என்று பொறுப்புக்கள் எனக்கு இல்லையா?

ஒரு பெண் தன் தேவைகளுக்கே வேலைக்குப் போனால் குழந்தையை அடுத்தவர்களிடம் விட்டுச் செல்கிற குற்றத்துக்கு - குற்ற உணர்வுக்கு ஆளாகவேண்டியிருக்கிறது. ஆனால் ஒரு ஆணுக்கு - அவர் ஆணாகப் பிறந்து விட்டதாலேயே வேலைக்குப் போவதற்கு உரிமை பெற்றவர்களாகி விடுகிறார். சகஜமாக - எந்தக் குற்ற உணர்வுக்கும் ஆளாக வேண்டியதில்லை.

ஆனால் என் அனுபவத்தில் கண்ட உண்மை ஒன்றுண்டு. பொம்மைவீடு நாடகத்தில் நோராவின் கணவன் ஹெல்மா கடைசி காட்சிகளில் கூறுவான்.

காதலுக்காக - அன்புக்காக - எவனும் தன்மானத்தை விட்டுக்கொடுக்க மாட்டான். நோரா பதில் சொல்வாள்:

லட்சோலட்சம் பெண்கள் விட்டுக் கொடுத்துக் கொண்டிக்கிறார்கள். காலம்



காலமாக.

ஆம். பெண்கள் நேசத்தை முக்கியமானதாகக் கருதுகிறார்கள். எத்தனையோ பெண்கள் வீடுகளைவிட்டு வெளியேறினால் நிச்சயமாக இப்போது இருப்பதைப் பார்க்கிலும் சந்தோஷமாக வாழமுடியும். என்றாலும் அவர்களை வெளியேற்றுவதில்லை. தங்கள் இருப்பைவிடவும் மற்றவர்களுக்கான தங்களின் அன்பும் காதலும் முக்கியமென்று கருதுகிறார்கள்.

### தினக்கதிர் சினிமா

எனக்குச் சில பெண் நண்பர்கள் உண்டு. ஒரு வருடத்துக்கு மேலாக மாலை வேலைகளில் வீட்டைவிட்டு வெளியே போனதே இல்லை அவர்கள். அவர்கள் மாலையில் வெளியே கிளம்ப வேண்டுமெனில் ஒரு பெரிய ஏற்பாடே செய்து முடிக்க வேண்டும். இரட்டைப் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றுவதிலேயே சோர்ந்து போய்விடுகிறார்கள்.

கல்யாணம் என்கிற ஏற்பாட்டுக்குள் போகாதபோது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தை பிறந்தால் அவள் தான் ஒரு சட்ட விரோதமான (1) குழந்தையின் தாயாக - பொறுப்பாளியாக இருந்து தீர வேண்டும்.

பெண்ணை ஒரு ஆணின் பிரசேர்க்கையாக - பின் இணைப்பாக மட்டுமே பார்க்க முடிகிற எந்த விழாவுக்கும் நிகழ்ச்சிக்கும் போவதை நான் நிறுத்தி விட்டேன்.

ஆணுக்குரிய எல்லாத் தேவைகளும் கனவுகளும் பெண்ணுக்கும் உண்டு. காதலுக்காக நாங்கள் ஏங்குகிறோம். எங்கள் காதலைத் தந்துவிடவும் விரும்புகிறோம். ஆனால் அது மனித விழுமியங்களைப் பொறுந்தவரை ஆண்-பெண்ணுக்கிடையில் எந்த வித்தியாசமுமில்லை என்பதை நாம் எல்லோரும் ஒப்புக் கொள்ளும் போதுதான்.

நமக்கென அவரவர் சந்திக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. அவை இருக்கட்டும். பிரச்சினைகளோடேயே நாம் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் ஒருவருக்கு மற்றவர் பயங்கரமானவராகவோ அச்சுறுத்தலாகவோ இருப்பதில்லை. ஒருவருக்கு மற்றவர் பரஸ்பரம் தேவை என்பதை உணர்கிற பொழுதில்.

லின் பிறந்த சமயத்தில் நான் உணர்ந்த பாதுகாப்பு உணர்வை என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியாது. இனி என்ன? எப்போதும் ஒரு ஆணின் கையைப் பற்றிக் கொண்டே நடந்து கொண்டிருக்க வேண்டியதில்லை.

நானும் லின்னும் இனி பேசுவோம்.

ஒருவருக்கு மற்றவர் எந்த மூடாக்கும் இல்லாமல் உண்மையான முகங்களோடு பேசுவோம். சிரிப்போம். சேர்ந்து உறங்குவோம். எனக்குக் கிட்டாத பாதுகாப்பையும் மென்மையான அன்பையும் அவளுக்கு நான் தர வேண்டும்.

....இப்போது நானும் லின்... கையைப் பற்றியும் மரணத்தைப்... பேசுகிறோம்.

நான் சோகமாக இருக்கும் தரு... களில் ஒரு சிந்தனைநடை **(Think-Walk)** போகச் சொல்லின் எனக்கு யோசனை சொல்கிறாள். அப்படி தனியாக நடந்துவிட்டு வந்தால் சோகம் போய்வருமாம். இந்த வயசிலேயே தனிமை அவளுக்குக் கற்றுக்கொடுத்த பாடம் அது.

நானும் அவளும் மௌனத்தில் அமர்ந்திருக்கும் போது எல்லாக் கேள்விகளுக்கும் விடை கிடைப்பது போலிருக்கிறது.

**(அடுத்த வாரம் முற்றும்)**

பயிற்சிப்பட்டறை
சிறுகதைத் தொடர் -6

# சுருக்கும் ஊஞ்சலும்

## ரஞ்சகுமார்

வெயில் கொளுத்துகிறது. ஆனிமாதத்து வெயில் மூச்சு விடவே சிரமமாக இருக்கிறது. இங்கே, கல்லாப்பெட்டியில் இருந்துகொண்டு பார்த்தால் கிட்டத்தட்ட கால் மைல் தூரத்துக்கு முன்னால் 'கண்டிவீதி' விரிகிறது. வீதியின் இடது ஓரத்தில், கடைவாசலிருந்து சுமார் நூறுஅடி தூரம் தள்ளி இந்த ஊரின் பெயரைத்தாங்கிய சிமெந்துப் பலகை ஒன்று வெள்ளையாகத் தெரிகிறது. அதன்மேல் இந்த வெயிலிலும் இரண்டு காக்கைகள் உட்கார்ந்து கொண்டு கரைகின்றன. அந்தக் காக்கைகளின் சத்தம் சன்னமாக, காதுக்கு சிரமந்தருவதாக இருக்கிறது. சுறுசுறுப்பாக, அங்குமிங்கும் பறந்துதிரிந்து, இரைதேடும், இந்தக் காக்கைகள் கூட ஓரிடத்தில் சோம்பியிருக்கின்றனவே! அவ்வளவு வெயிலா?

கடைவாசலுக்கு நேரே ரோட்டுக்கு அப்பால் ஒரு கம்பிவேலி. அக்கம்பிவேலிக்கும் ரோட்டுக்கும் இடையில் ஒரு பசுமாடு படுத்துக்கொண்டு அசை போடுகிறது. பக்கத்தில் ஒரு வெள்ளைக் கன்றுக்குட்டி தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு, கண்கள் அரைத் தூக்கம் போலச் செருகிக்கொள்ள, கால்களைப் பரப்பிக்கொண்டு நிற்கிறது. இந்தமாடு எப்போதும் 'ஆவ் ஆவ்' என்று வாய்கொள்ளாமல் புல் மேயுமே? இன்று இதற்கு என்ன வந்தது? ஆறுதலாகப் படுத்திருக்கிறதே? கன்னத்தோலுனுக்கூடாக தாடை எலும்புகள் பீறித்தெரிய மெதுவாக இது அசை போடுவதைப் பார்க்க, ஒரே சினமாக இருக்கிறது.

கம்பிவேலிக்கு அப்பால் சிறிய வயல்வெளி. அவ்வயல்வெளியின் மத்திய மஞ்சளாகவும், சற்றுப் பெரிதாகவும் காட்சியில் ளிக்கிறது. 'அப்போதிக்கரி ஆசுப்பத்திரி' வயல் வெளியில் நான் வந்திறங்கிய போது சிறிய பூண்டாக இன்னசெடி என்று அடையாளம் காணமுடியாத நிலையிலிருந்த சணல் இப்போ வேலியளவுக்கு வளர்ந்து மஞ்சட் பூக்களுடன் குலுங்கிச் சாய்கிறது. ஆசுப்பத்திரி விறாந்தையில் ஓடலி பரமசிவம் இருந்து சுருட்டுப் பிடித்துக்கொண்டிருக்கிறார். கால்கள் இரண்டையும் அகட்டிப்போட்டுக்கொண்டு, வாங்கில் முதுகு சாயுமிடத்தில் கைகளை வீசிப்போட்டுக்கொண்டு தலையைக் கவிழ்த்துக்கொண்டுதான் இருக்கிறார். சுருட்டுப்பிடிக்கிறாரா இல்லையா என்பதே சந்தேகமாக இருக்கிறது. குரங்கு தூக்கத்திலிருந்து விழிப்பது போல் இடைக்கிடை புகை மெல்ல வருவதுதான் அதை ஊர்ஜிதப்படுத்துகிறது. அவரும் கூட இந்த வெயிலில் சோர்ந்து சுருண்டுபோய் இருப்பதாக எனக்குப்படுகிறது.

ஆசுப்பத்திரிக்கு இடதுபுறம் கொஞ்சத்தூரம் தள்ளி சிவப்பாக அரசாங்க குவாட்டஸ் தெரிகிறது. குவாட்டஸின் முன் விறாந்தையில் இரு தூண்களுக்கு நடுவே ஒரு கயிற்றுக்கொடி கட்டப்பட்டு அதில் சில துணிகள் காயவிரிக்கப்பட்டிருக்கின்றன. சுவரோடு சாய்த்து 'சாயும் இடம்' இல்லாத கதிரை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. காற்றில் ஆடும் துணிகள் மெதுவாக, ஆடிக்களிக்கவே பிரிய மற்றவைபோல, பலவந்தமாக ஆட்டப்படுவதாக எனக்குப்படுகிறது. அனேகமான வேளைகளில் அந்தக் கதிரையில் கனகசிங்கம் கால்மேல் கால்போட்டுக்கொண்டு, தொடையில் ஊன்றிய கையை நாடிக்கு முண்டுகொடுத்துக்கொண்டு, இருப்பதைக் காணலாம். இப்போ அது வெறுமே வெறிச்சோடிக்கிடக்கிறது.

கல்லாவிலிருந்து பின்புறம் திரும்பிப் பார்த்தால் யன்னலினூடாக 'ரெயில்வேலைன்' தெரிகிறது. அதை ஒட்டினாற்போல பற்றையும் மரமுமாக ஒரே காடு. அந்தப் பச்சைக்கு மேல் நிர்மலமான நீல ஆகாயம். பச்சையும் நீலமும் பார்க்கவே சகிக்கவில்லையே. வானத்தைக் கண் கொண்டு பார்க்கவே முடியவில்லையே. வெயில் கண்ணைக் குத்துகிறது. அப்பாடா, வெ்யில்! இந்த வெயில் நாசமாய்ப்போக!'

முன்புறம் இப்படிக் கிட்டவாகக் காடு இல்லை. ஆசுப்பத்திரி, குவாட்டஸ் எல்லாம் தாண்டி பெரியவயல் வெளி. 'லக்ஸ்பான'விலிருந்து 'யாழ்ப்பாணக்குடா' வுக்கு 'கரண்ட்'டைச் சுமந்து செல்லும் நீள நீளமான கம்பிகளும், அவற்றைத் தாங்கி நிற்கும் பிரமாண்டமான 'போஸ்ட்'களும் அவ்வயல்வெளியை ஊடறுக்கின்றன. அதற்குமப்பால் கருநீல நிறமாகத்தான் காடு தோன்றுகிறது, எங்களூரில் தொலைதூரப் பனைகள் காட்சியளிப்பதும் ஏறத்தாள இதே காட்சித்தான்.

மேலே கூரைக்குத் தகரம் தான் போட்டிருக்கிறார்கள். அதனால் ஒரே வெக்கையாக அடிக்கிறது. அடிக்கிற வெக்கையில் முகம் கருகிவிடுமாற்போல் எரிந்து தள்ளுகிறது. போதாத குறைக்கு பின்னாலிருந்து 'பொய்லர்' சூடு முதுகை எரிக்கிறது. தண்ணீர் கொதிக்கும் 'தளதள' சத்தம் வேறு காதுக்கு நாராசமாக இருக்கிறது.

கண்டி வீதியில் செருப்புச்சத்தம் 'சர சர' என கையில் பிரப்பங்கூடையுடன் கருணே நடந்து போகிறான். அதற்குள் 'போத்தில்'கள் இருக்கும். போகிற போக்கில் அவன் மெல்லி தாக என்னைப்பார்த்துச் சிரித்துக்கொண்டு போகிறான். வெயில் வெக்கையில் கண்ணையும், முகத்தையும் இறுக்கிக்கொண்டு, அவன் வேண்டா வெறுப்பாக சிரிப்பதைப் பார்க்கப் பாவமாக இருக்கிறது.

இப்படி அவன் போகிற பாதையில் சிறிதுதூரம் போனால், 'முதுபண்டா' வின் தச்சு வேலைக்கொட்டிலுக்கு முன்னால் சிறு பற்றைகளுக்கு இடையில் உள்ள பழுதடைந்த கிணற்றின் 'மிதி'யில் அவன் இந்தப் பிரப்பங் கூடையுடன் உட்கார்வதைக் காணலாம். 'இரண்டு ரூபா, ஐந்து ரூபா' பேர்வழிகள் அடிக்கடி அவனிடம் வருவார்கள். ஒருதடவை போலிசிடம் கூட அகப்பட்டிருக்கின்றான்.

அப்போ இப்போதைக்கு வரமாட்டார். வந்தால் நான் கொஞ்சம் தூங்கலாம். வர இரண்டு மணியாவது ஆகும். இப்போது நேரம் பன்னிரண்டுற்குள்தான் இருக்கும். நேரம் பார்ப்பதற்கு கடை மணிக்கூட்டை நம்ப முடியாது.

உள்ளே குசினியிலிருந்து தேங்காய் துருவுகிற சத்தம் கேட்கிறது. யாரோ இரண்டு பேர் துருவுகிறார்கள் போல இருக்கிறது. யாராக இருக்கும்? சமையல்காரனும் சிரிபாலாவும்தான். சிவலிங்கம் தான் இங்கே முழங்கையை முண்டு கொடுத்துக்கொண்ட மேசையில் தூங்கிவழிந்து கொண்டிருக்கிறானே. சின்னவன் அப்பாவுடன் சந்தைக்குப் போய்விட்டான்.

இது ஒரு சனியன் பிடித்த ஊர். சந்தைக்குப் போவதானாலும் எட்டுமைல் தூரம் பஸ்ஸில் போகவேண்டும். எனக்கு இப்போதுள்ள நிலையில் பஸ்ஸைப்பற்றி நினைக்கவே எரிச்சலாக இருக்கிறது. அதிகம் ஏன்? கக்கூசுக்குப் போவதாக இருந்தாலும் பின்னால் ரெயில்வே லைனைக் கடந்து, காட்டுக்குள்தான் போகவேண்டும். எனக்கு ரெயில்வே லைனைப் பார்க்கவே பயமாக இருக்கிறது. ஆயினும் என்ன செய்வது? இயற்கைக் கடனை நிறை வேற்ற நானும் ரெயில்வே லைனைக் கடந்து தான் தீரவேண்டும்.

நெடுக இப்படிக் காட்டையும் ரோட்டையும் பார்த்துக்கொண்டிருக்கச் சலிப்பாகத்தான் இருக்கிறது. இந்த ஒருமணி நேரமாக ரோட்டிலும் வாகன நடமாட்டங் குறைவு. அப்படியிருந்தால் வியாபாரமாவது சுறுசுறுப்பாக இருக்கும்.

யாராவது பேச்சுத்துணைக்கு இருந்தால் பரவாயில்லை. சிவலிங்கத்தைக் கூப்பிடலாமா? வேண்டாம். பாவம்! அவன் இரவு படுக்கப் போனபோது நேரம் இரண்டு மணியிருக்கும். அதுதான் இப்போது தூங்கி வழிகிறான்.

ஐஸ் மாதிரிக் குளிராக ஏதாவது குடித்தால் நல்லது. சோடா...... வேண்டாம்...... செலவு கூட. இளநீர்.... குடிக்கலாம்..... என்ன செய்வது? கத்தி எடுக்க சிவலிங்கத்தைத் தான் அருட்ட வேண்டியி ருக்கிறது.

"சிவ லிங்கம்.... சிவலிங்கம்....டேய்"

அவன் மெல்ல அருண்டு விழிக்கிறான். சிவந்த கண்ளைக் கைகளால் தேய்த்து, கொட்டாவி விட்டுச் சோம்பல் முறித்துக்கொள்கிறான்.

"எண்ண, சிண்ண மொதலாளி"

"குசினிக்கைபோய் சின்னகத்தி ஒண்டு எடுத்துக் கொண்டந்து ஒரு இளநீ வெட்டித் தா.... போ"

இவன் அரைச் சிங்களவன். தாய் சிங்களத்தி, தகப்பன் இந்தியத் தமிழன். அதுதான் தமிழ்ப்பெயரும் சிங்களக்கதையுமாக இருக்கிறான்.

அணைந்து போயிருக்கின்றது.

"விளக்கு நூந்து போச்சுத்தம்பி" சிவலிங்கத்திடம் சொல்லிக் செய்விக்கலாம் தான்: அவன் பாவம்! மீண்டும் மேசையில் தூங்கி வழிகிறான். எனக்கும் எழச் சோம்பலாக இருக்கிறது.

"இப்படி உள்ளைவந்து பொயிலர் நெருப்பிலை பத்துங்கோ. அல்லது உப்பிடி உந்தக்கூரைத் தகரத்திலை பிடியுங்கோ எரியும்"

என்னுடைய நகைச்சுவைக்காக ஏதோ கடமைக்காகச் சிரிப்பதுபோல் சிரித்துவிட்டு, சிகரட்டைக் கொழுத்திக்கொண்டு மெதுவாக குவாட்டஸை நோக்கி நடக்கிறார் அவர்.

மீண்டும் வெறுமை. ஒரே எரிச்சலாக இருக்கிறது. ரேடியோவைத் திருகுகிறேன்.



அதோ, அந்தப் பெயர்ப் பலகையருகில் கனகசிங்கம் வருகிறார். எங்கோ, இந்த வெயிலில் போய் விட்டு களைத்து விழுந்து, வியர்த்தொழுக 'டியூட்டி யூனிபோம்' உடன் வருகிறார். இந்தப் 'போறஸ்ற் காட்' வேலை கூடச் சிரமந்தான். காட்டுக்குள்ளே தனியாக அலையவேண்டும்.

ஆனால் கனகசிங்கம் அப்படியல்ல. குவாட்டஸிலேயே அந்தக் கதிரையில் இருந்து கொள்ளுவார். எப்போதாவது ஒருநாள் தான் அத்தி பூத்தாற்போல் டியூட்டி யூனிபோம் உடம்பில் ஏறும்.

சிவலிங்கம் குசினிக்குள்ளிருந்து நன்கு சீவிவெட்டிய இளநீருடன் வருகிறான். சிங்கள வணாகியபடியால் 'குறும்ப' வெட்டிப் பழகிய கையால் ந்ல்ல அழுத்தமாக வாய்பொருத்திக் குடிக்க ஏதுவாக இளநீர் வெட்டித் தருகிறான். ஆனால், இதைத் தூக்கிக் குடிக்கவே பெரிய சோம்பலாக இருக்கிற்து எனக்கு!

கனகசிங்கம் நேரே இங்கேதான் வருகிறார். சிகரட் வாங்கவாக இருக்கும். வாசலில் ஏறும்போதே "சூ.... சரியான வெயில்" என்று அலுத்தபடியேதான் வருகிறார்.

"போறேசஸ் ஒண்டு தா.... தம்பி.."

இலாச்சியை இழுக்கவே அலுப்பாக இருக்கிறது. வேண்டா வெறுப்பாக சிகரட் விற்பனை நடத்துகிறேன். அவர் சிகரட்டைப் பற்ற வைக்க சதா எரிந்துகொண்டிருக்கும் விளக்கண்டை போகிறார். அது

( 11 பக்கம் பார்க்க..........)


## தினக்கதிர் ஆதரவுடன்.........

**மண்முனை வடக்குப் பிரதேச செயலகம் ஒழுங்கு செய்துள்ள**

### "சிறுகதைப் பயிற்சிப் பட்டறை"

**விண்ணப்பப்படிவம்**

1. முழுப்பெயர்:-..........................................
2. முகவரி:-..........................................
3. பிரதேச செயலகம்:-..........................................
4. கிராம சேவகர் பிரிவு:-..........................................
5. பிறந்த திகதி:-..........................................
(01.03.2001 அன்று) வருடம்:-............ மாதம்:-............ நாள்:-.........
6. கல்வி பயிலும் பாடசாலை/தொழில் செய்யும் இடம்:-..........................................

..........................................

மேற் கூறிய யாவும் உண்மையென உறுதிப்படுத்துகிறேன்.

..........................
கையொப்பம்

திகதி:......................

தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிறுகதைப் பயிற்சிப் பட்டறை-2001" என எழுதப்படவேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:-**
**கலாசார உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம்,**
**மண்முனை வடக்கு,**
**மட்டக்களப்பு.**

** இப்பகுதியில் வெளியாகும் கதைகளை சேகரித்து வைக்கவும்*

# சுருக்கும் ஊஞ்............

(10ம் பக்கத் தொடர்ச்சி.....)

ஏதோ கிரிக்கெட் நேர்முக வரணனை நடக்கிறது. இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்கும் 'டெஸ்ட்மச்' நடப்பதாக கனகசிங்கம்தான் நேற்றுச்சொன்னார். "வெங்கட்ராகவனின் பந்துவீச்சுக்கு' யாரோ ஒரு நியூசிலாந்துக்காரன் பௌண்டரி அடித்ததாக" அறிவிப்பாளன் அறிவிக்கின்றான். வெங்கட் தமிழன். ஒரு தமிழனின் பந் துவீச்சுக்கு அந்நியன் ஒருவன் அடித்தானாம் பௌண்டரி! தமிழனுக்குச் சோம்பலா? சே.... இந்த அறிவிப்பாளனின் கரகரத்த சோம்பலான குரலைக் கேட்கவே பற்றிக்கொண்டு வருகிறது. ரேடியோவை வெறுப்புடன் மூடுகிறேன்.

✽✽✽

தூரத்தே யாரோ மஞ்சள் நிற ஜப்பான் குடையுடன் வருகிறார்கள்.

ஜப்பான் குடைதான் இப்போது 'பாசன்'

பெண்கள் தான் அதிகமாக ஜப்பான் குடை பாவிக்கின்றார்கள். எதிரே வருவதுகூட ஒரு பெண்ணாக இருக்கலாம். இருக்கலாம் என்ன பெண்ணேதான்.

மஞ்சளுக்குக் கீழே சிறிது இடை வெளிவிட்டு மெல்லிய....... மிக மெல்லிய சிவப்பாகத் தெரிகிறது. ரோட்டின் கறுத்தப் பின்னணியில் மஞ்சளும் மென்சிவப்பும் நல்ல எடுப்பாக இருக்கிறது. அந்த மென் சிவப்பு, அப்பெண்ணின் ஆடையாக இருக்கும்.

மினிகவுண்தான் இப்போது 'பாசன்'

இவளுக்குத் தூரத்தே நின்று பார்க்க இது அழகாகத் தான் இருக்கிறது. கிட்டவர நன்கு பார்க்கலாம். முகத்தையும் பார்க்கலாம்.

அழகாக இருப்பார்களோ? அழகாகத் தான் இருப்பாள். அதையே நான்.... நான் மட்டுமென்ன, எல்லோரும் விரும்புகிறார்கள்.

இந்த வெயிலில் நடந்து வருகிறாளே! பாவம்! சுடாதா?

குதிச்சப்பாத்துப் போட்டிருப்பாள்.

குதிச்சப்பாத்துப் போட்டால் வேகமாக நடக்க முடியாது. அதுவும் நல்லது. சில பெண்களுக்கு அதுவே ஆற அமர... நிதானமாக நடக்கப்பழகுகிறது.

இந்தப் பெண்ணின் நடை நன்றாயிருக்கிறது. மிக நன்றாகயிருக்கிறது. அன்ன நடை என்பார்களே! அதுமாதிரி.

இப்போது அவள் அந்தப் பெயர்ப் பலகைக்குக்கிட்ட வந்துவிட்டாள். நல்ல நிறம். நான் பெண்கள் எந்த நிறத்தில் இருக்க வேண்டுமென எண்ணுவேனோ? அந்த நிறம்.

இன்னும் கிட்டவந்தால் ஏன் கடைக்கே வந்தால்....? நன்றாகப் பார்க்கலாம்.

இந்த நேரத்தில் எங்கே வருகிறாள்? ஆசுபத்திரிக்காக இருக்கும். அந்த அழகான பெண்ணுக்கு ஆசுப்பத்திரக்குப் போகுமளவுக்கு நோயா?சீ..... கூடாது. அப்படியிருப்பதை நான் விரும்பவில்லை.

இப்பொழுதுதான் நன்றாகக் கவனிக்கக்கூடியதாக இருக்கிறது. குழுகுழு கண்ணாடி மாட்டியிருக்கிறாள். சிவந்த முகத்துக்கு கறுத்தக் கண்ணாடி எடுப்பாக இருக்கிறது.

ஆமாம். இந்தச் சனியன் பிடித்த ஊரில் கூட இப்படிப்பெண்கள் இருக்கிறார்களா? ஏன் இருக்கக்கூடாது. ஒரு வேளை இவர்கள். இப்பெண்ணின் குடும்பத்தினர் என்னைப்போல் வெளியூர் காரர்களாக இருக்கலாமல்லவா? இங்கே 'பாம்' ஏதாவது....

என்ன! இவள் கடைக்கல்லவா வருகிறாள்?

நான் சற்று உஷாராக இருக்க வேண்டும். இப்படி இருந்தால் எப்படி? அதுவும் ஒரு அழகான பெண்ணுக்கு முன்னால்.

கடைவாசல்படி சொஞ்சம் உயரம். அதில் ஏறும் போது அவளுடைய குதிச்சப்பாத்து வழுக்கப்பார்க்கிறது. வாசல் தூணைப் பிடித்துக்கொண்டு சமாளித்துக்கொள்கிறாள்.

"கவனம்.... பார்த்து வரக்கூடாதா?"

"**Its alright thank You**"

ஆகா மதுரமான குரல்...... இவள் 'இங்கிலீசு' தெரிந்தவள். நானும் எனக்குத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளவேண்டும்.

"**What do you want**"

"சோடா ஒண்டு தாங்க"

சோடா என்று சொல்லும்போது சாயம் பூசிய, சிறிய அளவான உதடுகளின் பின்னணியில் முத்து வெள்ளைப் பற்கள்... வடிவமே முத்துப்போலச் சிறிதான பற்கள் நன்றாக இருக்கின்றன. சோடா கொடுக்க சிவலிங்கத்தை எழுப்பலாமா? வேண்டாம். நானே கொடுக்கலாமே! எழுந்த வேகத்தில் பாதி திறந்திருந்த இலாச்சி தொடையைப் பதம் பார்க்கிறது. கனகசிங்கம்..... அவரால் தானே இலாச்சி திறக்க வேண்டி வந்தது..... அவர் பாழாய்ப்போக.....

"அம்மாடி" என்றவாறு திரும்ப உட்கார்ந்து கொள்கிறேன். அவள் முன்னாலிருந்த 'சோடா ராக்' கிலிருந்து சோடா ஒன்றை எடுக்கிறாள்.

"பரவாயில்லை **opener**, ஐத் தாங்க... நானே உடைக்கிறேன்"

எடுத்துக்கொடுக்கிறேன். நல்ல காலம் அது கையெட்டும் தூரத்திலேயே இருக்கிறது. இல்லாவிட்டால் அவள் முன்னாலேயே நொண்டி.... நொண்டி... சீ..... வெட்கக் கேடு.

சோடா குடிப்பதற்காகப் போலும், கண்ணாடியைக் கழற்றிக்கொள்கிறாள். நல்ல பெரிய விசாலமான கண்கள். உதட்டுக்குச் சாயமிட்டவள், கண்ணுக்க மையும் இட்டிருக்கலாமே! இட்டிருந்தால் இன்னும் அழகாக இருந்திருக்கும்.

"எவ்வளவு காசு"

"ஒண்டிருபது தாங்க...."

காசு தரும்போது தான் கவனிக்கிறேன். கையில் மெல்லிய பூனை மயிர்கள். அது சுறுசுறுப்பாக இல்லாமல் உடலின் நிறத்திலேயே இருக்கிறது. அதுவும் ஒரு அழகு தான்..... காலிலும் இருக்கும். எட்டிப்பார்க்கலாமா? சீ.... அவள் என்ன நினைத்துக்கொள்வாள்....?

நான்தான் அவளையே பார்க்கிறேனே! அவள் என்னைக் கவனிப்பதாகவே காணோம்.....

முகத்தைக் கைக்குட்டையால் ஒற்றித்துடைக்கிறாள். திரும்ப அதை மடிக்கும் போது... நான் நினைத்தது நடக்கிறது. கண நேரம்தான். கண்களைத் திருப்பிக்கொள்கிறாளே! ஆமாம். இப்படியான சந்தோச சமாச்சாரங்கள் எல்லாம் கணநேரம்தானா?

இன்னும் நிற்கிறாள். ஏதாவது வேறு தேவைகளும் இருக்கும்.....

"வேறை என்ன வேணும்?"

"வெறும் **Soda bottle** கொடுத்தா..... நல்லது"

"ஓ.... அது நாங்கள் விக்கிறதில்லையே"

"**Oh I See**"

"எண்டாலும் பரவாயில்லை...... உதிலை கிடக்கிற போத்தலை எடுங்க. இன்னும் ஒரு ரூபா தாங்க"

அலுவல் முடிந்து போகும்போது மீண்டும் ஒருதடவை மின்வெட்டு, இப்போது அவள் மெதுவாக சிரிக்கிறதாக எனக்குப் படுகிறது.

✽✽✽

திடீரென பெயர் தாங்கிப் பலகையில் இருக்கும் காக்கைகள் உச்சஸ்தாயியில் கத்துகின்றன. அவை ஆரவாரமாக.... மகிழ்ச்சிப் பெருக்குடன் கரைவதாக எனக்குப்படுகின்றது. அவை இப்போ நெருக்கமாக அமர்ந்து ஒன்றையொன்று கொத்தியும் சீண்டியும் விளையாடுகின்றது.

அந்த மாடு இப்போது எழுந்து நிற்கிறது. அசை போடுவதை நிறுத்திவிட்டது. புல்மேய ஆயத்தமாகின்றதா?.... முதுகில் தொந்தரவு தரும் ஈக்களை வாலால் விளாசி விரட்டுகின்றது. அப்படித்தான் இருக்க வேண்டும். சேரவேண்டியதை எடுத்துக்கொண்டு ஆனந்தமாக....கோலாகலமாக வாழ வேண்டும். ஓ! வாழ்க்கைதான் எவ்வளவு இன்பகரமானது.

அந்தப் பெண் ஆசுபத்திரிக்கேதான் போகிறாள். பரமசிவம் யோகத்திலிருந்து விழித்தெழுகின்றார். போகத்திற்கா? சீ... என்ன அசிங்கமான எண்ணம்.......

குருட்டு 'புக்....புக்...' என்று புகை கக்குகிறது. அந்தப் புகை அப்படியே மேலெழுந்து.... மேலே.... இன்னும் மேலே போய்க் கரைந்து காற்றோடு ஐக்கியமாகின்றது. அப்படிக் கரைவதைப் பார்க்க, எனக்கும் நான் அவ்வாறு மேலே மேலே போகவேண்டம் போல் இருக்கிறது.

குவாட்டஸ் மன் விறாந்தையில் கதிரவன் மேல் வழமையான பாணியில் கனகசிங்கம் உட்கார்ந்திருக்கிறார். கொடியிலுள்ள துணிகள் காற்றுடன் கலந்துறவாடி இன்பப் பெருக்கால் கனகசிங்கத்தின் முதுகில் மெல்ல விறுவிறுக்கின்றன. ஒரோரு சமயம் அவரின் முகத்திலேயே செல்லக் குழந்தையின் விளையாட்டு அடிகள் போலப் பட்டு விலகுகின்றன. அவர் முகத்தில் புன்னகை. அப்படித்தான் இருக்க வேண்டும்..... சதாநேரமும் சிரித்த முகத்துடன். அதைவிட்டுவிட்டு கடுவான் பூனை மாதிரி கடுகடுத்த முகத்துடன்.

கருணே செருப்புச் சத்தம் "சரசர'க்கக் கடைக்கு வருகிறான். ரீ குடிக்கவா? வரட்டுமே! ஒரே வீச்சில் ஒன்பது ரீ அடிக்க மாட்டேனா நான்! அவனும் வெகு உற்சாகமாக இருக்கிறான். சீட்டி கூட அடித்துக் கொள்கிறானே! ஸிக்சரக்கு தீர்ந்துவிட்டதா? காசு சேர்ந்துவிட்டதா? சந்தோசம் கொண்டாட வருகிறானா?

அப்பா இப்போதைக்கு வரமாட்டார். வராவிட்டால் போகட்டுமே! நானிருக்கிறேன். கடையை நடத்த. வேலை செய்வது ஒன்றும் பெரிய கஷ்டமான காரியமில்லையே!

'ரெயில்வே லைனில் கூட்ஸ் ஒன்று போகிறது. கடையே அதிருகிறது.... கடை அதிர... கடையில் நிலம் அதிர... நான் அதிர..... என்னோடு பொய்லர் அதிர..... எதிரே வீதி அதிர..... ஆசுபத்திரி, அந்த பெண் அதிர....ஷோக்கேஸ்கள் அதிர....சிவலிங்கம் அதிர....அதிர... இந்த அதிர்வுகள் கூட இவ்வளவு லயத்தைத் தேங்கி வைத்திருக்கின்றனவே!

இந்தச் சத்தத்தில் சிவலிங்கம், விழித்துக்கொள்கிறான். அவனது சோம்பல் முறியவில்லையோ? சனியன் பிடித்தவன். மத்தியான வியாபாரநேரம் தூங்கி வழிகிறானே!

"சிவலிங்கம்... டே! சிவலிங்கம், என்ன நெடுகத் தூங்கி விழுகிறாய்? போ.... போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வா..... இப்படி நெடுகத் தூங்கிவழிஞ்சா வாறவனும் சாப்பிடாமல் திரும்பிப் போடுவான்...."


ரெயில்வே லைனைக் கடந்து ஒருவன் போகிறான். காலைக்கடனை மத்தியானத்தில் கழிக்க, கூட்ஸ் போன கையோட போகிறான். இவ்வளவு நேரமும் கூட்ஸ் போகட்டும் என்று காத்து நின்றானா? பயந்தாங்கொள்ளி! பயம்... என்ன பயம் சாவதற்கு?..... ஆறிலுஞ் சாவு நூறிலும் சாவு?

இருந்தாற்போல் ரோட்டில் ஒரு பஸ் போகிறது. வேகம் அவ்வளவாக இல்லை. ஆமை வேகத்தில் உருட்டுகிறானே பஸ்ஸை! அடே! சோம்பேறிப்பயலே பஸ்ஸை வேகமாக உன்னால் முடிந்தவரை வேகமாக ஓட்டு! பஸ்ஸைப் பார்க்க எனக்கு பரமானந்தமாக இருக்கிறது. ரோட்டில் சுறுசுறுப்பு விஷம் போல் ஏறுவதாக எனக்குத் தோன்றுகிறது.

ரேடியோவைத் திருகிறேன். சத்தம்..... ஏகச் சத்தம், யாரோ ஸிக்சர் அடித்துவிட்டானாம் யார் பந்து வீசுவது? மடையன். ஸிக்சர் அடிக்கும் படியாகவா பந்து வீசுவது. "வெங்கட்ராகவனின் பந்துவீச்சு" என்று அறிவிப்பாளன் சொல்கிறான். அவனுடைய குரலில் மிகுந்த உற்சாகம் தொனிக்கிறதா? அவனுடைய குரலையும் மீறி சனங்கள் கத்துகிறார்களே! உயரேபோன பந்தைப் பார்த்துக் குதூகல வெறியுடன் அவர்கள் குரவையிடுகிறார்களா? கத்துங்கள் மகா சனங்களே; கத்துங்கள்! உலகமெங்கும் உற்சாகத்தை விதைக்கக் கத்துங்கள்!

வெங்கட் தமிழன்! தமிழன் என்றால் என்ன? எந்தக் கொம்பனாக இருந்தால் என்ன? திறமையைப் பாராட்டியே ஆகவேண்டும். ஸிக்சர் அடித்தவனுக்கு ஜே! ✽✽✽





கவிஞர் பிரபஞ்சப்பிரியன் எழுதும்-

உனக்காக -
செய்ய நினைத்த
எதையுமே
உன்னால் தான்
செய்து முடிக்க
வேண்டியிருக்கிறது
வாழ்க்கையையும் கூட

சங்கர்

# காதல் வெண்ணிலா கையில் சேருமா.......?

அத்தியாயம்-37

திரைப்படம் ஓடிய தைப் போல மனசில் ஓடிய சிந்தனைகள் தடைப்பட்டு சிலிர்த்துக் கொண்டான் ரதன். அவன் கால்களை வந்து நனைத்து விட்டுச் சென்ற கடலலைகள் மீண்டும் மீண்டும்.... கரையை நோக்கி வந்து அவனது கால்களை முத்தமிட்டன. மெல்ல மெல்ல இருள் க்வ்வத் தொடங்கியது.

கடற்கரைக்கு வந்திருந்தவர்களில்.... ஒவ்வொருவராக புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

நிவேதாவைப் பற்றி நினைக்க நினைக்க ரதனின் உள்ளம் ஆத்திரப்பட்டாலும் கூட அவள் மேல் ஒரு மூலையில் அனுதாபமும் இருந்தது. எவ்வளவுதான் ஆண்கள் ஆத்திரப்பட்டாலும் அன்பு செய்வதில் அவர்கள் பெண்களை விடச்சிறந்தவர்கள் அல்லவா? என்னதான் மனசு அவள் மேல் சீற்றம் கொண்டாலும் அந்தக் காதல் அனுபவங்கள்.....ஒருவர் மடியில் ஒருவர் தலை சாய்த்து கலந்திருந்த அனுபவங்கள். காதலில் கூட போட்டி போட்டு காதலித்த நாட்கள்....... இன்று எல்லாம் வெறும் கனவாகிப் போயினவோ...?

நிவேதாவுக்கு நடந்த அந்த விபத்துக்குப் பிறகே அவள் தன்னிடம் இருந்து ஒது



ங்கத் தொடங்கியது அவனுக்குப் புரிந்தது. தான் எந்தச் சூழ்நிலையிலும் அவளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தாலும் அவள் தனக்குள்ளேயே சில கேள்விகளை எழுப்பிக் கொண்டு அதற்கு விடை தெரியாமல் அவதிப்பட்டதும் அவனுக்குத் தெரிந்தது.

தூரத்தே திருக்கோணேஸ்வர ஆலய மின் விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. ரதனின் கைகள் கடற்கரை மணலை அளைந்து கொண்டிருந்தது. மனசோ தான் படித்த கவிஞர் தேவதச்சனின் கவிதை வரி ஒன்றை அசை போட்டது.

**அவரவர் கைமணலைத்**
**துழாவிக் கொண்டிருந்தோம்.**
**எவரெவர் கைமணலோ**
**இவை என்றேன்.**
**ஆம் எவரெவர் கைமணலோ**
**இவை என்றான்.**
**பிறகு மணலை கை கழுவிட்டு-**
**எங்கோ சென்றோம்.**

அந்தக் கவிதையைப் பற்றி நினைத்தபடியே தற்செயலாக திரும்பியவன் தூரத்தில் நிவேதாவைப் போல் ஒரு பெண் வருவதைக் கண்டு உற்றுப் பாத்தான்.

சந்தேகமேயில்லை. அது நிவேதாதான்.

எப்படியோ தான் கடற்கரைக்கு வந்திருப்பதை அறிந்து தன்னைத் தேடிவருகிறாள் என்பது அவனுக்குத் தெரிந்தது.

நிவேதா ரதனுக்கு அருகில் வரவர அவனது முகத்தில் தெரிந்த அந்தப்புன்னகை அவனுக்குள்ளும் ஒரு புது ரத்தத்தைப் பாய்ச்சியது.

நீண்ட நாள் பிரிவல்லவா.......அது...?

ஆம்.....

காதலர்களுக்கு சில நிமிட பிரிவு கூட பல கால பிரிவல்லவா....? அந்த நிகழ்வுக்குப் பின்னர் அவர்கள் அடிக்கடி சந்தித்துக்கொண்டாலும்... அவர்கள் ஒருவரை ஒருவர் நேசித்த காலங்கள் அல்லவா..... அவர்கள் சுவாசித்த காலங்கள்?

ரதனின் பக்கத்தில் அமர்ந்து கொண்ட நிவேதா.... அவனது கரங்களைப் பிடித்து மெல்ல அழுத்தியபடி விசும்பத் தொடங்கினாள். சிறு பிள்ளையைப் போல் அவள் அழத்தொடங்கியதும் அவளைப் பார்க்கவே ரதனுக்குப் பாவமாக இருந்தது.

''நிவேதா.... என்ன இது..... என்ன நடந்தது....?'' அவன் கேட்கவும் ..... தனது கைப்பைக்குள் இருந்த கடிதத்தை எடுத்து அவனிடம் கொடுத்து.... ''என்ன மன்னிச்சிடுங்க ரதன்....நீங்க.... எவ்வளவு சொல்லியும் ....கேட்காம..... எனது முடிவில பிடிவாதமா இருந்தன்.....தயவு செய்து என்னக் கோபிக்காதிங்க.....''

''சீ... பைத்தியமா... உன் மேல் எனக்கென்ன கோபம்.....உனது செய்கையின்... முடிவ நீயே உணர்ந்து கொள்ள வேண்டும். அதுவரைக்கும் நான் காத்திருப்பம் என நினைத்திருந்தன். இப்போ நீயே அத உணர்ந்திட்டாய்....'' என்றவாறே ரதன் அக் கடிதத்தைப் பிரித்துப்படித்தான். அது நிவேதாவுக்கு விமலா எழுதியிருந்த கடிதம்.

கடிதத்தைப் படித்து முடித்ததும்....... அதனை மடித்து நிவேதாவிடமே கொடுத்தான்.

## இறுதிஅங்கம்

''நிவேதா..... விமலா நல்லபொண்ணு. எனது கடிதத்த அவள் சரியாகவே புரிந்து கொண்டிருக்கிறாள். எங்கே இது பெரிய சிக்கலில் தான் முடியுமோ என்ற பயம் எனக்கிருந்தது. அவள் படிச்சவள் என்றபடியால்.... முடிவுகளை ஜீரணிக்கக் கற்றுக்கொண்டிருக்கிறாள்......''

''ஆமா ரதன், நான் தான் இந்த விஷயத்தில கொஞ்சம் தடுமாறிப் போயிட்டன். என்னையும் கவலைப் படுத்தி உங்களது மனதையும் நோகச் செய்திட்டன்.''

''கவலைப்படாத நிவேதா..... நீ..... இப்போதாவது எல்லாவற்றையும் மறந்து என்னிடம் வந்ததே பெரிய வரம். இனிமே எமக்கு பிரிவென்பதே இல்லை.....''

வானத்து வெண்ணிலாவைக் கருமேகங்கள் சில மறைக்க அந்த இடத்தில் ஒரு வகையான இருட்டு பரவியது.

அவனது மடியில் அவனது வெண்ணிலவு தலை சாய்க்க.... அவளது கேஷத்தை வருடிக் கொடுத்தவனாக.... அவள் இதழ்களை நோக்கி தனது இதழ்களைத் தாழ்த்தி னான் ஜெயரதன்.

அதனைப் பார்க்க வெட்கப்பட்டோ என்னவோ கடலலைகள் ஓவென்று ஆர்ப்பரித்து எழுந்து கரைக்கு வந்து இருவரது பாதங்களையும் முத்தமிட்டுச் சென்றது. அவனது காதல் வெண்ணிலா அவனது கைகளில் சேர்ந்தது.

**(முற்றும்)**

---

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உலக அரங்க தினம்

**(கிழக்குப் பலகலைக்கழக நுண்கலைத்துறை நாளை 26.03.2001 - 30.03.2001 வரை ஐந்து நாட்களுக்கு உலக அரங்க தினத்தைக் கொண்டாட இருக்கின்றது. இக் கொண்டாட்டம் பற்றிய சிறப்பு நோக்கு இது)**

**இராமலிங்கம் ஜெகநாதன்**

மேற்கத்தைய அரங்க நிபுணர்களும் அவைக்காற்றுக் கலை சார்ந்த பல்வகை அளிக்கையாளர்களும் 1961ம் ஆண்டிற்கு முன்னரும் 1961ம் ஆண்டிலும் ஹெல்சிங்கிலும்,வீயன்னாவிலும் ஒன்று கூடி உலக அரங்க தினமொன்று நிறுவப்பட வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்திருந்தனர். இதன் விளைவாக 1961ம் ஆண்டு தொடக்கம் உலக அரங்க தினமானது உலகின் எல்லாத்திசைகளிலும் பல்வேறுபட்ட நிகழ்வுகள் மூலம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தகைய ஒரு பின்னணியிலேயே கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையும் 1994ம் ஆண்டிலிருந்து உலக அரங்க தினத்தை கொண்டாடி வருகின்றது.இந்த வகையில் இவ்வருடமும் 26-03-2001ம் திகதி தொடக்கம் 30-03-2001ம் திகதி வரை பல்வகை காத்திரமான நிகழ்வுகளை உள்ளடக்கி இத் தினத்தை கொண்டாட திட்டமிட்டுள்ளது.

உலக அரங்க தினமானது அவைக்காற்றுக் கலைசார் அறிவினதும், செயன்முறையினதும் சர்வதேச பரிமாற்றத்தினை ஊக்குவிப்பதனையும், படைப்பாற்றலை அதிகரிப்பதனையும், அரங்க ஆர்வலர்களுக்கிடையில் கூட்டுறவை அதிகரிப்பதனையும், மக்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தி அவர்கள் மத்தியில் சமாதானத்தினையும் தோழமையையும் வலுப்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டதோடு அவைக்காற்றுக் கலையின் வல்லமை எத்தகையது என்பதனையும் வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. மேற்குறித்த நோக்கங்களை அடிப்படையாக வைத்தே கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் உலக அரங்க தினமும் மிகவும் திட்டமிட்ட வகையில் ஒழுங்கமைக்கப்பட்டது. இம்முறையும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை அதனது உலக அரங்க தின விழாவின் போது அரங்கத் துறையிலிருந்து ஒருவரையே அல்லது வேறு துறையிலிருந்து கொண்டு அரங்கத் துறையில் இதய பூர்வமாக ஆத்மாத்த தொடர்பைக் கொண்டிருக்கும் ஒருவரையோ பிரதம விருந்தினராக அழைத்து அரங்கு மற்றும் சர்வதேச இசைவு பற்றிய அவரது கருத்துக்களை பகிர்ந்து கொள்கின்றது. குறிப்பாக 1999ம் ஆண்டு சிங்கள பட இயக்குனரும் மேடை நாடக நெறியாளருமான திரு. தர்மசிரீ பண்டாரநாயக்காவையும், 2000ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியரும் அரங்குசார் அறிவுப்புலம் கொண்டவருமான பேராசிரியர் எஸ். தில்லைநாதன் அவர்களையும் அழைத்து அவர்களது அரங்கு சார்ந்த கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டது. இது போன்றே இம்முறையும் அரங்கத் துறையில் இதய பூர்வமான ஆத்மாத்த தொடர்பைக் கொண்டிருக்கும் வனவள சுற்றாடல் அமைச்சின் செயலாளர் திரு. நமசிவாயம் பத்மநாதன் அவர்களை தொடக்க விழாவின் பிரதம விருந்தினராக அழைத்து அவருடைய அரங்கு சார்ந்த கருத்துக்களை பரிமாறிக் கொள்ள இருக்கிறது.

உலக அரங்க தினக் கொண்டாட்டமானது இம்முறை கிராமம்சார், நகரம்சார் அரங்க வடிவங்கள் ஒன்றையொன்று நெருங்கி உறவாடும் வாய்ப்பினையும், பல்வகை அவைக்காற்றுக் கலைஞர்களின் கூட்டுறவை அதிகரிப்பதனையும், பல்கலைக் கழகத்திற்கும் சமூகத்திற்குமிடையே ஒரு ஊடாட்டத்தினை தோற்றுவிப்பதனையும், சமூக ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதனையும், நோக்கமாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் களுதாவளை பரசுராமர் குழுவினரின் பறைமேளக்கூத்து, மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் வீதி நாடகம், மலையகக் கலைஞர்களின் மலையக ஆற்றுகைகள், மட்டக்களப்பு இந்துக்கல்லூரி, சிசிலியா பெண்கள் கல்லூரி, கல்முனை கார்மேல் பற்றிமாக்கல்லூரி, களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயம், காத்தான் குடி மீராபாலிகா மகா வித்தியாலயம், கிழக்குப்பல்கலைக்கழக ஆங்கிலப் போதனாப் பிரிவு ஆகிய மாணவர்களின் ஆற்றுகைகள். மட்டக்களப்பு பேகர் ஒன்றியம், ஏறாவூர் அபுசாலி தற்காப்புக் குழு என்பனவற்றின் ஆற்றுகைகள் என்று கிராமம்சார், நகரம்சார், பாடசாலை சார் நிகழ்த்துகைகள், தமிழ், முஸ்லிம், பேகர் சமூக மக்களினது ஆற்றுகைகள், மட்டக்களப்பு, மலையகம் பிரதேச மக்களினது ஆற்றுகை வடிவங்கள் என பல்வகை ஆற்றுகைகளும் சங்கமிக்கக்கூடிய விதத்தில் திட்டமிடப்பட்டுள்ளமை இவ் அரங்கதின விழாவிற்கு மேலும் வலிமை சேர்க்கின்றது.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் உலக அரங்க தினத்தில் ஒவ்வொரு வருடமும் நுண்கலைத் துறையும் தனது தயாரிப்பில் காத்திரமான அரங்க நிகழ்வுகளையும் மேடையேற்றி வருகின்றது. இந்த வகையில் இவ்வருடமும் கிழக்கிசை (இசை ஆரம்), இராவணேசன் (வடமோடி நாடகம்) ஆகிய இரு முக்கிய நிகழ்வுகளையும் ஆற்றுகை செய்ய் இருக்கின்றது. இதில் கிழக்கிசையானது கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிலவி வந்த பல்வகை பாடல்களையும் ஒருங்கிணைத்து தமிழிசையினை மீட்டெடுக்க முற்படுகின்றது. இராவணேச நாடகம் எமது பாரம்பரிய வடமோடிக் கூத்திலிருந்து இன்றைய தேவைக் கேற்ப புதியதொரு அரங்க மரபினை தோற்றுவிக்க முனைகின்றது. இவையிரண்டும் இன்றைய காலத்தின் தேவைகளாகும்.

உலக அரங்க தினத்தின் ஆரம்ப காலம் தொடக்கம் அரங்கு, மற்றும் நடனம் என்பனவற்றில் மேன்மை பெற்றோருக்கான சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. இத்தகைய ஒரு பின்னணியியே கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையும் தனது உலக அரங்க தின கொண்டாட்டத்தின் போது அவைக்காற்றுக் கலைகளில் முதன்மையெய்திய கலைக்காகவே தங்களை அர்ப்பணித்த கலைஞர்களுக்கு தலைக்கோல் விருதினையும் வழங்கி வருகின்றது. இந்த வகையில் இம்முறையும் கூத்துக் கலையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த, அத்துறையில் மேன்மையுற்ற திரு. மு. கணபதிப்பிள்ளை (மூனாகானா) அவர்களுக்கும் நாடகத்துறையில் தனது வாழ்நாளை தியாகம் செய்து, இதயசுத்தியுடன் செயற்பட்ட திரு. ஜனாப் கல்காட் அசானார் ஜவாஹர் அவர்களுக்கும் தலைக்கோல் பட்டம் கொடுத்து கௌரவிக்க இருக்கின்றது.

இவ் அரங்க விழாவின் ஆரம்ப நாளன்றும் இறுதி நாளன்றும் நுண்கலைத்துறையின் பண்பாட்டு இசையணியும் நிகழ்த்தப்பட இருக்கின்றது. இது எமது பாரம்பரிய கலைவடிவமானகூத்தின் தாளக் கட்டுக்களை அடிப்படையாக வைத்து, எமது பாரம்பரிய இசைக் கருவிக்ளான மத்தளம், உடுக்கு, பறை. தம்பட்டை, தாளம், சங்கு போன்றவற்றின் துணையோடு அளிக்கை செய்யப்படுகின்றது.

## கவிதை தேசம்



### மஞ்சணையில் ஓர் மஞ்சள் கிளி!

இருவரும் இறுகினர்
அவள் மார்பில் அவனும்
அவன் மார்பில் அவளும்
படந்தனர்.....
இருவரின் விழிகளும்
மௌனித்துக்கொண்டது
இடைக்குக் கீழ் கைநதி
சலசலத்தது.

பறவைக்கு நீர்
தேவையென்றால்
குளக்கரை நாடும்
கருவண்டுக்கு தேன்
தேவையென்றால்
மலர்களிடம் போகும்
அதுதான் அன்பே!
கரும் காலைப் பொழுதில்
உன்னிடம் வந்தேன்
விடியுமுன் உதித்தெழுந்தேன்.

காதலின் துயர்
உனக்குத் தெரியாது
பருவத்தின் மயக்கம்
பெண்களுக்குப் புரியாது
கனவின் மொழிபெயர்ப்பு
உனக்கு விளங்காது.

இரவின் துயர்
இப்படியாகிவிட்டது
பருவத்தின் மயக்கம் - எனை
பரிதவிக்க வைக்கிறது.
கனவின் மொழிபெயர்ப்பு
உன் காலடியில்
விழவைத்தது
எத்தனையோ துயர்
சுமை எமக்கு.

கனிந்த காதலனே!
எப்படி ஈந்து வந்தீர்
என் அந்தப் புரத்துக்கு
கருவண்டு வராத
என் அந்தப்புரத்துக்கு
குயில் பாடாத இருள்
விடியலில்
நிலவு விலகாத விடி இருட்டில்
எப்படி வந்தீர்?

தேவி!
கரும்பைத்தேடி எறும்புகள்
விண்ணப்பிக்க தேவையில்லை
நிலாவை ரசிக்க கவிஞனுக்கு
எந்தக் கட்டளையும் இல்லை.
மான் இருக்கும் இடத்தில்
மரை வருவது இயல்பு
கனி இருக்கும் இடத்தில்
கிளி வருவது மரபு
நீ இருக்கும் இடத்தில்
நான் வருவது சகஜம்

வேர்களை மரம்
அறிவதில்லையா?
இலைகளை தென்றல்
தொடுவதில்லையா?
புல்லாங்குழல் இசைக்கும்
கலைஞனின் கைவிரல்கள்
அதை முத்தமிடுவதில்லையா?
ஏன்! அச்சம் !!
உன் கருவிழியைப் பார்த்தால்
எனக்குப் போய்விடுமே
பயமெனும் மச்சம்!
அவ்வளவு விருப்பம்
உன்னிடம்.

உண்மையில் நீ
போர்க்களத்தில்
இருந்திருந்தால்
வாளோடு வந்திருப்பேன்
நீ இமாலயத்தின்
சுடுபனியென்றால்

நான் போர்வையாகி
இருப்பேன்
நீ - என் இதய
சாம்ராஜ்யத்தின் காதலி....!
அதுதான் என்
கால்களுக்குத் தெரியாமல்
வந்து விட்டேன்!

காதலனே! தங்களுக்கு
வாள் வீச்சுத்தான் தேர்ச்சி
என்று எண்ணியிருந்தேன்
உங்களுக்கு சொல் வீச்சும்
உதடுகளில் இனிக்கிறதே!
தேவி! வாள் வீச்சைவிட
சொல் வீச்சு இனிது என நீ
அறியவில்லையா?

வாள்வீச்சு போர்க்களத்தோடு
முடிந்துவிடும்
இனிய சொல்வீச்சு எங்கும்
தேவைப்படும் இல்லையா?
காதலியிடம், சபையிடம்,
புலமையிட்டு இப்படி எராளம்.

மேலும் கைகளால்
இறுக அணைத்தான்
அவன் விரல்கள் அவள்
உடலில் சப்தஸ்வரங்கள்
வாசித்தன.

காதலனே!
கொஞ்சம் பொறுங்கள்
மலர்களுக்கு வேர்த்தால்
வண்டுகளுக்கும் வேர்க்கும்
மலர்களுக்கு சூடு என்றால்
வண்டுகளும் சூடுதான்
எனக்கோர் அரிய சந்தேகம்
வையகத்தையே கற்ற
நீங்கள திருக்குறள்
பாமாலையை
மறந்து விட்டீர்களா?
என்ன தேவியென
வினவினான் இளங்குமரன்.

''காலையில் அரும்பி
பகலில் போதாகி
மாலையில் மலரும்
இன்நோய்'' (திருக்குறள்)
என்று பெரும் தலைவர்
திருவள்ளுவர் சொன்னதை
நீங்கள் அறியவில்லை
போலும்.

அறிந்திருக்கிறேன் தேவி!
கலியுகத்தில் காமதேவனின்
விளையாட்டுக்கள் சகஜம்.
பல ஆண்டுகளுக்கு
முற்பட்ட திருக்குறளை
இன்நாளில் ஒப்பிடுவது
சரியல்லவே தேவி!
பெரும் தலைவர்
இன்றைய பொழுதில்
வசித்திருந்தால் எமை
மன்னித்திருப்பார்!
திருக்குறளையும் திருத்தி
எழுதியிருப்பார் தேவி!

''கரும் காலையில்
மலர்ந்து பகலில்
தனிந்து மாலையில்
வாடிப்போகும் இந்த
மலர் எனும்
காம நோய்''

தேவி! வாய்விட்டுச் சிரித்தாள்
இருவரும் பஞ்சணையில்
அரங்கேறினர்.

**வில்சன் சுதாகர்**
**அக்கரைப்பற்று**

## சொந்த மண்ணின் நொந்த கீதங்கள்



அடையாள அட்டை தானே
அரசாங்கம் தந்த உசிர்
அதத்துலச்சா ஊட்டுக்குள்ள - நமக்கு
அடைக்கோழிச் சீவியம்தான்!

காலம்புற போனபுள்ள! - இன்னும்
காணல்லையே பொன்னிமச்சாள்,
ஆளடயாள அட்ட - இந்தா
அப்படியே கிடக்கிறென்ன!

எதமறந்து போனாலும் - இவன்
இத மறந்து போகலாமா?
உதவிழுந்தாத் தானிவன்ட - மூள
உடனடியா வேல செய்யும்.

எந்தத்தடை முகாமுக்குள்ள - தம்பியர்
இருந்து முழிசிறாரோ?
சொந்த மண்ணில் நொந்துநாம
சாகிறதான் கடைசி வழி!

எங்கட புறந்த மண்ணில்
எங்களையே அகதியாக்கி
'சிங்கயா' க்கள் ஆடுமாட்டம்
சீ என்னால் பொறுக்கேலா!

நாடழிஞ்சி நகரழிஞ்சி
நாங்களெல்லாம் அழிஞ்சாலும்
காடழிச்சி ஒரு தமிழன்
குருத்தெடுப்பான் ஓர் நாளில்!

ஆண்டவன்ட பரம்பரைகள்
அழிஞ்சொழிஞ்சி கோகாது!
மாண்டாலும் தமிழ்ரத்தம்
மழலைகளாய் உயிர்த்தெழும்கா!

(தொடரும்...)

**கவிஞர் செ.குணரத்தினம்**

## இலங்கை இன முரண்பாடுகளின் வரலாறு

### நூலாய்வு

**கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி**

"இலங்கையின் இன முரண்பாடுகளின் வரலாறு" எனும் நூலை வீரகேசரி செய்தியாளரான ஜி.நடேசன், மட்டக்களப்பு இந்துக் கல்லூரி நல்லையா மண்டபத்தில் 2000.08.27 அன்று வெளியிட்டு வைத்துள்ளார். புத்தக வெளியீடுகள் " புற்றிசல்" போல் தொடர்வதனால் கூட்டங்கூடுவது இந்தக்காலம் குறைவு. எனினும் இந்நூல் வெளியீடு நடேசனின் நடைமுறையாலும் வீரகேசரி இனப்பற்று மிகுந்த செய்தியாளரானபடியாலும், இவற்றைவிட வருமான வரிக்கந்தோர் சேவையாளரானமையாலும் கூடிய வர்த்தக பிரமுகர்களாலும் விழா சிறப்புற்றமைந்தது. தேர்தல் காலமானபடியாலும் தேவையானோரும் அவாக் கொண்ட முந்தியவர்களும் சமூகம் கொடுக்கத் தவறவில்லை. பொருத்தமான மௌன அஞ்சலியோடு கூட்டம் ஆரம்பமாகி நடந்தது.

நூலின் தார்தம்மியங்களைப்பற்றிச் சிறப்புறக் கூறினார்கள். வீரகேசரி துணை ஆசிரியர் திரு.வி.தேவராஜ் அவர்கள் இந்த நூலாக்கத்திற்கு கூடிய ஊக்கமளித்து உற்சாகப்படுத்தியதோடு உரையும் நிகழ்த்தினார்கள். தமிழினப் பற்றால் நாமும் நன்றிகூறுகின்றோம். பிரதம அதிதியான பேர்ாசிரியர் கி.ப.கழகத்துணைவேந்தர் ம.செ.மூக்கையா அவர்கள் பிரதம உரை நிகழ்த்தினார்கள்.

இலங்கையில் மட்டுமன்றி பிறநாடுகளிலும் யுத்த சூழ்நிலைகளும் அரசியல் கொந்தளிப்புகளும் கொலைகள் முதலியனவும் இருக்கத்தான் செய்கின்றனவென்று சிலவற்றைக் குறிப்பிட்டுக்கூறினார்கள். விசேடமாக தந்தைசெல்வா ஒரு தருணத்தில் "கடவுள்தான் இனித் தமிழைக் காப்பாற்ற வேண்டும்" என்று கூறியதையும், ஈரினத்தைக் கட்டிக்காட்டி, வரலாறு படிப்போர் நம்மிடையே குறைவென்றும் பெருமையுறப் பேசினார்கள். அத்தகைய நிலைமை கொண்ட இந்தப் புத்தகத்தைப்பற்றி எமது சிந்தையிலுதித்தவற்றையும் தொடர்புறக் கூறலாம் எனக் கருதுகின்றேன்.

புத்தகம் எடுத்த எடுப்பிலேயே வடிவத்தோற்றம், முகப்புப்படம் முதலியனவெல்லாம் அழகுற அமை




ந்துள்ளன. புத்தகத்தை வாசித்துக் கொண்டு போகிறபோது ரூபா இருநூறு அல்ல. அதற்கு மேலும் கொடுக்கலாம் என்ற எண்ணத்தை உண்டாக்குகின்றது. எனினும் தட்டிக்கேட்க வேண்டிய தவறுகளையும் சுட்டிக்காட்டத்தானே வேண்டும்.

#### இனப்பற்று:-

எதையும் சிந்தையில் தெளிவுறக்கூடிய பெருந்தலைப்புக்களையும் உள்ளடக்கமான சில தலைப்புக்களையும் கொண்டிருந்தால் வாசிப் போருக்கும், பள்ளியில் படிப்போருக்கும் மிகப் பொருத்தமாக இருக்கும். இனப்பற்று ஒருக்காலம் அடங்கியிருந்தாலும் பிறிதொரு காலம் அவர்களிடமே வீறு கொண்டெழும்.

சேர்.பொன். இராமநாதன் வரலாறு காட்டியுள்ளமை, இனமுரண்பாடுகளுக்கு அமைதியுற்ற ஆரம்பகாலமெனலாம். துட்டகைமுனு கதை, விகாரமாதேவியின் வளர்ப்பு முறையினப்பற்றுக் கதைகளாலே ஆரம்பமாயிற்று. இது பற்றியும் எனது வானொலி நாடகக் கதையொன்று 1950 லே ஒத்திசையின் போதே தடைப்படுத்தப்பட்டது. (அதற்கான ஆதாரமுண்டு) அந்தக் காலத்திலேயே பேரினவாதம் அடக்கமாக ஆரம்பமாகி திரு.டி.எஸ். சேனனாயகா போன்றோரை விட ஆட்சி பிடிப்பதற்காக எஸ்.டபிள்யூ பண்டாரநாயக வெளிப்படையாக 1956 லிருந்து காட்டினார்.

#### மொழி:-

1944ல் மட்டக்களப்பு வி.நல்லையா அவர்களாலே தமிழும் அரச மொழியாக வேண்டுமென்றதால் சிங்களமும், தமிழும் அரச மொழியாகியிருந்தன. நல்லையா பெயரைக் காட்டாது விட்டதேனோ? இனவாதபேதம் 24 மணிதியாலயத்துள்ளே சிங்களம் மட்டும் என்பது சரிதான். அவர் ஆட்சியைப் பிடிப்பதற்காகவே அரசியல் அறிவாளி அப்படி நடந்து 'சமஷ்டியை' ஆதரித்து வந்தார்: இனமுரண்பாடு இதைத் தொடர்ந்து பல கூறியிருப்பது பாராட்டத்தக்கது. கே.எம்.பி இராஜரத்தினம் போன்றோ ரைக் காட்டியமை நெஞ்சில் மறைந்ததை நினைவூட்டியதாகும்.

#### பண்பாடு:-

இன முரண்பாடு உச்சக் கட்டமேறியது. ஸ்ரீமாவோ அரசாங்கத்தில்தான். அதற்கு முன்பு சேனரூராகவிருந்தபோது காலியா [illegible] பிரதமர் கதிரையைக் குறை [illegible] பேசி ஆளில்லாக்கதிரையை [illegible] புறப்படுத்த வேண்டும் என்று [illegible] எம்.பெரேரா போன்றோர் எதிர்ப்புக் காட்டினர்.

கொல்வின் ஆர்.டி.சில்வா தமிழருக்கு உரியவற்றை இந்தப் பாராளுமன்றம் வழங்காவிட் டால் இரண்டாக இந்த நாடு வந்து விடும் என்றெல்லாம் கூறியவரே அரசியல் நிர்ணய சபையில் அர சியல் சட்டத்திட்டத்தை ஆக்கினார். 29 ஆவது சரத்தையும் ஸ்ரீமாவோ அரசால் இல்லாமல் செய்தார்.

(15ம் பக்கம் பார்க்க......)

# மட்டக்களப்பில் வளர்ந்துவரும் ஓவியச் செயற்பாடு சில அவதானிப்புக்கள்

ஓவியம் பற்றிய சிந்தனைகளும் வெளிப்பாடுகளும் மேற்கத்தேய நாடுகளில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே முனைப்புப்பெற்ற போதிலும் இலங்கையில் இது பற்றிய சிந்தனையும் வெளிப்படுத்தலும் மிகவும் பிந்திய நிலையிலே முனைப்புப் பெற்றன. எனினும் வடக்குக் கிழக்கில் இச்செயற்பாடு அண்மைக்காலங்களிலே வளர்ச்சியடைந்து வருவதைக் காணலாம். யாழ்ப்பாணத்தில் மார்க்கும், வின்சர் ஓவியக்கழகமும் 1959 இல் "விடுமுறை ஓவியக்கழகம்" என்கின்ற பாடசாலைக் கற்கை நெறிக்குப்



புறமான சுயமாக இயங்கும் ஓவியங்களைக் கொண்ட குழுவைத் தோற்றுவித்து பல்வேறு வகையான ஓவியப் பரம்பரையை ஏற்படுத்தினார்கள். ஆனால் மட்டக்களப்பில் இவ்வாறான ஒரு ஓவியப்பரம்பரையோ, ஓவியக்கழகமோ இல்லாமல் அண்மைக்காலமாக ஓவியம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதை சில ஓவியங்கள் காட்சிகளினூடாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அதி உயர் ரசனைப் பொருளாகவும் உயர் குழாங்களின் பாவனைப்பொருளாகவும் இருந்த ஓவியங்கள் இன்று கீழ்மட்ட மக்களின் ரசனைப் பொருளாகவும் அவர்களின் அவாவுகைகளின் பார்வைப் பொருளாகவும் கீழ் இறங்கி வந்திருப்பது முக்கியமான அம்சமாகும். இரு வெவ்வேறு தினங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த இவ் ஓவியக் கண்காட்சி பல அதிர்வலைகளையும் நம்பிக்கையையும் ஓவியம் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

கடந்த சிவராத்திரியை முன்னிட்டு "ஓசை ஒளியெல்லாம் ஆனாய் நீயே....." என்ற தொனிப்பொருளில் சிவனை மையப்படுத்திய ஓவியக்கண்காட்சி மட்டக்களப்பு மகாஜனக்கல்லூரியில் ஓவிய சங்கமும், கல்வித் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஓவியக்கண்காட்சியில் சிவனின் பல்வேறு தோற்றங்களும், பாவங்களும் வர்ணங்களும் வெளிப்படுத்தப்பட்டு,

யுத்த காலங்களின் பல்வேறு பரிணாமங்களும், பாதிப்புக்களும் ஓவியர்களின் முழு வெளிப்பாடாகக் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. கமலச்சந்திரன், கிக்கோ, சஞ்சீவ் போன்றவர்களின் ஓவியங்கள் யுத்த காலத்தில் அனர்த்தங்களை தத்துருவமாக வெளிப்படுத்தி பார்வையாளர்களின் மன உணர்வுகளைத் திகைப்பில் ஏற்படுத்தின.

ஓவியர் கிக்கோ தமது ஓவியங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் தான் பார்த்த அவலங்களும், வாழ்வின் மீது ஏற்படும் கேள்விகளும் போர் முழக்கங்களும் தான் எனது படைப்பாக வெளிவந்திருக்கின்றன. எனது கையும், காலுமிழந்த நடராசர் யதார்த்தத்தின் வெளிப்பாடே இன்று எத்தனையோ கோவில்கள் குண்டு வீச்சினால் சிதைந்து போய்க்கிடக்கின்றன. அதன் எதிரொலிதான் என்னுடைய உணர்வலையாக வெளிவந்துள்ளன" என்றார்.

ஓவியர் கமலச்சந்திரன் "சூழ்நிலைதான் ஓவியனை படைக்கத் தூண்டுகிறது. இன்றைய சூழ்நிலைதான் எனது ஓவியமாகிறது என்றார். காட்சிப்படுத்தலில் மாணவர்கள் இளம் ஓவியர்களின் ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் பயிற்சியும், வழிகாட்டலும் இன்மையினால் வரட்சி நிலையே காணப்பட்டன. இந்நிலை யாழ்ப்பாணத்தில் ஓவியர் மார்க்குவின் வருகைக்குப் பின் தவிர்க்கப்பட்டு தனக்கென்றொரு மாணவப் பரம்பலை ஏற்படுத்தினார். ஆனால் மட்டக்களப்பில்

## த.மலர்ச்செல்வன்

துரதிஷ்டவசமாக இவ்வாறான ஒரு மாணவப்பரம்பலை ஏற்படுத்தக்கூடிய ஒரு நபர் இல்லாததும் அடையாளம் காணப்படாததும் மட்டக்களப்பின் ஓவிய வரட்சி நிலைக்கு முக்கிய காரணமாகும். எனினும் ஆசிரியர் கமலச்சந்திரன் தனது பாடசாலையில் சித்திரத்தை ஒரு பாடமாக எடுக்கும் ஒருசில மாணவர்களை நல்ல ஓவியங்களை வரையக்கூடிய நிலைக்கு உயர்த்தினாலும் நல்லதொரு ஸ்திரநிலைக்கு உயர்த்தப்படவில்லையெனவே தோன்றுகிறது.

இதுபோல், கடந்த 5,6,7ம் திகதிகளில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் பாடசாலை மாணவனான நிர்மலவாசன் தனது ஓவியங்களை காட்சிப்படுத்தியிருந்தார். ஓவியங்கள் யாவும் ஆச்சரியமூட்டுவதாகவும் மாணவனின் ஆற்றலை வெளிக்கொணர்வதாகவும் ஓவியங்கள் அமைந்திருந்தன. பல ஓவியங்கள் படஅமைப்பு, சமநிலை, வர்ண இசைவு, ஒத்திசைவு, பாவம் ஆகிய ஓவிய நுட்ப முறைகளுடன் மிளிர்ந்தன. இது மட்டக்களப்பில் இளம் ஓவியர் முளைவிட்டிருக்கிறார்கள் என நம்பிக்கையூட்டியது.

நீண்டகாலமாக பெரும் வெற்றிடமாய் காட்சியளித்த ஓவிய எழுகை இன்று வேறுபட்ட தளத்தில் பாய்ந்திருப்பது மட்டக்களப்பின் ஓவிய பரம்பரையின் எதிர்கால நம்பிக்கையையூட்டுவதாக நிமலவாசனின் ஓவியக் கண்காட்சி அமைந்திருந்தன.


இளம் ஓவியர் நிர்மலவாசன் முறையாக ஓவியம் பயின்ற மாணவரல்ல. கா.பொ.த(சா.த) தரத்திற்காக சித்திரத்தை ஒரு பாடமாகப் பயின்றவர். ஆனால் இளவயதிலிருந்தே தன்னுள் ஓவியம் பற்றிய எழுகை, பற்று, ஆவேசம் குடிகொண்டிருந்ததாகவும் சித்திரப்பாடத்தில் அதி விசேட சித்தி எடுக்க வேண்டுமென்ற ஆசை நனவாகாமல் போக மீண்டும் மீண்டும் முயற்சித்து அதி விசேட சித்தி பெற்றதாகவும், பின்பு பிக்காசோவின் ஓவியம் பற்றிய சிந்தனையும் கருத்துக்களும் தன்னைப்பாதித்ததாகவும் தானும் ஒரு பேர் சொல்லும் ஓவியனாக மாற வேண்டுமென்று பல கொப்பிகளையும், பேப்பர்களையும் நாசமாக்கியதாகவும் கூறும் நிர்மலவாசன் அண்மைக்காலமாக மட்டக்களப்பில் காட்சிப்படுத்தப்பட்ட ஓவியக்கண்காட்சிகள் தான் தன்னை நவீன ஓவியத்தின் பால் ஈர்த்ததாகவும் கூறினார்.

இவரது வருகை ஆச்சரியமானது. மட்டக்களப்பில் (தற்போது சிறந்த ஓவியர்கள் இருந்தும்) எந்த வித ஆலோசனையும், வழிகாட்டலின்றியும் தனிமரமாய் ஒரு நவீனகண்காட்சி செய்வது என்பது பெரும் இமாலயத்துச் சாதனைதான். இவரது பெரும்பாலான ஓவியங்கள் போர்க்கால வாழ்வின் அனுபவங்கள் எதிரொலிகள் தான் ஓவியங்களாகின்றன.

இத்தகையதொரு ஓவியக்கண் காட்சியினூடாக நிர்மலவாசனது படைப்பாற்றல் வெளிவந்தாலும் ஓவியம் பற்றிய தேடலும் பார்வையும் வாசிப்பும் அவசியமாகும். இது பற்றி பிரபல ஓவியர் ஆதிமூலம் குறிப்பிடுகையில் படைப்பில் எல்லையில்லாத் தன்மை கிட்ட, படைப்பாளியின் தேடலும் சோதனைகளும் தொடரவேண்டும். எனும் ஆதி மூலம் தனது இன்றைய ஓவியமாக்கல் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"கன்வன்ஸ் திரைக்கு முன்னால் அதை நோக்கிய படியே இருப்பேன். திடீர் என நான் ஓர் நிறத்தை தெரிவு செய்து எப்படி ஓவியம் உருவாகப் போகிறது என்ற எண்ணம் ஏதுவுமின்றி அந்த நிறத்தைக் கொண்டு வண்ணத்திட்டுக்கள் இழுப்பேன். இதன் பின் நான் இன்னும் ஓரிரு நிறங்களை இனம் காண்பேன். சிலவற்றினூடு செம்மைப்படுத்த முயல. நிறங்களும் தமது தனித்தன்மையை இழந்து, நான் உருவாக்கும் உலகின் ஓர் பகுதியாக பரிணமிக்கும் அநேகமாக பல தடவைகளில் படைப்பின் நடுப்பகுதியில் ஓவியம் தன்பாட்டில் உருவாக ஆரம்பித்து அதன் வழியில் என்னையும் இயங்க நிர்ப்பந்திக்கும். நான் என்னில் எந்தக்கட்டுப்பாட்டையும் கொண்டிராமல் ஓவியத்தின் கருவியாகவே இயங்குவேன். எனது ஓவியங்கள் எல்லாம் ஒன்றின் தொடர்ச்சியே மற்றது. இது சங்கிலித்தொடர் போல் தொடர்ந்து கொண்டே இருக்கும். எப்படிப் போகுதோ அப்படிப் போகும் தான் அதைத் தடுப்பதுமில்லை, இது தான் என்று முன்கூட்டியே தீர்மானிப்பதுமில்லை" என்கிறார்.

ஆனால் இத்தகைய இளைய தலைமுறை ஓவியர்கள் ஓவியத்தில் பாண்டித்துவம் பெறுவதற்கோ, உச்சவளர்ச்சி அடைவதற்கோ எந்தவொரு வசதியற்ற சூழலே உருவாகி



வருகிறது. எனவே இந்தச் சூழலில் ஓவியத்துறையை செம்மைப்படுத்திக் கட்டியமைக்க நலன் விரும்பிகள் முன் வருவதன் மூலம் தான் தமிழர்களின் ஓவியப் பாரம்பரியத்தைக் காப்பாற்ற முடியும்.

❋❋❋❋

## "பேய்க்காட்டல்கள் பலவிதம்"

*மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகள்*
*தோன்றும் போதெல்லாம்*
*ஆளும் கட்சியிலுள்ளவர்கள்*
*அகடவிகடம் பண்ணி*
*மக்கள் கவனத்தை*
*வேறு திசையில் திருப்புவது, மரபானதே*
*ஆனாலும் -*
*இப்போது நடைபெறுகின்ற*
*மாஜிக் வேலைகள் மிகவும் மகத்தானவை!*
*அரச படைகளின் தோல்விகளின் போது*
*வெண் தாமரை இயக்கம்*
*தோன்றி விளையாட்டுக் காட்டியது*
*வெண்புறாவும் அதில் சேர்ந்து கொண்டது*
*சமாதானப் பேச்சுவார்த்தைக் கோரிக்கை*
*உச்சம் பெற்று, சர்வதேச அழுத்தம்*
*கொடுத்த போது*
*சிவப்புப் பட்டியும் சிவப்பு ரோஜாவும்*
*இணைத்து*
*மக்கள் கவனத்தைத் திசை திருப்பின.*
*ஒரு மாத காலம், போர் வீரரைக்*
*கௌரவிப்பதற்கான நிகழ்வுகள் வேறு*
*இந்த இடைவெளிக்குள்*
*வெளிநாட்டுப் பிரமுகர்கள்*
*பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று*
*உண்மையை அறிந்து கொண்டார்கள்.*
*இதற்கிடையில் பட்ஜெட் பூதம்!*
*பட்ஜெட்டை உடனடியாகச்*
*சமர்ப்பிக்க வேண்டும்*
*பட்ஜெட்டின் மூலம் சொல்ல முடியாத*
*வரி உயர்வுகள், வட்டி உயர்வுகள்*
*மக்கள் கொதித்தெழுமுன், ஒத்தடம் வேண்டுமே*
*வந்து சேரந்து*
*வீரமாதா நேத்திர பூஷா!*
*யார்தான் வாய்திறக்க முடியும்?*

"சேவகன்"

*ஊர்வலம்......................*

## கிழக்கின் புகழ் பெற்ற பண்டைக்கால களஞ்சியத் துறையாம்

# சேனைக்குடியிருப்பு

இக்கிராமத்தில் சீர்பாத குடிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. சிறுபான்மைக் குடிகளாக வெள்ளாலன் குடியினரும் காணப்படுகின்றனர். ஒவ்வொரு குடியிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதியைத் தெரிவு செய்து அவர்கள் ஆலயங்களினை நிர்வாகம் செய்வதுடன், தத்தமது குடியாரையும் தமது ஒழுக்கக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு ஊரின் நிர்வாகத்தினையும், சிறப்பாகச் செயல்படுத்துகின்றார்கள். இவர்கள் ஊரின் அமைதி, ஒழுக்கம், நன்மதிப்பு, இன உறவுகள், சமாதானம் போன்றவற்றில் கண்ணும் கருத்துமாக இருந்து தமது ஆயுளை அர்ப்பணிக்கின்றனர்.

தம்பர் காளிக்குட்டி போன்றோரைக் கூறலாம். நாட்டுக் கூத்தில் பேர் பெற்ற கலைஞர்கள் அதிகமானவர்கள். இக்கிராமத்தில் வருடா வருடம் 3 அல்லது 4 புதுப்புது நாட்டுக் கூத்துக்கள் அரங்கேற்றம் செய்து கலைத்திறனை வெளிக்காட்டியுள்ளதோடு சிறந்த கலைஞர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

இந்நாட்டுக்கூத்து, இலக்கியத்துறை, கோலாட்டம், கரகாட்டம் போன்ற துறைகளில் நாகமணி வினாயகமூர்த்தி (புலவர்மணி வினாயக மூர்த்தி) என்பவர் கைதேர்ந்தவராக இருக்கிறார்.

இத்தலைமுறையில் பல மன்றங்கள் தோன்றி நாட்டுக் கூத்தை விடுத்து அத்



தலைமுறைகள் கைவிட்ட பிறகும் நாடக வடிவில் பல நாட் கங்களை (சமயங்களையும்) தன்னிலை தயாரிப்பில் ஆக்கி அதனைச் சிறந்த முறையில் வடிவ

**ஐ. எல். ஜலீல்**

மைத்து மேடையேற்றி வரும் கலைஞர் சிவ ஸ்ரீ மூரு நல்லதம்பிக் குருக்களும் இக் கிராமம் பெற்ற அருள் ஒளி என்றே கூறலாம்.

இக் கிராமத்திலிருக்கும் மாரியம்மன் கோயில், பத்திரகாளி கோயில் திருவிழா உற்சவம் ஆண்டுதோறும் நவராத்திரி ஆரம்பமுதல் 10 நாளைக்கு நடைபெறும்.

அன்னை காளிக்கும் சக்தி வழிபாடு செய்வர். அன்னை மாரியம்மாளுக்கும் சக்தி வழிபாட்டினை செய்வர். இக்கால கட்டத்தில் சேனைக் குடியிருப்புக்கிராமம் ஜொலிக் கும். இரு புனித தலங்களின் நிர்வாகம் வேறாயிருந்தாலும் மிகவும் பக்திப் பரவசத்துடன் கிராம மக்கள் அகமகிழ காட்சியளிப்பர்.

**குடியியல் தரவு:-**

மூன்று கிராம சேவகர் பிரிவுகளிலும் 841 தமிழ் குடும்பங்களினைச் சேர்ந்த 1535 ஆண்களும், 1935 பெண்களும் காணப்படுகின்றனர்.

சேனைக்குடியிருப்புக் கிராமத்தில் மொத்தமாக 3.96 சதுர மைலை சுற்றளவாகக் கொண்ட நிலப்பரப்பிலேயே வசிக்கின்றனர்.

அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கின் மூலம் இக்கிராமத்தில் 1831 வாக்காளர்கள் தகுதியுடையவர்களாகவும், கணவனை இழந்தவர்கள் 175 பேர். இதில் வன்செயல் காரணமாக 25 பேர் விதவையாகி உள்ளார்கள். 40 அனாதைகளும் காணப்படுகின்றனர்.

**கலைத்துறைகளில் பங்கு:-**

வைத்தியத்துறையில், மாந்திரீகத் துறையில் பேர் பெற்றவர்கள் குறிப்பாக விஷ வைத்தியர் சேமன் கந்தையா, மாந்திரீகத்தில் முத்துப்பிள்ளை ஆண்டிப்பிள்ளை,

இப்போதும் அன்னாரால் சோதிடத்தில் நிபுணத்துவம் பெற்று மக்களை கவர்ந்து ஞான சோதிட நிபுணத்துவத்தோடு வைத்தியம் செய்வதும் இக்கிராமம் பெற்ற வரப்பிரசாதமாகும்.

குருக்கள் பரம்பரையை உருவாக்கிய பெருமையும் இக்கிராமத்துக்கு மேலும் அழகு சேர்க்கும் விடயமாகும்.

**(இன்னும் வரும்....)**

**விற்பனைக்கு**

பக்கட்ஐஸ்கிறீம், யோகட், புறூட், றிங், இறைச்சிவகை, முட்டை, மீற் போல்ஸ், சொசேஜஸ், இறால், மீன், கருவாடு என்பனவும் சுத்தமாக வீட்டில் கலப்பின்றி தயாரிக்கப்பட்ட மா வகைகள் (அரிசி, குரக்கன், உழுந்து, கடலை, கோப்பி, மிளகாய், மஞ்சள்) என்பனவற்றின் நம்பகம்,

PAT ENTERPRISES
207, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ.பேசி:-065-25885

# இந்த வாரம் உங்கள் பலன்

## (25.03.2000-31.03.2001)

**மேடம்:-**

(அச்சுவினி பரணி கார்த்திகை 01ம் கால்)

நிம்மதியுண்டாகும். நினைத்த காரியங்கள் சித்தியாகும். கல்வி, தொழில் முன்னேற்றம் அடையும். பணவரவுகள் கடிதத்தொடர் புகழ் கை சேரும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் உண்டாகும். செலவுகள் அதிகரித்துச் செல்லும். எதிரிகளால் ஏற்பட்டு வந்த தொல்லை தொந்தரவுகள் நீங்கும்.

அதிர்ஷ்டநாள்:- செவ்வாய், புதன்

**இடபம்:-**

(கார்த்திகை 2,3,4ம் கால், ரோகினி, மிருகசீரிடம் 1,2ம் கால்)

நோய் கவலை நீங்கும். மனநம்பிக்கை உற்சாகம் உண்டாகும். தொழில் சிறப்படையும். கல்வி விருத்தி பாராட்டுகள் சேரும். திருமணம் கைகூடும். குடும்பத்தில் கலகமும் வீண் பணச்செலவுகளும் ஏற்படும். கடிதத் தொடர்புகள் கிடைக்கும். பொன்பொருள் புதிய தொழில் சேரவாய்ப்புண்டு.

அதிர்ஷ்டநாள்:- வியாழன், வெள்ளி.

**மிதுனம்:-**

(மிருகசீரிடம் 3.4ம் கால் திருவாதிரை புநர்பூசம் 1,2,3ம் கால்)

நோய் தீரும். எடுத்த காரியங்கள் இனிது நிறைவு பெறும். கல்வி தொழில் விருத்தியாகும். பாராட்டு இலாபம் கிட்டும் குடும்பத்தில் அமைதியும் ஆனந்தமும் நிலவும். திருமணம் ஒப்பந்தமாகும். கொடுக்கல் வாங்கல் சிக்கல்களேற்படும். புதிய உறவுகள் சேரும். பொருள் பண்டங்கள் தொலைந்து போகும். அவதானம்.

அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, புதன்

**கடகம்:-**

(புநர்பூசம் 4ம் கால் பூசம் ஆயிலியம்)

கஷ்டம் கவலைகள் குறையும். கல்வி விருத்தியடையும். தொழில் தாபனத்தில் இருந்துவந்த தொல்லை தொந்தரவுகள் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பணத்தட்டுப்பாடு உண்டாகும். புதிய தொழில் காதலி சேரவாய்ப்பு உண்டு. திருமண விசயங்கள் சூடுபிடிக்கும். பெண்ணால் தீமை உண்டாகும்.

அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள்

**சிங்கம்:-**

(மகம், பூரம், உத்தரம் 01ம் கால்)

மனம் சோர்வடையும். பயம் கவலையுண்டாகும். கல்வி, தொழில் எண்ணியபடி விருத்தியாகும். குடும்பத்தில் அமைதி குலைந்து காணப்படும். சோகம் நிலவும். காதல் திருமணங்கள் நடந்தேறும். தூரதேசப்பிரயாணம் கைகூடும். சிறு விபத்து பண நஷ்டம் அவமானம் ஆபத்து உண்டாகும். அவதானம்.

அதிர்ஷ்டநாள்:- வியாழன். வெள்ளி

**கன்னி:-**

(உத்தரம் 2,3,4ம் கால் அத்தம் சித்திரை 1,2ம் கால்)

எண்ணியகாரியங்கள் இனிது நிறைவுபெறும். கல்வி தொழில் விருத்தியாகும். பாராட்டு புகழ் சேரும்.குடும்பத்தில் சந்தோசம் நிலவும். எதிர்பாராத பணச் செலவுகளேற்படும். காதல் திருமணம், வெளிநாட்டுப் பயணமும் கைகூடும். சூட்டு வியாதி விபத்து ஏற்பட வாய்ப்புண்டு. அவதானம்,

அதிர்ஷ்டநாள்:- வியாழன், வெள்ளி

**துலா:-**

(சித்திரை 3,4ம் கால் சுவாதி விசாகம் 1,2,3ம் கால்)

மனக்கவலை குறையும். புதிய தொழில் சேரும். கல்வி தொழில் மந்தமாக இருக்கும். பணத்தட்டுப்பாடு நிலவும். குடும்பத்தில் ஒற்று மையும் ஆனந்தமும் நிலவும். திருமணம் வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடும். பொருளுதவி வாகனம் சேரும். கடிதப் போக்குவரத்துக்களால் தீமையுண்டாகும்.

அதிர்ஷ்டநாள்- வியாழன், வெள்ளி

**விருச்சிகம்:-**

விருச்சிகம்:-(விசாகம் 4ம் கால் அனுஷம் கேட்டை)

சோகம் பயம் கவலை நீங்கும். கல்வி விருத்தியுண்டாகும். தொழில் தாபனத்தில் பலவிதமான அசௌகரியங்களை சந்திக்க நேரிடும். குடும்பத்தில் நிலவி வந்த தப்பவிப்பிராயங்கள் நீங்கும். திருமண விசயங்கள் ஒப்பந்த மாகும். புதிய உறவுகள் சேரும். பணஉதவி சேரும். செல்வாக்கு பெருகும்.

அதிர்ஷ்டநாள்:- திங்கள், செவ்வாய்

**தனு:-**

(மூலம் பூராடம். உத்தராடம் 01ம் கால்)

பயம், கவலை, யோசனை உண்டாகும். அதிக பிரயாசப்பட வேண்டியிருக்கும். கல்வி, தொழில் எண்ணியபடி விருத்தியாகும். புகழ்சேரும். குடும்பத்தில் அமைதி நிலவும். அந்நியரால் ஏமாற்றம் பெண் ணால் அவமானம் உண்டாகும். வீட்டிற்கு உறவினர்கள் வருகை தருவார்கள். பெரியோரால் உதவி உண்டு.

அதிர்ஷ்டநாள்:- புதன். வியாழன்

**மகரம்:-**

(உத்தராடம் 2,3,4ம் கால் திருவோணம் அவிட்டம் 1,2ம் கால்)

மனதிலே பலவிதமான சந்தேகங்கள் தோன்றி மறையும். கல்வி, தொழில் விருத்தியாகும். இலாபம் கிட்டும். பணம் சேரும். புதிய தொழில் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி குலைந்து காணப்படும். மற்றவர்களால் ஏற்பட்டு வந்த தொல்லை தொந்தரவுகள் நீங்கும். பெண்ணால் நன்மை உண்டு.

அதிர்ஷ்டநாள்- சனி

**கும்பம்:-**

( அவிட்டம் 3,4ம் கால் சதயம் பூரட்டாதி 1,2,3ம் கால்)

பலவிதமான கவலைகளேற்படும். கல்வி, தொழில் விருத்தியாகும். இலாபம் புகழ் சேரும். குடும்பத்தில், அமைதியும் ஆனந்தமும் நிலவும். திருமண விசயங்கள் ஒப்பந்தமாகும். தூரதேசம் சென்றவர்கள் நாடு திரும்புவர் பணத்தட்டுப்பாடு ஏமாற்றம் கொடுக்கல் வாங்கல் சிக்கல் உண்டாகும் அவதானம்.

அதிர்ஷ்டநாள்- ஞாயிறு, திங்கள்

**மீனம்:-**

மீனம்:-(பூரட்டாதி 4ம் கால் உத்தரட்டாதி ரேவதி)

மனத்துக்கம் நோய் நீங்கும். புதிய நட்புகள் சேரும். கல்வி தொழில் நன்மை தரும். குடும்பத்தில் உற்சாகம் மகிழ்ச்சியுண்டாகும். பணம் பொன்பொருள் சேரும். காதல் திருமணங்கள் கைகூடும். கடிதத் தொடர்பு கிடைக்கும். உல்லாசப்பிரயாணங்கள் கைகூடும். பணம் தொலைந்து போகும். அவதானம்.

அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, செவ்வாய்

"சோதிடர்"
கோ.இளங்கோகரன்
ஆரையம்பதி

## இலங்கை இன..............................

**(13ம் பக்கத் தொடர்ச்சி.....)**

இத்தகைய யாப்புக்கு மட்டக்களப்பு இராஜன் செல்வநாயகம் அவர்களும் கையொப்பமிட்டாரே. கட்சியொன்றானபடியால் காட்டவில்லையோ?

பாராளுமன்றத்தீர்மானப்படியே அரசியல் நிர்ணயசபை அமைக்கப்பட்டது. ஆனால் வட்டுக் கோட்டைத் தீர்மானம் எந்தப் பாராளுமன்றத் தீர்மானப்படி அரசியல் நிர்ணய சபையாகும்? இக்காலம் கௌரவ சந்திரிகா அம்மையார் கூறுவது சில வேளை அடுத்துவரும் காலத்தில் அமைவுறலாம். எதிர்க்கட்சி ஆட்சிப்பீடத்தில் நிறைவேற்றதிகாரமும் பாராளுமன்றமும் படாத பாடுபடக்கூடும்.

ஆறில் ஐந்து வலுக்கொண்டு ஆட்சிப்பிடித்த "ஜே.ஆர். அவர்கள் "யுத்தமென்றால் யுத்தம்" எனக் கூறியதையும் காட்டவில்லையே! மேலும், 11.07.79 அன்று கொழும்பில் நடந்த மாவட்டத் தேர்தலில் பிரதிநிதிகள் கூட்டுதல் சார்பான "நீதிபதிகள் ஆணைக் குழு" முன்பு நான் மட்டுமே சென்று கூடுதலாக்கும்படி வேண்டினேன். தவறுகள் தொடர்ந்து மறைத்து வந்த கட்சியினர் கொழும்பிலிருந்தும் ஒருதுரை கூட வரவில்லை. இவையெல்லாம் நடேசன் காட்டாமை [illegible]டமை தவறுதலாக இருக்கலாம். தமிழரசார் தம்பட்டம் பல காட்டிய இந்தநூல் எதிர் காலர் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் பயன்படக்கூடியதே! ○○○

# பொதுமக்கள் மீதான தாக்குதலை ஜனாதிபதி தடுத்து நிறுத்த வேண்டும்!

(யாழ் நிருபர்)

**பொதுமக்கள் மீது படையினர் மேற்கொள்ளும் விமானக்குண்டுவீச்சு மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தாது நடவடிக்கை எடுக்குமாறு யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.**

அண்மையில் முல்லைத்தீவுப் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சு, தாக்குதலை கண்டித்தும் அவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறக் கூடாது எனக்கோரியும் ஆயர் தோமஸ் சௌந்தரநாயம் ஆண்டகை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

முல்லைத்தீவுப் பகுதியில் திகதி கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது. இதனால் அப்பாவிப் பொது மக்கள் பலியானதுடன் காயமடைந்துமுள்ளனர். அத்துடன் மக்களின் குடியிருப்புக்களும் உடமைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான ஒரு நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாவண்ணம் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணும் ஒரு நடவடிக்கையாக விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் படையினர் போர் நிறுத்தத்தை கடைப் பிடிக்காவிட்டாலும் இவ்வாறான தாக்குதலையாவது நிறுத்த வேண்டு எனக் கேட்டுள்ளார்.

## யாழ் ஆயர் அவசர கடிதம்



மட்டுநகரில் நேற்று ஒட்டப்பட்டிருந்த அன்னை பூபதியின் 13ம் ஆண்டு நினைவுச் சுவரொட்டிகளை இப்படத்தில் காணலாம். அச்சுவரொட்டிகளில் 13ம் ஆண்டு நினைவாக அன்னை பூபதி (19.03.2001 - 19.04.2001) "தென்றலென நின்ற மகள் தீயாகினாள் தேசமெங்கும் வழிகளில் நீராகினாள்" தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியீட்டுப்பிரிவு அரசியல்துறை மட்டு-அம்பாறை என எழுதப்பட்டு அன்னை பூபதியின் படமும் காணப்பட்டது. சிவப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை, பச்சை ஆகிய ஐந்து நிறங்களில் இச்சுவரொட்டி காணப்பட்டது.

நேற்றுவரையும் மட்டுநகரில் உள்ள அரசடிச்சந்தி, புனித மைக்கல் கல்லூரி சந்தி, லேடி மெனிங் டைவ் வீதீ, கள்ளியங்காடு சேமக்காலை, பொதுச்சந்தை, தாண்டவன்வெளிப்பகுதியில் இச்சுவரொட்டிகள் காணப்பட்டன. சில இடங்களில் இவை அகற்றப்பட்டுமிருந்தன.

படம் - காந்தன்

# கைது செய்யப்பட்ட பெண்கள் இம்சைக்குள்ளாக்கப்பட்டதாக சந்தேகம்

(மன்னார் நிருபர்)

மன்னாரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட இரண்டு குடும்பப் பெண்கள் பாலியல் மற்றும் உள ரீதியான துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

மாந்தையிலுந்து வவுனியாவிற்கு செல்வதற்காக வந்த மேற்படி பெண்கள் மன்னார் உப்புக் குளத்தில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த சமயம் கடந்த திங்கட் கிழமை இரவு 11 மணிக்கு சென்ற கடற்படையினர் இவர்களை கைது செய்து கிளர்ச்சித் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் இவர்களது ஆடைகள் களையப்பட்டு எஸ்லோன் குழாய்களினால் தாக்கப்பட்டதாகவும் பாலியல் இம்சைக்குள்ளாக்கப்பட்டதாகவும் சந்தேகிக்கப்படுவதாக தெரிய வருகிறது.

இவர்களது உடலில் இலேசான கீறல்கள் காணப்படுவதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய போது உடல், உள, ரீதியாக தங்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்த வேண்டாம் என அப்பெண்கள் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

# வதிவிட,பயண அனுமதி! சட்டத்திற்கு அப்பாற்பட்டது

## நீதிபதி இளஞ்செழியன் சட்ட விளக்கம்

(வவுனியா)

வதிவிட அனுமதி "பாஸ்" என்பன சட்டத்திற்கு அப் பாற்பட்ட விடயம் இராணுவ பாதுகாப்பிற்காக மக்கள் ஏற்று நடக்கின்றனர் என்பதற்காகவே பொலிஸார் தாம் விரும்பும் ஆவணங்கள் கொண்டுவர வேண்டும் என எதிர்பார்க்க முடியாது.

இனிமேல் இவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக தண்டிக்கப்படுவார்கள் என வவுனியா மாவட்ட நீதிபதி என்.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு வரும் வெளி மாவட்ட தமிழ் மக்கள் பாஸ் நடைமுறையில் பொலிஸார் கையாளும் விதம் குறித்து நீதிமன்றத்துக்கு முறையீடு செய்ததைத் தொடர்ந்து நீதிபதி இளஞ்செழியன் ஈரற்பெரியகுளம் ரயில் நிலைய சோதனை முகாம்களின் பொலிஸ் அதிகாரிகளை நீதிமன்றத்திற்கு அழைத்து சட்ட விளக்கம் அளிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சுதந்திரமாக நடமாடும் உரிமை அனைவருக்கும் உண்டு அது மனிதனின் அடிப்படை உரிமை இலங்கையின் அரசியல் சட்டத்தில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை மறுக்கும் வகையில் வவுனியாவில் பொலிஸார் நடந்து கொள்வதை நிறுத்த வேண்டும்.

ஈரற்பெரிய குளம் வீதிச் சோதனை முகாம்,வவுனியா ரயில் நிலைய சோதனை நிலையம் ஆகியவற்றில் கொழும்பு மற்றும் நாட்டின் தென் பகுதியில் இருந்து வவுனியாவுக்குள் வருகின்ற தமிழ் மக்களிடம் புதிய புதிய ஆவணங்களை கேட்டதா கவும் அவ்வாறான ஆவணங்களை கொண்டு வராதவர்களை வவுனியாவுக்கு செல்ல விடாது திருப்பி அனுப்பியதாக நீதிமன்றத்துக்கு முறைபாடு கிடைத்துள்ளது.

இவ்வாறான சில பயணிகள் வவுனியாவிற்கு செல்வதற்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அனுமதிப் பத்திரங்களில் வவுனியாவிற்கு மட்டுமே நடமாட முடியும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்கள் திரும்பி செல்ல முடியாதவாறு தடுப்பதன் மூலம் அவர்களை ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது பிரயாணத்தை மேற் கொள்கின்றனர்.என நீதிமன்றத்திற்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

ஜெர்மன் நாட்டு வாசியொருவர் வவுனியாவிற்கு வந்த சமயம் இவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டு ஊழல் நடவடிக்கை மூலம் ஜெர்மன் சென்றுள்ளார்.

இவ்வாறான நிலையில் வதிவிட அனுமதி பாஸ் நடைமுறை என்பன சட்டத்திற்கு அப்பாற்பட்ட விடயமாகும் இராணுவப் பாதுகாப்பிற்காக மக்கள் ஏற்று நடக்கின்றார்கள் என்பதற்காக பொலிஸார் தமது திருப்திக்காக தாம் விரும்பும் ஆவணங்கள் கொண்டுவர வேண்டும் என எதிர் பார்க்கப்ப டுகிறது.

இனிமேல் இவ்வாறு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுகள் வருமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக நீதியின் முன் தண் டிக்கப படுவார்கள் எனத் தெரிவித்தார்.

## பிச்சைப் பொதியால் பீதி

(யூ.முகமட்சரீர்)

நிந்தவூர் பிரதேச சபை வாளாகத்துக்குள் காணப்பட்ட பிச்சைப் பொதி குண்டுப் புரளியை ஏற்படுத்தியுள்ளது.

அனாதரவாகக் காணப்பட்ட இந்தப் பொதியைக் கண்டு ஊழியர்கள் பொலிஸாருக்குக் கொடுத்த தகவலைத் தொடர்ந்து விரைந்து வந்த பொலிஸார் சோதனை செய்த போது பிச்சை எடுப்பவரின் பொதி அது என கண்டுபிடிக்கப்பட்டது.


## வடக்கு .....

ருத்தி காண முன்வர வேண்டும் இதனையே அரசுடன் நடத்தும் பேச்சுகளில் வலியுறுத்தி வருகின்றோம்.அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது.அதற்கு முன்னர் அந்த திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும்.

தற்போதைய போரினால் இலங்கையில் பொருளாதார வளர்ச்சியில்1.2சத வீதம் விரயமாக்கப்பட்டுள்ளது.

போருக்கு செலவிடும் நிதியை போக்குவரத்துக்கு செலவிட்டால் காலனித்துவ நாடுக ளால் செப்பனிடப்பட்ட வீதி முறை களை மாற்றி நவீனமான பரந்த நெடுஞ் சாலைகளை அமைக்கமுடியும்.

தற்போதய போரினால் கால்பங்கு மக்கள் வறுமையில் வாடுகின்றனர்.இவர்களில் 70-90வீதமானவர்கள் வடக்கு கிழக் கை சேர்ந்தவர்கள் ஏனைய மாகாணங்களில் 15 வீதமானவர் களே வாழ்கின்றனர் என தெரிவித்துள்ளது.



மட்டக்களப்பு கல்லடி புதுமுகத் துவாரம் வீதியில் கடந்த அரை நூற் றாண்டுக்கு மேலாக ஆலை, அரச, விருட்ச நிழல்களில் வழிபாடு செய்ப்பப்பட்டு வந்த் கல்லடி புதுமுகத்துவாரம் ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் ஆலயத்துக்குப் புத்தம் புதிதாக கற்றிருப்பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பா விஷேகம் இம்மாதம் 6ந் திதகி திங்கள் காலை 6.45 முதல் 7.41 வரையான சுப முகூர்த்த வேளையில் நடைபெறும்.

## தமிழர்கள் ......

வர்களாக துரத்தப்படுவதற்கான தருணத்தில் நாம் நிற்பதை நீங்கள் அறிவீர்கள். அனைத்தையும் விட துயரமானது இருப்பிடங்களிலிருந்தும் ,வாழ்விடங்களிலிருந்தும்,துரத்தபடுவது என்பதனை நாம் பலமுறை அனுபவ வாயிலாக உணர்ந்திருக்கிறோம். திருமலை வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு இது வாழ்வின் தொடர் கதை போல், இன்று இலிங்கநகர் வரை தொடர்கின்றது.

ஆகவே அனைத்து தமிழ் பேசும் மக்களும், அனைத்து ஜனநாயக சக்திகளும், கட்சிகளும், நியாதிக்க அமைப்புகளும், ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து ஆதரவு வழங்குவது உயிரிலும் மேலான கடமையென வலியுறுத்து கிறோம் என அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்குஇலிங்கநகர் முருகன் கோயிலடியில் இருந்து ஆரம்பமாகின்றது.

## வடக்கு கிழக்...

கல்விப் பணிப்பாளர் இ.சிவானந்தன் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் 11271 ஆசிரியர்களின் பதவியுயர்வு வேலைகள் நடைபெற்று முடிந்துள்ளன. 8900 பேரின் கோவைகள் மாகாண கல்வித் திணைக்களத்தில் தேங்கிக்கிடக்கின்றன. இதற்குக் காரணம் அவர்களின் கோவைகளில் முதல் நியமன கடித்தின் பிரதி, கடமை பொறுப்பேற்றமை பற்றிய கடிதம் என்பன இல்லாமையே. இவை கிடைக்கப்பெற்றதும் அவர்களின் கோவைகளும் பூரணப்படுத்தப் பட்டுவிடும்.

## நேற்றைய தினக்கதிர்

'தினக்கதிர்' நேற்றைய இதழ் பதிப்பக இயந்திரத்தில் ஏற்பட்ட சிறு கோளாறு காரணமாக வெளிவரவில்லை என்பதை வாசகர்களுக்கு தாழ்மையுடன் அறியத் தருகின்றோம்.

-ஆ-ர்-


## வீட்டுக்கொரு மரம் நட்டு நாட்டைக் காத்திடுவோம்

சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் எமது நிறுவனத்தால் நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு மரக் கன்றுகள் விற்பனைக்காக உள்ளன. நிழல் தரும் மரங்கள், நிலத்தைப் பண்படுத்தும் மரங்கள், பழமரங்கள், உங்கள் முற்றத்தை அலங்கரிக்கும் மரங்கள் எனப் பல மரக்கன்றுகள் உண்டு. எம்முடன் தொடர்பு கொண்டு மரங்களை நட்டு நம் தேசத்தைப் பசுமையாக்குங்கள்



கன்றுகளின்விபரமும்விலைப்பட்டியலும்

| | | | |
|---|---|---|---|
| பலா | ரூ.10.00 | நெல்லி | ரூ.20.00 |
| அம்பெல்லா | ரூ.40.00 | பாலைக்கொய்யா | ரூ.25.00 |
| சேபடில்லா | ரூ.40.00 | கொடித்தோடை | ரூ.10.00 |
| ஒட்டுமா | ரூ.75.00 | கொய்யா | ரூ.15.00 |
| ஒட்டுத்தோடை | ரூ.75.00 | ஒட்டுத்தேசி | ரூ.75.00 |
| விலிமா | ரூ.20.00 | வல்லாரை | ரூ.10.00 |
| கறிவேப்பிலை | ரூ.15.00 | செவ்விளநீர் | ரூ.40.00 |
| அசோக் | ரூ.10.00 | சமண்டலை | ரூ.10.00 முதல் ரூ.40.00 வரை |
| [illegible] | ரூ.25.00 | | |
| ரோஸ் | ரூ.50.00 | செவ்வரத்தை | ரூ.25.00 |
| குரோட்டன்,அழகுமரங்கள் | ரூ.25.00 | | |

* வார நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:-மன்று,
இல.19,சரவண வீதி,
கல்லடி,மட்டக்களப்பு.
தொ.பேசி: 065-22500


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.